24 மணிநேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 170 வைகாசி 03ஆம் நாள் வெள்ளிக்கிழமை 17 மே 2019 வள்ளுவர் ஆண்டு 2050

# ஐ.எஸ். அமைப்புடன் இணைந்து சிரியாவில் இலங்கையர் பயிற்சி

## பொலிஸ் விசாரணைகளில் திடுக்கிடும் தகவல்கள்

கொழும்பு, மே 17
சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்புடன் இணைந்து மூன்று இலங்கையர்கள் பயிற்சி பெறுகின்றனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. இலங்கைக்கு அவர்கள் அண்மையில் அனுப்பியதாக கூறப்படும் சுமார் 40 இலட்சம் ரூபா பணம் குறித்தும் சிறப்பு விசாரணைகளை பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு ஆரம்பித்

07

## நல்லூருக்கு அச்சுறுத்தலா?

### விரைந்து விசாரிக்க ஆளுநர் உத்தரவு

யாழ்ப்பாணம், மே 17
நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளதா என்று விரைவான, விரிவான விசாரணையை நடத்தி அறிக்கை வழங்குமாறு வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்

07

## முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக்கு நாளை வழிபாடு!

முல்லைத்தீவு, மே 17
முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக்கு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை வழிபாடுகள் நாளை இடம்பெறவுள்ளன.
வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பு சகாய

18

# மே 18 நினைவேந்தல்களுக்கு தமிழர்களுக்கு உரிமையுண்டு

## இராணுவத்தால் இடையூறு இருக்காது என இராணுவத் தளபதி நேற்றுத் தெரிவித்தார்

யாழ்ப்பாணம், மே 17
மே 18 நினைவேந்தலைக் கடைப்பிடிக்க தமிழ் மக்களுக்கு முழுமையான சுதந்திரமும் உரிமையும் உண்டு. அவர்களால் மேற்கொள்ளப்படும் நினைவேந்தலுக்கு இராணுவம் எவ்வித இடையூறும் கொடுக்காது என்று தெரிவித்தார் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க.

சமாதானத்தின் தசாப்த நிறைவு தினம் என்ற பெயரில் போர் வெற்றிக் கொண்டாட்டங்கள் இந்த முறையும் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படவுள்ளமையை முன்னிட்டு கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்தாவது:

18

## யார் என்ன சொன்னாலும் இலங்கை பௌத்த நாடே!

### சாகல ரத்னாயக்க இறுமாப்பு

கொழும்பு, மே 17
இலங்கை பௌத்த நாடாகும். கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உட்பட அனைவரும் இதனையே கூறுகின்றார்கள். அதனை நாம் அனைவரும் ஏற்றுக்

18

## ரிசாத்துக்கு எதிரான பிரேரணை நிராகரிக்கப்பட அதிக வாய்ப்பு!

### ஆரம்பத்திலேயே சொதப்பியது பொதுஎதிரணி

கொழும்பு, மே 17
அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நிராகரிக்கப்படக்கூடிய சாத்தியங்கள் காணப்ப

18

see more news in newuthayan.com

## பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுப் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 17
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர், செயலர் மற்றும் மருத்துவ பீட சிற்றுண்டிச் சாலை நடத்துனர் ஆகிய மூவரையும் தலா ஒரு இலட்சம் ரூபா ஆள் பிணையில் விடுவித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த 3ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது, தமி



08

# ரிசாத்துக்கு எதிரான பிரேரணை சபாநாயகர் கருவிடம் கையளிப்பு

கொழும்பு, மே 17
நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரரின் தலைமையில் பொது எதிரணியினரின் ஆதரவுடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்

18



# நம்பிக்கையில்லா பிரேரணையில் மகிந்த கையொப்பம் இடவில்லை

கொழும்பு, மே 17
அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக சபாநாயகர் கருஜயசூரியவிடம் பொது எதிரணியினரால் நேற்றுக் கையளிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையின் பிரதிகள் வெளியாகியுள்ளன.
ரிசாத்துக்கு எதிராக 10 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு இந்தப் பிரே

18

# இணைந்த வடக்கு - கிழக்குதான் சிறுபான்மையினரின் பாதுகாப்பு

## சிவமோகன் எம்.பி தெரிவிப்பு

வவுனியா, மே 17
இணைந்த வடக்கு - கிழக்கு சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு. இதை முஸ்லிம்கள் உணர வேண்டும் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன்.
இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ் தாக்குதலின் பின் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்

18

DFCC தங்கவரம்
தங்க நகை அடகுச் சேவை
இப்போது முற்பணத்தை நாம் மேலும் அதிகரித்துள்ளோம்!
கரட் 24 ரூ. 48,000/-
கரட் 22 ரூ. 45,000/-
இச் சேவையைப் பெறுவதற்கு அருகிலுள்ள DFCC வங்கிக் கிளைக்கு இன்றே வாருங்கள்.
DFCC வங்கி



# செல்வம் பெருக
## மாதுளம் அர்ச்சனை



லட்சுமி தேவியின் அருள் இருந்தால் மட்டும் செல்வம் பெருகும் என்று நமது முன்னோர்கள் அடிக்கடி நம்மிடம் கூறுவதுண்டு. நமது வீட்டில் லட்சுமி கடாஷம் அதிகரிக்க பழ வர்க்க அர்ச்சனை செய்தால் விரைவில் நல்ல பயன் வந்து சேரும் என்பது ஐதீகமாகும். மாதுளம் பழம் செல்வ மகளான லட்சுமி தேவியின் அம்சம் நிறைந்ததாக கருதப்படுகிறது.
அந்த மாதுளம் பழங்களை கொண்டு லட்சுமி தேவிக்கு அர்ச்சனை செய்து வழிபடும் ஒரு முறை தான் பழ வர்க்க அர்ச்சனை முறை. இந்த அர்ச்சனை செய்வதனால் என்ன பயன் கிடைக்கும் என்பதை பார்ப்போம்.

**எவ்வாறு செய்வது?**
திங்கள் மற்றும் வெள்ளிக் கிழமையில் அதிகாலையில் எழுந்து, குளித்து முடித்து விட்டு காலை 7 மணிக்குள்ளாக இந்த பழ வர்க்க அர்ச்சனை பூசையை செய்து விட வேண்டும். சுத்தமான சில மாதுளம் பழங்களை எடுத்துக் கொண்டு அதை உரித்து, மாதுளை பழங்களின் மணிகளை ஒரு தூய்மையான பாத்திரத்தில் போட்டுக் கொள்ள வேண்டும். பின்னர் 27 அல்லது 108 சுத்தம் செய்யப்பட்ட சில்லறை நாணயங்களை அந்த மாதுளம் பழ மணிகள் இருக்கும் பாத்திரத்தில் போட்டு நன்கு கலக்கி கொள்ள வேண்டும். ஒரு தாம்பாளத் தட்டில் லட்சுமி தேவியின் சிறிய சிலை அல்லது படத்தை வைத்து, வாசமுள்ள மலர்கள் கொண்டு லட்சுமி தேவிக்கு அலங்காரம் செய்ய வேண்டும். பின்பு பூசை அறையில் இருக்கும் சிறிய அளவிலான விநாயகர் சிலை அல்லது படத்திற்கு தீபமேற்றி, அவருக்குரிய மந்திரங்கள் துதித்து வணங்கிய பிறகு, பாத்திரத்தில் இருக்கும் ஒவ்வொரு சில்லறை நாணயங்களுடன் சிறிது மாதுளம் பழ மணிகளை சேர்த்து, லட்சுமி தேவியின் சிலை அல்லது படத்திற்கு லட்சுமி மந்திரங்களை துதித்தவாறு அர்ச்சனை செய்ய வேண்டும். லட்சுமி தேவிக்கு இந்த மாதுளம் பழ வர்க்க அர்ச்சனை செய்து முடித்த பிறகு, அந்த மாதுளம் பழங்களை உங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள குழந்தைகளுக்கும் உங்கள்வீட்டில்உள்ளகுழந்தைகளுக்கும் பிரசாதமாக தர வேண்டும். நன்மைகள் இந்தப் பழ வர்க்க அர்ச்சனை செய்து மகா லட்சுமியை வழிபடுவதால் வீட்டில் லட்சுமி கடாட்சம் உண்டாகும். மேலும் உங்கள் செல்வ நிலை உயரும். குடும்பத்தில் பொருளாதார மேன்மை, மகிழ்ச்சி, மனநிறைவு ஏற்படும். இந்த பழ வர்க்க அர்ச்சனை வழிபாட்டை வாழ்நாள் முழுவதும் செய்து வருபவர்களுக்கு வறுமை நிலை என்றும் அணுகாது.

# கடனில் இருந்து மீள
## ஆன்மீக பரிகாரம்



இன்றைய மக்கள் பெரும்பாலும் கடனாளியாக வாழ்ந்து வருகின்றனர். நாளுக்கு நாள் வாழ்க்கைச்சுமை அதிகரிக்க அதிகரிக்க நமது பணத் தேவையும் அதிகரித்து கொண்டே செல்கின்றது. அதன் காரணமாக நாம் பிறரிடம் பணம் கடன் வாங்கும் சூழ்நிலையும் ஏற்பட்டு விடுகின்றது. அந்தவகையில் கடன் பிரச்சினையிலிருந்து விடுபட சில ஆன்மீக குறிப்புகளும் உதவி புரிகின்றது


- மகா லட்சுமியை கொண்டு கல் உப்பு வாங்கி வந்து உப்பு பாத்திரத்தில் போடவும். இதை ஒவ்வொரு வாரமும் செய்துவர வீட்டில் மகா லட்சுமி வரவுக்குக் குறைவே இருக்காது.
- வெள்ளிக்கிழமை காலை 6- 7 மணிக்கு 5 வெற்றிலை 5 கொட்டை பாக்கு 5 ஒரு ரூபாய் நாணயம் அனைத்தும் பூசையில் வைத்து லக்ஷ்மி வழிபாடு செய்து, பின்பு அனைத்தையும் ஒரு தாளில் மடித்து வைக்கவும். பின்பு அடுத்த வாரம் செய்யும் பொழுது மேற்கண்டதை ஒரு உண்டியலில் போட்டு வைக்கவும். இப்படியே 14 வாரங்கள் செய்து முடிந்ததும் நாணயங்களை எடுத்து கொண்டு மற்றதை கடலில் அல்லது ஓடும் ஆற்றில் போட்டு விடலாம்.
- வளர்பிறையில் வரக்கூடிய திரிதியை (திரிதியைமகாலட்சுமி) அன்று அன்னதானம் செய்தால் கடன் பிரச்சனை மற்றும் பண பிரச்சனைகள் முடிவுக்கு வரும்.
- எவ்வளவு பணம் வந்தும் சேமிக்க முடியவில்லை என கவலையில் உள்ளோர் தங்களின் உடைகள் வைக்கும் பீரோ மற்றும் பணம் வைக்கும் இடங்களில் கருநீல துணியை விரிப்பாக உபயோகித்து வர பணம் தேங்கும்.
- பண பிரச்சனைகளால் மிகுந்த அவதிக்கு ஆளானோர், ஒரு வெள்ளியன்று யாரும் பார்க்காத நேரத்தில் வேப்ப மரம் ஒன்றில் (மரத்திடம் மானசீக மன்னிப்பு கோரி) சிறிய துளையிட்டு அதில் சிறிய சதுர வடிவ வெள்ளியை வைத்து பின்பு மூடி விடவும். முன்னேற்றம் பின்பு கண் கூடாக தெரியும்.
- நல்ல சம்பாத்தியம் இருந்தும் பணம் வீண் விரயமாகி கொண்டே இருந்தால் தினமும் காலை வேளையில் பறவைகளுக்கு இனிப்பு பிஸ்கட்கள் வழங்க வீண் விரயம் கட்டுப்படும்.
- காலை எழுந்ததும் தங்க நாணயம் அல்லது தங்கங்கள் நிறைந்த படம், ரூபாய் நோட்டுகள் நிறைந்த படம் ஒன்று பார்த்து வர செல்வ வளம் பெருகும்.
- வீட்டை சுற்றி நீரோட்டங்கள் இருந்தாலோ செயற்கையாக அமைத்து கொண்டாலோ பண புழக்கம் உடனடியாக உயரும். கடுகு எண்ணெய் கிரகங்களில் செவ்வாயை வலுப்படுத்த மிகவும் உதவும்.
- கடன் கொடுத்தோ, பெற்றோ அவதிப்படுவோர் கட்டாயம் கடுகு எண்ணெய்யில் உணவு சமைத்து சாப்பிட நன்மை உண்டாகும்.
- காலை வேளையில் குளித்து முடித்தவுடன் சிறிது சர்க்கரை எடுத்து வீட்டு வாசல் வெளியே தூவி வரவும். இது சிறு பூச்சிகள் மற்றும் எறும்புகளில் உணவாகும். இவைகள் உண்ண உங்கள் கஷ்டங்கள் சிறிது சிறிதாக விலகுவது உங்கள் கண் கூடாக தெரியும்.

# தீய சக்தியை விரட்டியடிக்கும் உப்பு

உப்பை செல்வத்தை அள்ளி தரும் தேவதையான மஹாலட்சுமியுடன் ஒப்பிடுவார்கள். நீரில் தோன்றி, நீரிலேயே கரைந்து போகும் உப்பு நம் ஆத்மாவை போன்றது. கடலில் நீராடுவது சகல தோஷங்களையும் நீக்கும் என்பது நம்பிக்கை. இன்றும் திருஷ்டி கழிக்க, உப்பு சுற்றிப்போடுவது நடைமுறையில் உள்ள ஒரு வழக்கமாகும். உப்பு கெட்ட சக்திகளை நம்மிடமிருந்து விரட்டி, கெட்ட அதிர்வுகளை எதிர்க்கும் ஆற்றல்கொண்டது.
வெள்ளிக்கிழமை வீட்டில் உப்பு வாங்கி வைத்தால் செல்வம் சேரும் என்று நம் முன்னோர்கள் சொல்வார்கள். அதாவது வெள்ளிக்கிழமையன்று உப்பு வாங்கினால் பணம், சொத்துக்கள் உள்ளிட்ட செல்வங்கள் சேரும் என்று அர்த்தமாகும்.
நாம் எல்லோரும் நம்மை சுற்றியும் நாம் வசிக்கும் இடத்திலும் தீய சக்திகள் இருப்பதை விரும்பமாட்டோம். இது தேவையில்லாத மன அழுத்தம், பதட்டதை அதிகரிக்க செய்யும். மேலும், இதனால் வீட்டில் ஏழ்மை நிலை ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.

**உப்பு நம் வாழ்க்கையில் ஏற்படுத்தும் மாற்றங்கள்**
உப்பை பயன்படுத்தி இந்த நிலையை மாற்ற சில வழிகள் இருக்கின்றன. வீட்டில் இருக்கும் ஏழ்மை நிலை விலகி செல்வ செழிப்போடு வாழ வழி வகுக்கும்.

1 இம்முயற்சியை ஞாயிறுகளில் மட்டும் செய்ய வேண்டாம். இந்த முயற்சியை செய்ய நீங்கள் கடல் உப்பை நீருடன் கலந்து அதை வீட்டை முழுக்க கழுவ வேண்டும். இது வீட்டில் இருக்கும் எதிர்மறை எண்ணங்கள் அனைத்தையும் நீக்கி விடும்.
2. ஒரு டம்ளர் நீரில் ஒரு சிட்டிகையளவு உப்பு சேர்த்து அதை வீட்டின் தென் மேற்கு மூலையில் வைத்து விடவேண்டும். இது வீட்டில் இருந்து ஏழ்மையை விலக செய்யும்.
3 உள்ளங்கையளவு உப்பு எடுத்து அதை ஒரு கிண்ணத்தில் போட்டு அதை குளியலறையின் ஒரு மூலையில் வைத்துவிடவும். இந்த உப்பை சீரான இடைவேளையில் நீங்கள் மாற்ற தவறக் கூடாது. இது வீட்டில் இருக்கும் எதிர்மறை சக்தி குறைந்து, ஏழ்மை நீங்க உதவும்.
4. சிவப்பு துணியில் உப்பு சேர்த்து கட்டி வைக்கவும். அதை வீட்டின் நுழை வாயில் பகுதியில் கட்டி தொங்கவிடவும். இது வீட்டுக்குள் இருக்கும் கெட்ட சக்தி நீங்கவும், நல்ல அதிர்வுகள் நிறையவும் உதவும்.
5. சாப்பிடும் இடத்தில் உப்பு வைப்பது செல்வசெழிப்பு அதிகரிக்க உதவும். வீட்டில் செல்வம் நிறைந்து இருக்க உதவும்.
6 குளிக்கும் டப்பில் ஒரு கைப்பிடிகடல் உப்பு சேர்த்து 20 நிமிடங்கள் குளிப்பதால், கெட்ட சக்திகள் நீங்குவதை உணர முடியும்.



# சித்தன்கேணி பெரியவளவு
# மஹா கணபதிப்பிள்ளையார் இரதோற்சவம்
## சிறப்புமலர் – 17.05.2019

**17.05.2019 காலை 9.00 மணிக்கு வைகாசி விசாக நட்சத்திரத்தில் நடைபெறும்.**

### ஆலய வரலாறு

சித்தங்கேணிச் சந்தியில் வீற்றிருக்கும் பிள்ளையார் மிகவும் பழமையும் புதுமையும் வாய்ந்தவர். இவரை நம்பினோர் சீரும் சிறப்பும் பெற்று பெருவாழ்வு வாழ்வார்கள். கும்பிட அவசரப்படுதல், அலட்சியம். தவறுகள் செய்தால் ஒருகுலுக்குக் குலுக்குவார். அவ்வளவு தான்.

தாகம் தீர தண்ணீரை அள்ளி அள்ளி கொடுக்கிறது இங்குள்ள கிணறு (நிலாவரை போல)

இக்கோயிலுக்கு அருகில் மேற்குப் பக்கத்தில் பரந்த நிலப்பரப்பில் காசியர் என்னும் காசிநாதர் வாழ்ந்து வந்தார். ஒருமுறை இவரின் புகையிலை நன்றாக வரவில்லை கவலைப் பட்டார். அன்று இரவு யானை ஒன்று வந்து புகையிலையை உலுக்கி அடித்து மலசலம் கழித்து சென்றது. இதனால் மிகவும் மனம் வருந்தினார். ஆனால் நல்லவாசம். தரமானது என அதிக விலை கொடுத்து வாங்கினார்கள்.

பேரானந்தமடைந்த இவர் பிள்ளையாருக்கு கோயிலை கட்டி பெரியவளவு என்பதால் பெரியவளவான் என வணங்கினார்.

காசிநாதர் (காசியர்)
↓
சபாபதி
↓
கதிரவேலு — பொன்னம்பலம் — அப்புத்துரை
↓ இராசம்மா (மெத்தை வீடு) — சபாபதி — காசிநாதர்
↓ அருணாசலம்

**இவரின் வழித்தோன்றலாகிய**

பொன்னம்பலம் வசந்த மண்டபத்தையும் தேரையும் கட்டுவித்தார். ஆனால் பிள்ளைகளின் பராமரிப்பு இல்லாததால் தேர் பழுதாகி ஓட முடியாமல் போய்விட்டது.

1937 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் இருந்த காசிநாதர் பணம் அனுப்பி தேரை கட்டுவித்தார். மெத்தை வீட்டில் அக்காவுடன் தாயும் தம்பி அருணாசலமும் இருந்ததால் தேர் வேலையை செய்வித்தார். 42 நாள்களில் குறைந்த செலவில் அழகான தேர் கட்டப்பட்டது.

இந்தக் காலத்தில் ஸ்ரீலஸ்ரீ குமாரசாமிக்-குருக்கள் இருந்தார். இவருக்கு உதவியாக பஞ்சயுதர்கள் இருந்தார்கள். வைகாசி விசாக நட்சத்திரத்தில் பின்னேரம் இரதோற்சவம் நடைபெறும். 1960 இல் குருக்கள் சிங்கப்பூர் சென்று பணம் சேகரித்து ஓவியங்கள். சிற்பங்கள் செய்வித்து கோயிலை அழகுபடுத்தி-னார். உள்வீதியில் பஞ்சபுராணமும் எழுதப்பட்டது.

கும்பாபிஷேகத்தின் போது மூலஸ்தானத்தில் இருந்த பிள்ளையார் மாறியது. பின் யாகமண்டபத்தில் வைத்து பலர் அர்ச்சனை செய்து வணங்குகிறார்கள்.

1970 ஆம் ஆண்டு ச.நிற்சிங்கம்(பெறாமகன்) முதன் முதல் பரிபாலன சபையை உருவாக்கி 1977 ஆம் ஆண்டு வரை தலைவராக இருந்தார்.

1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இனக் கலவரத்தின் போது முன் கேணிக்கு அருகில் இரவு ஒரு கார் எரிக்கப்பட்டது. அடுத்த நாளும் சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்தது. ஒரே கடும் புகை மண்டலம். அருகில் தேர் 6 மாதம் (வெய்யில். மழை) சருகு போல கிடுகு உக்கி இருந்தது.

என்ன அதிசயம். தேர் அப்படியே இருந்தது. 2015 ஆம் ஆண்டு. கும்பாபிஷேகம் நடைபெற்றது. உள் மண்டபத்தில் உள்ள விநாயகர் சிற்பங்கள் கவலைகள் தீர வருக. வருக என அழைப்பது போல காட்சியளிக்கிறது.

**மேலும் இந்த ஆலயத்தில் நடைபெற்ற அற்புதங்களில் ஒன்று**

ஒரு நாள் இரவு ஒரு மணியளவில் ஓர் மனிதன் இப்போ செய்கிற தேரடியில் நின்றாராம். ஐந்து சிற்பாசாரியார்கள் கண்டவர்கள் இவர்கள் ஐந்து ஆறுமுறை கூப்பிட்டும் மறுமொழி கிடைக்கவில்லை. கடைசியில் அம்மனிதன் கோயில் வாசலுக்குப் போய்த் திருக்குளத்திலிறங்கி மறைந்து விட்டார். பின் ஒருவரும் அவரைக் காணவில்லை. எம் பெருமானுடைய திருவிளையாட்டென்றே சொல்லுகிறார்கள்.

**அவனருளாலே அவன்தாள் வணங்கு**

**க,காசிநாதன் குடும்பத்தினர்.**
**தேர்த்திருவிழா உபயகாரர்.**

## கேள்விஅறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாநகர சபை
## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை(PSDG)- 2019

01. யாழ்ப்பாணம் மாநகரசபையின் பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.

02. கேள்வியானது தேசிய போட்டிவிலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA). கட்டட நிர்மாணத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு.பொதுநிதி சுற்றறிக்கை. இல.04/2016(i)ற்கு அமைவாக இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காதபட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.

04. தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் ஆணையாளர். மாநகர சபை. யாழ்ப்பாணம் (தொலைபேசி இல – 021 2216468. 021 2222019) என்னும் முகவரியிலிருந்து 17.05.2019ம் திகதியில் இருந்து 06.06.2019 ஆம் திகதிவரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2.000.00 மற்றும் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை. பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து ஆணையாளர். மாநகர சபை. யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 07.06.2019 ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 77 நாள்களுக்கு (23.08.2019வரை) செல்லுபடியாகும்.

08. கேள்விப் பிணைவைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

09. கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம். மாநகர சபை. யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 28.05.2019 அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.

10. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வரி நீங்கலாக) | ஒப்பந்தக் காலம் (மாதம்) | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லு படியாகும் காலம் |
| 1 | JMC/WD/PSDG (Bu)/2019-81 | Reconstruction of Passaiyoor New Fish Market | 2.284 | 3 | C8 | 23,000.00 | 20.09.2019 |
| 2 | JMC/WD/PSDG (Ro)/2019-82 | Improvement of Manaltharai Lane, Jaffna | 6.793 | 3 | C7 | 68,000.00 | 20.09.2019 |

**ஆணையாளர்,**
**பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவர்**
**மாநகர சபை,யாழ்ப்பாணம்.**

**16.05.2019**

## சேவைநலன் பாராட்டு

எமது வித்தியாலய விஞ்ஞான பாட ஆசிரியர்

**திரு.பொன்னையா யோகராசா (S.L.T.S-I)**



**சேவை விபரம்:**

- கிளிநொச்சி மாவட்டம் 14.12.1987 - 14.05.2007
- யாழ். மாவட்டம் 15.05.2007 - 31.07.2014
- யா/எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேச வித்தியாலயம் 01.08.2014 - 16.05.2019

**முப்பத்தொரு ஆண்டுகள் (31) அரும்பணி செய்து இன்று (17.05.2019) வெள்ளிக் கிழமை ஓய்வுபெறும்**

வேளை சீரான வளவாழ்வு தொடர இறையருளை வேண்டி அவரின் மகத்தான சேவைதனை உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்

**யா/ எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேச வித்தியாலயம்**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
03.07.1927



உதிர்வு
28.05.2018

### திருமதி நாகரத்தினம் நீலகண்டன்

ஆண்டு ஒன்று ஆனதம்மா - ஆனாலும்
இவ்வுலகில் நீ மாண்டுவிட வில்லையம்மா
எங்கள் மனதில் என்றும் நீங்கள்
உயிர்ப்புடன் இருக்கின்றீர்கள்

**2 ஆம் குறுக்குத்தெரு,**
**பருத்தித்துறை.**

(nc .838) (13.17)

**குடும்பத்தினர்**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் தியாகராசா கனகசபாபதி
(இ.போ.ச.ஓய்வுபெற்ற லிகிதர்)

பிறப்பு 04.09.1942 — இறப்பு 17.04.2019

நாள்கள் முப்பத்தொன்று ஆனதுவோ
உங்கள் முகம் காணாது ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
உம்மைகாக்க உழைத்தோம் முடியவில்லை
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் நினைவுகளைச் சுமந்து
**உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்**

**130, லவ் லேன்,**
**உடுவில்.**

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(CS/25396/II.17)

## மரண அறிவித்தல்



### செல்வநாயகி குமாரசாமி (K.V.K ஆச்சி)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் இலண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகி குமாரசாமி 14.05.2019 செவ்வாய்க்கிழமை இலண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - பொன்னம்மாள் (பொன்னார்) தம்பதியரின் ஏகபுத்திரியும், காலஞ்சென்றவர்களான "மட்டக்களப்பு" கா. வயித்திலிங்கம் முதலியார் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கா.வ.குமார்சாமி (K.V.K) யின் அன்பு மனைவியும், விஜயசுந்தரம், விஜயராணி (இலண்டன்), விஜயரட்ணம் (ஓய்வு பெற்ற விமானப்படை அதிகாரி), விஜயதேவி, விஜயாம்பாள் (சுவிஸ்லாந்து), விஜேந்திரன், பரிமளாதேவி (இலண்டன்), காலஞ்சென்றவர்களான விக்கினராஜா, விஜயலட்சுமி, ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான சண்முகரத்தினத்தின் அருமைச் சகோதரியும், மங்கயற்கரசி, தனபாலசிங்கம் (இலண்டன்), சிறிவிஜயா, கரன், சிறீதரன் (சுவிஸ்லாந்து), அனுராதா (மருந்தாளர், ஆதார வைத்தியசாலை - ஊர்காவற்றுறை), இரத்தினராஜா (இலண்டன்), இரத்தினவேல் (மனித உரிமைச் சட்டத்தரணி), இரத்தினாம்பாள் (இலண்டன்), காலஞ்சென்ற செல்வரத்தினம் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**தகவல்: மகன்மார்கள்:**

**"விஜய வாசம்"**
**மாதர்சங்க ஒழுங்கை**
**சித்தன்கேணி**

**விஜயசுந்தரம் - (சங்குவேலி - 021 225 5418)**
**விஜயரட்ணம் - (கொழும்பு - 077 111 2054)**
**லயன். விஜயேந்திரன் - (சித்தன்கேணி - 077 172 8141)**

## Invitation for Bids (IFB)

1. The Chairman Department Procurement Committee on behalf of the Palmyrah Development Board invites sealed bids from eligible and qualified bidders for Construction of boundary wall (730 Feet), at Karainagar in Jaffna District as described below and estimated cost **2.5 Mn**. The construction period is **90 days**.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered having registered office within the Northern Province in the field of Building Construction for grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (CIDA/ICTAD).
4. Qualifications requirements are indicated in section 1 item 5 of the Bidding document. Additional details are provided in the schedule (Volume -02)
5. Interested bidders may obtain further information from **The Chairman, Palmyrah Development Board, NHDA building, Kandy road, Jaffna** (Tel. 021-2222034, or fax 0212224154 or E-Mail to **slpdbho@yahoo.com** and inspect the bidding documents at the same address on any working day from **17/05/2019 at 9.00 hrs to 15.00 hrs on or before 06/06/2019-2.30 pm**.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the The Chairman, Palmyrah Development Board, NHDA building, Kandy road, Jaffna from **17.05.2019 until 06.06.2019 from 9.00 hrs to 14.30 hrs** upon payment of non-refundable fees of Rs.2,000.00 for each bid. The method of payment should be by cash.
7. Bids shall be delivered in duplicate to the address below at **The Chairman, Palmyrah Development Board, NHDA building, Kandy road, Jaffna** on or before **06/06/2019-2.30 pm**. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. The validity should be offered for 60 days from the time of opening of bids.
9. All bids shall be accompanied by a Bid-Security in LKR, of **Fifty thousand (50,000)** Bid Security shall be valid up to **3rd of September 2019**.

| Bid Code | Narration of the works | Total estimated amount in LKR | Required ICTAD /CIDA Grade | Bid Bond in LKR |
|---|---|---|---|---|
| PDB/2019/ CAP/PRO/ 33 | Construction of boundary wall (730 Feet), at Karainagar in Jaffna District | 2.5Mn | C8 or above | 50,000/- |

Any expenses arising on the preparation of bid document and submission should not be reimbursed.

**The Chairman,**
**Department Procurement Committee,**
**Palmyrah Development Board,**
**First floor**
**NHDA Building,**
**Kandy Road,**
**Jaffna,**
**Sri Lanka.**

## மரண அறிவித்தல்

### இளையதம்பி சுப்பையா



கரம்பொன் மேற்கு, ஊர்காவற்றுறையைப்பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சுப்பையா 12.05.2019 ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமானார்.

காலஞ்சென்றவர்களான க. இளையதம்பி மீனாச்சி தம்பதியினரின் புத்திரனும் திரு. திருமதி விநாயகமூர்த்தி தம்பதியினரின் மருமகனும் ஞான சோதியின் அன்புக்கணவரும் அபயகரன் ஜனகன், தேவகி, வைதேகி, கற்பகவல்லி மாதவரமணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி அருள்மலர் காலஞ்சென்ற ஸ்ரீதர் மற்றும் சுவர்ணன் சிவகுமார் ஆகியோரின் மாமானாரும் காலஞ்சென்ற கமலாதேவி - சிவசம்பு, இ. நடராசா மற்றும் குணமணி சபாரட்டினம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.


அன்னாரின்இறுதிக்கிரியைகள்இந்தியாவில்கடந்த(13.05.2019) திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு :**
**கற்பகா சிவகுமார் (லண்டன்) 079 038 888396**

**தகவல்: மருமகள்**
**யோகேஸ்வரி (சிறி விஜயா)**
**0775176158**

## மரணஅறிவித்தல்

### வைரமுத்து ஏகாம்பரம்



தையிட்டிபுலம் தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து ஏகாம்பரம் 16.05.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2019) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 21 . 10 . 1973

மறைவு 17 . 04 . 2019

கடந்த 17.04.2019 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவன்

## அமரர் நாகச்சந்திரன் சிவச்சந்திரன்

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 19.05.2019 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறஉள்ளதால் அத்தருணம் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

**கதிரைமலை வீதி (இலங்கை வங்கி முன்பாக)**
**சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.** (CS 23742)(14.17)

குடும்பத்தினர்.

# நீங்காத நினைவில்

## 29ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி நர்மதா கனகரட்ணராஜா

(முன்னாள் ஆசிரியை, யா/ மெமோறியல் ஆங்கில பாடசாலை)

வையகத்துள் அறிமுகம் 26.03.1964

தெய்வத்துள் சங்கமம் 07.06.1990

திதி:- சதுர்த்தசி (17.05.2019)

எங்கள் அன்பின் திருவுருவே பாச தீபமே!
ஆசையின் மணி விளக்கே!
பாசத்தின் பிறப்பிடமே! குடும்பத்தின் ஒளிவிளக்கே!
எங்கள் குடும்பத்தில் முதல் பிறந்த முத்தான முத்தே!
எம்மை எல்லாம் ஆறாத் துயரில் விட்டு விட்டு
மீளாத் துயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே!
எத்தனையோ உறவுகள் இருந்தாலும் அம்மா
என்று சொல்ல உங்கள் உயிர் இல்லையம்மா!
ஆண்டுகள் இருபத்தொன்பது சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாதம்மா!

உங்கள் பிரிவால் துயருறும்
அம்மா, மாமாமார், மாமிமார், சித்திமார், சித்தப்பா, தம்பிமார், தங்கைமார்.

சந்தையடி, மானிப்பாய்.

# மரண அறிவித்தல்

## உமாராணி பொன்னம்பலம் (ராணி)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட உமாராணி பொன்னம்பலம் 12.05.2019 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான தம்பு - சின்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பொன்னம் பலத்தின் CEB மனைவியும், காலஞ்சென்ற சத்தியமூர்த்தி மற்றும் இரஞ்சிதாதேவி (மலர் - U.K), உருத்திரேஸ்வரன்,பொன்மதி (புஸ்பம்), வியஜன் (U.K) ஆகியோரின் சகோதரியும், உமாகாந்தன் (கனடா), கஜனி (U.K), நளினி (U.K) ஆகியோரின் தாயும், பிரசல்ஜா - செல்லா (கனடா), ராஜ்பால் (பொடி - U.K), கோடீஸ்வரன் (U.K) ஆகியோரின் மாமியும், சந்திரா (கனடா), சட்டத்தரணி விஜயராணி, சிவாஜினி (U.K), பாலசுப்பிரமணியம் (U.K) ஆகியோரின் மைத்துனியும், உதாசா, சங்கரி, ஹரிஸ், திமேஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.05.2019 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**125/2, ஏ.வி. றோட்,**
**அரியாலை.**

**தகவல்**
**குடும்பத்தினர்**

**077 693 5280, 077 645 0227, 0044 7405 3990 98**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஞானாம்பிகை மகாதேவன்



பிறப்பு 03.06.1933

இறப்பு 15.05.2019


இல 29. ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் வசித்த திருமதி ஞானாம்பிகை மகாதேவன் கடந்த (15.05.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்வர்களான நடராசா வடிவம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அப்பையா முத்தாச்சி தம்பதியினரின் ஆசை மருமகளும் காலஞ்சென்ற மகாதேவனின் (உதவிப்பதிவாளர், நீதிமன்றம்) அன்பு மனைவியும் ரவீந்திரன் (ஓய்வுநிலை ஆசிரியர், சென்ஜோன்ஸ் கல்லூரி, இயக்குநர் ஆர்.ஜே கல்வி நிலையம்), சுரேந்திரன் (பொறியியலாளர், ஒஸ்லோ பல்கலைக்கழகம்), இந்திரகுமாரி (ஜெயந்தி), ஞானேந்திரன் (இயக்குநர் நிலாந்தன் English Work Shop) மகாஇந்திரன் (பொறியியலாளர், ஒஸ்லோ பல்கலைக்கழகம்) ஆகியோரின் ஆசை அன்னையும் புஸ்பலதா, மீரா (நோர்வே), சுந்தரகுமார் (பொறியியலாளர் - பிரதிப்பணிப்பாளர் கட்டடத்திணைக்களம்), விஜயா (ஆசிரியர், கோண்டாவில் இராம கிருஸ்ண மகாவித்தியாலயம்), யூடி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் தேஜஸ்வர் (ஆசிரியர், சென்ஜேன்ஸ் கல்லூரி), பிரகதீஸ்வர் ( சேவை நிர்வாகி, யுனைட்டட் மோட்டர்ஸ், நாவற்குழி), லோகதீஸ்வர் (யாழ்.பல்கலைக்கழக 3ஆம் வருட கலைப்பிரிவு) யுகதீஸ்வர் (A/L) சென்ஜேன்ஸ்கல்லூரி), ஆர்த்திகா - கௌதம் (நோர்வே) , நேதாஜி, (I.T பெறியியலாளர் - UK) பிருதிவி - பிரதீப் (பொறியியலாளர்கள் Castle Engineering Consultance Services), சத்யா (Gr.9 சுண்டிக்குளி மகளிர்கல்லூரி), யுனித்தா (நேர்வே), ஜீனு (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இனியாவின் (நோர்வே) அன்புபூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29/1.ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் உள்ள அவரது இல்லத்தில் (19.05.2019) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 100 மணியளவில் கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்தஅறிவித்தலைஉற்றார்,உறவினர்,நண்பர்கள்அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

**ரவீந்திரன் - 077 658 9391**
**ஜெயந்தி - 077 625 5069**
**விஜயா - 077 706 9324**

**தகவல்: குடும்பத்தினர்.**



## புண்ணியமூர்த்தி தெய்வேந்திரன்

**(ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர் - சாவகச்சேரி)**

முதலியார் வீதி அரியாலையைப் பிறப்பிடமாகவும் நல்லூர் செம்மணி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட புண்ணியமூர்த்தி தெய்வேந்திரன் கடந்த (14.05.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான புண்ணியமூர்த்தி இரத்தினம் தம்பதியினரின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் செல்வநாயகி தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சத்தியகலாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற பாலச்சந்திரா மற்றும் வரதலட்சுமி, இந்திராணி, பத்மலோஜினி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ரூபநிஷாந்தினி, காயத்திரி (பிரான்ஸ்), பிரசாத் (பிரான்ஸ்), நளின்காந் (யாழ் ஒளி மின் நிலையம் சுன்னாகம்), சத்தியேந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகுதந்தையும் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி, அம்பிகாவதி, கமலநாதன்மற்றும் விமலநாதன், சிவநாதன், இரத்தினநாதன், சகுந்தலா, நித்தியகலா, இரத்தினகலா, சசிகலா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2019) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.00 மணியளவில் சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 844 8079**



# சுழிபுரம் – பறாளாய் ஸ்ரீ சிவசு

# தேர்த்திருவிழ

## இன்று (17.05.2019

நாளை (18.05.2019) சனிக்கிழ
(24.05.2019) வெள்ளிக்க

### அருள்மழை பெ



கலியுக வரதன், கண் கண்ட தெய்வ
பறாளையம்பதியிலே. தேர் வடம் பிடி
இலங்காபுரியின் வடபால் அமைந்த
மேற் திசையில் சகல வளங்களு
சுழிபுரம். இதன் நான்கு பக்கமும்
மருதம் எனப்படும் பறாளை யம்பதியிலே அ
பொழியும் ஆனைமுகன். ஆறுமுகன் ஆலயங்
ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா சிறப்பாக நட
தலம், தீர்த்தம் இம் மூன்றும் ஒருங்கே அ
ஆலயத்திற்கு நித்திய, நைமித்திய பூசைக
பெறுகின்றன. வைகாசி பூரணையை தீர்த்தமா
தினங்கள் உற்சவம் நடைபெறுகின்றது. இ
லிருந்து சுழிபுரம் கிராமமே ஓர் புனிதமா
தினங்களும் ஊர் மக்கள் முருகனை நினைத்து

### ஆனந்தம் தந்திட தேர் ஏறிவருகின்றான்

சகல செல்வங்களும் நிறைந்த சுழி புரப் பதியில் வந்த வினையும் வருகின்ற வல்வினையும் போக்க வல்ல பறாளாயம் பதி முருகன் இன்று தேர் ஏறிவருகின்ற கண் கொள்ளாக் காட்சி ஆனந்தத் தைத் தருகின்றது.

இந்த ஆலயத்தில் எமது தொண்டர் சபையினர் சகல தொண்டுகளையும் செய்து வருகின்றனர். குறிப்பாக மஹோற் சவ காலங்களில் அன்னதானம் சகல அடியார்களுக்கும் சிறப்பாக வழங் கப்படு கின்றது. தாகசாந்தியும் சிறப்பாக நடை பெறுகின் றது.

எமது தொண்டுக்கு சகல வழிகளா லும் அடியார்கள் உதவி செய்து வருகின் றார்கள். சகல அடியார்களும் பறாளாய் முருகன் அருள் பெற்று சீரும் சிறப்புட னும் வாழ வேண்டு கின்றோம்.

தொண்டர் சபையினர்,

### மஹோற்சவ குருவின் ஆசியுரை



இலங்கையின் பல பகுதிகளிலும் முருகன் ஆலயங்களில் புராதன சிறப்புக்களுடன் ஆகம முறைப்படி நித்திய, நைமித்திய பூஜா கிரியைகள் நடைபெற்று வருகின்றன. தென் பகுதி யிலே புராதன சிறப்பு மிக்க கதிர்காமம் மட்டக்களப்பிலே சித்தாண்டி முருகன் பொத்துவில் பகுதியில் உகந்தை முருகன் யாழ்ப்பாணத்தில் நல்லூர் அலங்கார கந்தன் மாவையிலே அபிஷேகக் கந்தன் செல்வச்சந்நிதியிலே அன்னதானக் கந்தன் வரிசையிலே பறாளாய் தலம் " அங்கப் பிரதிஷ்டை கந்தன் " எனப் புகழ் பெற்று விளங்குகின்றது. மகோற்சவ காலங்களில் பெருந் தொகையான அடியார்கள் இவ் ஆலயத்தின் உள்வீதியிலும் மிகவும் பெரிய அளவைக் கொண்ட மூன்றாம் வீதியிலும் "அங்கப் பிரதிஷ்டை" செய்வது பார்ப்பவர்களை மெய் சிலிர்க்க வைக்கும். கொடியேற்ற தினத்தின் காலையில் தொடங்கும் பக்தர்களின் விரத நிகழ்வு கொடியிறக்கம் நடைபெற்று பூர்த்தியாகும் வரை தொடரும். ஆண் அடியார்கள் பிரதிஷ்டை செய்வதும் பெண் அடியார்கள் அடி அளிப்பதும் இங்கு நடைபெறும் சிறப்பு நிகழ்வாகும். அங்கப் பிரதிஷ்டை செய்வதற்கு வசதியாக இவ் ஆலயத்தின் உட்பிரகாரத்தில் சண்டேஸ்வரர் சந்நிதி தவிர ஏனைய பரிவார தெய்வங்களுக்கு சந்நிதியானது கிடையாது. ஆலய வசந்த மண்டபம் இரண்டாம் வீதியிலே அமைந்துள்ளது. இதற்கு அருகில் மிகப்பெரிய தீர்த்தக் கேணி அமைந்துள்ளது. அருகாமையில் வேம்புடன் கூடிய பாரிய "வெள்ளரசு" தல விருட்சமாக திகழ்கின்றது ."திருவடி நிலை" சமுத்திர தீர்த்த சிறப்பைக் கொண்ட இவ் ஆலயம் தீர்த்த திருவிழா அன்று ஆயிரக்கணக்கான அடியார்கள் புடைசூழ "திருவடி நிலை" செல்வது எழில் மிக்கதாய் இருக்கும். இப்படி பல சிறப்புக்கள் கொண்ட இவ் ஆலய தேர்த்திருவிழா இன்று (17.05.2019) வெள்ளிக்கிழமை காவடிகள் புடைசூழ, பக்தர்கள் அரோகரா கோஷத்துடன் தவில் நாதஸ்வர கலைஞர்களின் இன்னிசையுடன் நடைபெறுகின்றது. இத்திருவிழாவில் கலந்து முருகன்தாள் பணியும் அனைத்து அடியார்களுக்கும் எல்லாம் வல்ல வள்ளி, தெய்வயானை உடனுறை ஸ்ரீஷண்முகநாதசுவாமிப் பெருமான் திருவருள் கிடைக்க வேண்டி ஆசி கூறுகின்றோம்.

" சிவசேவா ரத்னா " " சிவாகம கிரியா நிதி "
சிவஸ்ரீ.பா.கோபாலகிருஷ்ணக் குருக்கள்
"மஹோற்சவ குரு"

### ஆலயப் பரம்பரை ஸ்
### சிவஸ்ரீ மு.பாலகுருசா



" உருவாய் அருவாய் உ
இலதாய்
மருவாய் மலரா மணியா
யொழியாய்
கருவாய்னுயிரா கதியாய்
விதியாய்
குரவாய் வருவாய் அருள்
குகனே "

- கந்தரனுபூதி

மூர்த்தி, தலம், தீர்த்தம் போன்ற சிறப்புக்
வெள்ளரசு தல விருட்ச சிறப்பினை தன்
கொண்டு வேண்டுவோர் வேண்டும் வரா
குறையின்றி வழங்கும் வள்ளல் பெரும
பறாளை அருளுறை ஸ்ரீ சுப்பிரமணியப் பெ
சன்னதியிலே கடந்த 07.05.2019 செ
கிழமை கொடியேற்றத்துடன் மஹோற்சவம்
மாகி இன்று (17.05.2019) வெள்ளிக்
தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது.
எழுந்தருளும் ஸ்ரீ ஷண்முகப் பெருமான்
சொல்லிமாளாது. அழகிய வதனமும் ஈரா


### தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:

பாக்கியரத்தினம்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
ஏக விநியோகஸ்தர்:-
யானை சோடா (Elephant House)
163, 165 பிரதான வீதி,
சங்கானை.

உங்களை அழகுபடுத்தும்
நகைகளுக்கு நாடவேண்டிய இடம்
S.K.T
மகாலட்சுமி
ஜுவலர்ஸ்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

VRV
றேட் சென்ரர்
பிரதான வீதி, சுழிபுரம்

புத்தம் புதிய புடைவை வகைகளுக்கும்
அழகு சாதனப் பொருள்களுக்கும்
நீங்கள் நாடவேண்டிய இடம்
முத்துமாரி
புடைவை பான்சி பலஸ்
பண்டத்தரிப்பு.

நவநாகரிக பட்டுப்புடைவைகளை
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
புதிய அபிராமி
புடைவை மாளிகை
பிரதான வீதி, சங்கானை.

ஸ்ரீ அம்பாள்
குறோசறிஸ்
பண்டத்தரிப்பு

முருகன் ஸ்ரோர்
பலசரக்கு மாளிகை
காளுவன் சந்தி, பிரதான வீதி
சுழிபுரம்.

சந்நிதி முருகன்
அறுசுவை
சைவ உணவகம்
பிரதான வீதி, சித்தன் கேணி.
கலைமகள்
சைவ உணவகம்
பிரதான வீதி, சங்கானை
உரிமையாளர் : ஆனந்தன்

ஈஸ்வரா
நெற் கபே
ஈஸ்வரா பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி, சுழிபுரம்.

பாபு
களஞ்சியம்
சுழிபுரம் மேற்கு, பெரியதம்பிரான்
கோயில் வீதி, சுழிபுரம்.

கலைவாணி
நகைமாளிகை
111 - B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அருள் மோட்டோர்ஸ்
அன் சேவிஸ்
வழக்கம்பரை, சுழிபுரம்.

சபா
தச்சுத்தொழிலகம்
சகல வீட்டு வேலைகளுக்கும்
எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.
உரிமையாளர்: ந. சபாரத்தினம்
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

# ஒருவரின் விடுதலைக்காக ரிசாத் 3 தடவைகள் அழைப்பெடுத்தார்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, மே 17

'ஒருவரின் விடுதலைக்காக மூன்று தடவைகள் எனக்கு அழைப்பெடுத்தார் அமைச்சர் ரிசாத் பதியுதீன். கைது செய்யப்பட்ட ஒருவரை விடுதலை செய்யுமாறு அவர் கோரினார். ஒன்றரை வருடம் கழித்து என்னுடன் பேசுமாறு நான் அப்போது அவரிடம் கூறினேன்.'

இவ்வாறு தெரிவித்தார் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஷ் சேனநாயக்க.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'அமைச்சர் ரிசாத் பதியுதீன் உங்களுடன் பேசி ஒருவரை விடுதலை செய்யக் கேட்டார் எனக் கூறி யுள்ளீர்கள்.. அது வேண்டுகோளா? அழுத்தமா?' என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதில் வழங்கிய இராணுவத் தளபதி மேலும் கூறியதாவது:

'அது அழுத்தமா, வேண்டுகோளா என்பதைப் பார்த்தால் என்னிடம் விடுத்த வேண்டுகோளாகவே அதனைப் பார்க்கலாம். தெகிவளையில் கைதுசெய்யப்பட்ட ஒருவரின் விடுதலை சம்பந்தமானது. அது யார்? எவர்? என்ன செய்யலாம்? என்று அவர் மூன்று தடவைகள் அவர் எனக்கு அழைப்பெடுத்துப் பேசினாலும் மூன்றாவது தடவை பேசும்போது - என்னுடன் ஒன்றரை வருடங்கள் கழித்துப் பேசுமாறு நான் கூறிவிட்டேன். ஏனெனில், கைதுசெய்யப்பட்டவரை ஒன்றரை வருட காலம் வரை சிறையில் வைக்க சட்டத்தில் எனக்கு இடமுண்டு' - என்றார். (ம-22)



## இலங்கை சிங்கள பௌத்த நாடல்ல

# மங்கள தெரிவித்த இந்தக் கூற்று இனவாதத்தை தூண்டுகின்றதாம்

கொழும்பு, மே 18

இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு கிடையாது என அண்மையில் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருந்தமை இனங்களுக்கிடையிலான வன்முறையை தூண்டும் வகையில் அமைந்துள்ளதாகவும், எனவே அமைச்சர் மங்களவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் பொதுஜன பெரமுனவினர் பொலிஸ் தலைமையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

செஹான் சேமசிங்க உள்ளிட்ட மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டத்தரணி பிரேமநாத்சி தொலவத்த உள்ளிட்டோர் புதன்கிழமை இவ்வாறு முறைப்பாடளித்திருந்தனர். முறைப்பாட்டை பொலிஸ் தலைமையகத்தில் கைளித்த தன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க, அமைச்சர் மங்கள சமரவீர தன்னுடைய கட்சியின் அரசைத் தொடர்ந்தும் கொண்டு செல்வதற்காக இவ்வாறான முரண்பட்ட வெவ்வேறு கருத்துக்களை முன்வைத்துக் கொண்டிருக்கின்றார். இந்த ஐக்கிய தேசிய கட்சி அரசுக்கு நாட்டு மக்கள் மீதான அக்கறை சிறிதளவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இனங்களுக்கிடையில் வன்முறைகளைத் தூண்டும் வகையில் இவர்களுடைய செயற்பாடுகள் காணப்படுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது. எனவே தான் மங்கள சமரவீரவுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரி முறைப்பாட்டை கைளித்துள்ளோம் - என்றார். (ம-61)

# ராஜபக்ச அணியின் ஆசியுடனேயே நாட்டில் வன்முறைகள் அரங்கேற்றம்

## கைகட்டி வேடிக்கை பார்க்கின்றார் மைத்திரி இவ்வாறு குற்றஞ்சாட்டுகின்றார் பொன்சேகா

கொழும்பு, மே 17

'உயிர்த்த ஞாயிறன்று கிறிஸ்தவ மக்கள், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் ஆகியோரைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்கள் மற்றும் அதன்பின்னர் நாட்டில் பல இடங்களில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் ஆகியவற்றின் பின்னணியில் ராஜபக்ச அணியினரே உள்ளனர். அவர்களின் ஆசியுடனேயே நாட்டில் வன்முறைகள் அரங்கேற்றப்படுகின்றன. இது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் தெரியும்.'

இவ்வாறு குற்றம்சாட்டினார் ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கவிழ்ப்பதில் ராஜபக்ச அணியினரும் அரச தலைவர் மைத்திரியும் குறியாகவுள்ளனர். இவர்கள் அரசியல் சூழ்ச்சி மூலம் ஆட்சியைக் கவிழ்க்க முயன்றனர். ஆனால், நாட்டின் நீதித்துறையும் பன்னாட்டுச்சமூகமும் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

இந்தநிலையில், தாக்குதல்கள், வன்முறைகளைத் தூண்டிவிட்டு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் பன்னாட்டுச் சமூகத்துக்கும் இந்த அரசு மீது வெறுப்பு வரச் செய்து விட்டு ஆட்சியைப் பிடிக்க இவர்கள் முயல்கின்றனர். அதுதான் உயிர்த்த ஞாயிறு தாக்குல்கள் மற்றும் அதன் பின்னர் நடைபெற்ற வன்முறைகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்காமல் மைத்திரி கைகட்டி வேடிக்கை பார்க்கின்றார். சந்தேகநபர்கள் என்று சிலரை மட்டும் கைதுசெய்து விளக்கமறியலில் வைத்தால் போதாது. தாக்குதலின் பின்னனியில் இருந்தவர்கள் யார் என்ற உண்மை வெளிவர வேண்டும். குற்றவாளிகள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும்.



ஆனால், மைத்திரி அரச தலைவராகப் பதவியில் இருக்கும் வரைக்கும் இந்த உண்மை வெளியில் வராது. ஏனெனில், இந்த அரசைக் கவிழ்ப்பதிலும் ராஜபக்ச அணியைக் காப்பாற்றுவதிலும் அவர் உறுதியாக உள்ளனர். அதற்காகத்தான் சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பொறுப்பை எனக்கு வழங்க மைத்திரி பின்னடிக்கின்றார். அந்த அமைச்சு என் வசம் வந்தால் ராஜபக்ச அணியினரும், தானும் சிறைக்குச் செல்ல நேரிடும் என்று அவர் அஞ்சுகின்றார்' - என்றார். (ம-22)

## நினைவுதினம்

3 ஆம் ஆண்டு



தோற்றம் 17.07.1944
மறைவு 20.05.2016

அமரர்
**தனலஷ்மி நாகரத்தினம்**

7 ஆம் ஆண்டு



தோற்றம் 31.03.1936
மறைவு 07.10.2012

அமரர்
**திருநாவுக்கரசு நாகரத்தினம்**
(சாந்தி அச்சக உரிமையாளர்)

*" ஆல விருட்சமாயிருந்து அர்ப்பணிப்புடனான அரவணைப்புடன் கூடிய உங்கள் வழிகாட்டலில் வாழ்ந்துவரும் நாங்கள் எமது உயிர் உள்ளவரை உங்களை மறவோம் உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்."*

குடும்பத்தினர்
077 396 5214

தயா அச்சகம் தயா வெளியீடு
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்

# சின்னப்பு செல்லையா

*நீலிப்பந்தனை காரைநகர் - பொற்பதி வீதி, கோண்டாவில்*



காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும் நீலிப்பந்தனையை நீண்டகாலமாக வசிப்பிடமாகவும் தற்போது பொற்பதி வீதி கோண்டாவிலை வசிப்பிட மாகவும் கொண்ட சின்னப்பு செல்லையா நேற்று (16.05.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாக சின்னப்பு - தெய்வானை தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் பூரணம் தம்பதியின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, பத்தினிப்பிள்ளை யோ கேஸ்வரன் மற்றும் தம்பு ஆகியோரின் சகோதரனும் விக்கினேஸ்வரி (ஜேர்மனி), திருக்குமரன் (ஆசிரியர், யா/வயாவிளான் மத்தியகல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ரவீந்திரன் (ஜேர்மனி), கிருபாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும் சங்கவி, பிரவீன், ராகவி, கௌசிகா, ஆரணி, அனிஸ் ஆகியோரின் அன்பு பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2019) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பெற்பதி வீதி,**
**கோண்டாவில் கிழக்கு.**

**தகவல்: சி.திருக்குமரன் (மகன்)**
**077 615 8080**

## நல்லூருக்கு...

ளார். நாளைமறுதினம் (நாளை) சனிக்கிழமை நல்லூரில் தாக்குதல் நடத்தப்படத் திட்டமிட்டுள்ளது என்று ஆளுநர் அலுவலகத்துக்கு நேற்று அனுப்பிவைத்த அநாமதேயக் கடிதத்தை அடுத்தே மேற்படி உத்தரவை ஆளுநர் பிறப்பித்தார்.

தமிழர் தாயகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நாளைமறுதினம் கடைப்பிடிக்கப்படவுள்ள நிலையில் இந்த அநாமதேயக் கடிதம் ஆளுநரின் அலுவலகத்துக்குக் கிடைத்துள்ளது. அதனைப் பார்வையிட்ட ஆளுநரின் பிரத்தியேக அலுவலகர். அதனை ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

கடிதம் தொடர்பில் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் தொலைபேசியில் உரையாடிய ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், அதனை வரைந்தவர், எங்கிருந்து அனுப்பப்பட்டது போன்ற விடயங்கள் தொடர்பில் விரைவான விரிவான விசாரணைகளை முன்னெடுக்க அறிவுறுத்தினார்.

ஆளுநரின் அறிவுறுத்தலை உடன் நடைமுறைப்படுத்த யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைப் பணித்த வடக்கு மாகாண மூத்த பொலிஸ்மா அதிபர், ஆலயத்தின் பாதுகாப்பை அதிகரிக்கவும் அறிவுறுத்தினார்.

இதனையடுத்து அநாமதேயக் கடிதம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், நேற்று நண்பகல் தொடக்கம் நல்லூர் ஆலயச் சூழலின் பாதுகாப்பை அதிகரித்துள்ளனர். இராணுவத்தினரும் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஈழ நல்லூரில் நாளைமறுதினம் சனிக்கிழமை வைகாசி விசாக உற்சவம் இடம்பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-37,105)

## ஐ.எஸ்...

துள்ளது. தெகிவளை வீடொன்றில் வைத்துப் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் இரண்டாம் இலக்க விசாரணை அறை அதிகாரிகள் 23 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர்களைக் கைப்பற்றினர். அது குறித்து முன்னெடுக்கப்படும் விசாரணைகளிலேயே பல விடயங்கள் வெளியாகியுள்ளன.

மேற்படி பணம் சிரியாவில் பயிற்சி பெறும் இலங்கையர்களால் அனுப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

சிரியாவில் பயிற்சி பெறுவதாக கூறப்படும் மொஹம்மட் முஹ்சீன், இசாக் அஹமட் மற்றும் சர்பாஸ் நிலாம் ஆகியோரின் பெற்றோரும் சகோதரியுமே பணம் கைப்பற்றப்பட்ட தெகிவளை வீட்டில் வசித்துள்ளனர். அவர்களிடம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-ஓ.5)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் அதிபராக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற **திரு. தில்லைநாதன் ரவீந்திரநாதன்** அவர்கள் **சமாதான நீதவானாக** யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதவான் திரு அ. பிரேம்சங்கர் முன்னிலையில் 07.05.2019 அன்று சத்தியப் பிரமாணம் மேற்கொண்டுள்ளார். இவரைப்பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல பதவிகள் பெற எல்லாம் வல்ல விநாயகரை வேண்டிநிற்கின்றோம்.

**ஆசிரிய சமூகம்**
**யா/நீர்வேலி சி.சி.த.க பாடசாலை**

## பல்கலைக்கழக...

புலிகள் அமைப்பின் தலைவரின் ஒளிப் படம் மற்றும் இனப்படுகொலை தொடர்பான பதாகைகள் என்பன மாணவர் ஒன்றியத்தின் அலுவலக அறையில் மீட்கப்பட்டன. இதனையடுத்து மாணவர் ஒன்றியத்தின் தலைவர் மற்றும் செயலர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் கோப்பாய் பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அத்துடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட சிற்றுண்டிச்சாலையில் தியாக தீபம் திலீபனின் ஒளிப்படம் மீட்கப்பட்டது. அதனால் சிற்றுண்டிச்சாலை நடத்துனரும் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மாணவர் ஒன்றியத்தின் தலைவர், செயலர் மற்றும் சிற் றுண்டிச்சாலை நடத்துனர் ஆகிய மூவரையும் நேற்று 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பா ணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த நிலை யில் நேற்று வியாழக்கிழமை மாணவர்கள் இருவரும் சிற்றுண்டிச்சாலை நடத்துனரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். சட்டமா அதிபரிடமி ருந்து தொலைநகல் மூலம் தமக்கு வழங்கப்பட்ட அறிவு றுத்தலுக்கு அமைய மூவரையும் பிணையில் விடுவிக்க ஆட்சேபனை இல்லை என்று கோப்பாய் பொலிஸார் மன்றுரைத்தனர்.

'மாணவர்களை பிணையில் விடுவிப்பது மட்டுமல்ல, அவர்களை அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவிப்பதே எமது நோக்கமாகும். பொலிஸார் இந்த வழக்கை உரியமுறையில் விசாரணை செய்தால் மாண வர்கள் இருவரையும் சிற்றுண்டிச் சாலை நடத்துனரை யும் வழக்கிலிருந்தே விடுவிக்க முடியும்' என்று சட்டத்தரணி கே.சுகாஷ் சமர்ப்பணம் செய்தார். இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த மன்று, மூவரையும் தலா ஒரு லட்சம் ரூபா ஆள் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தது.

(ம-37)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றி இலங்கை நிர்வாக சேவைக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேற்றினை பெற்று **தேசிய ரீதியில் முதலிடத்தில்** தெரிவாகி 15.05.2019 ஆம் திகதி முதல் **இலங்கை நிர்வாக சேவையின் தரம் III** இற்கு நியமிக்கப்பட்டுள்ள **திரு. இராசரத்தினம் பரணிகரன்** அவர்கள் மேன்மேலும் பல உயர்வுகளைப் பெற்று சிறந்த மக்கள் சேவையினை ஆற்ற வாழ்த்துகின்றோம்.

**பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும், நலன்புரிச்சங்கம், பிரதேசசெயலகம், தெல்லிப்பளை.**

### பெண் வேலையாள்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாள்கள் தேவை. வயது எல்லை 18 தொடக்கம் 30 வரை. வேலைநேரம் காலை 7.30 தொடக்கம் மாலை 5.30 வரை
**தொடர்பு - 076 118 4010**

### நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.
257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
**021 222 9306/077 138 7596**

### தவறிவிட்டது

கோட்டைக்காடு மல்லாகத்தைச் சேர்ந்த தேவராஜா என்பவரின் தேசிய அடையாள அட்டை (195524502534V) தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தொலைபேசி எண்ணிற்கு தொடர்புகொள்ளவும்
**077 935 4823**

### விற்பனைக்கு

கட்டட இடிபாடுகள் விற்பனைக்கு உண்டு.
**077 723 2535**
(CS 25400) (14.17)

### வேலையாள்கள் தேவை

கடையில் வேலை செய்யக் கூடிய அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை. (ஆண்,பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
**076 177 3361**

### வாடகைக்கு

யாழ்.வண்ணார் பண்ணை, லேட்டஸ் வீதியில் வீடு வாடகைக்கு விடப்படும்.
**076 101 6580**
(CS/25403)(1.17)

### தேவை

எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவமுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் (T.O), கணிய அளவையாளர் (Q.S), பயிலுநர் (Trainee) மற்றும் கூலியாள்கள் (Labours) தேவை.
தொடர்புக்கு:- 0763165730, 0775925371
E.Mail: careers@decon.lk

### Personal Classes

தனியாகவோ / குழுக்களாகவோ பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல் தரம் 6-O/L வரை சகல பாடங்களும் குழுக்களாக வீடு வந்து கற்பிக்கப்படும்.
**Contact No:-0752347120**

### விற்பனைக்கு

யமுனாபாறி கலப்பு இன ஆடும் குட்டியும், JC இன சினையுடன் பசுவும், டாசோன், பொமேரியன், பொக் கட்ஸ் பெனியர், ரொட்விலர் ஆண், பெண் நாய்களும், வெள்ளடியன், மணித்தாரா.
**தொடர்புக்கு:லி.மயூரன்**
ஆயக்கடவை பிள்ளையார் கோவில் முன்பாக புன்னாலைக்கட்டுவன் தெற்கு, பூதராயர் கோவிலடி டயலொக் ரவர் அருகில் 021 490 3500


### Area managers தேவை

பகுதி மேலாளர்கள் (Area managers) தேவை. இலங்கையின் அனைத்து மாவட்டத்தில் இருந்தும் பகுதி மோலாளர்கள் இணைத்து கொள்ளப்படுவார்கள். சம்பளம் முதல் மாதம் 15,000 இரண்டாம் மாதம் 30,000 மூன்றாம் மாதம் 60,000 நிரந்தரம் ஆனபின் 90,000 கிடைக்கும்.
தொடர்புகளுக்கு: jobs@saantham.com
தொடர்பு: 0779077254

MAJESTIC CINEPLEX




Jaffna Platinum
10.30AM | 1.30PM
4.30PM | 7.30PM




Jaffna Silver
10.45AM | 1.45PM
4.45PM | 7.45PM




Jaffna Bronze
10.30AM | 2.30PM
6.30PM

மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள்
011 5 999 999
CEYLON THEATRES
www.ceylontheatres.lk
MajesticCineplexSL


## அகவை அறுபதில் ஆசிரியைக்கு நல்வாழ்த்துக்கள்

Best Wishes



**திருமதி மனோரஞ்சிதம் தவபாலன்**
(ஆசிரியை - யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்)
**(Primary Trained, S.L.T.S 1)**

Best Wishes

**சேவை விவரம்**

| | |
|---|---|
| யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம் | - 17.08.1988 - 31.12.1992 |
| யா/ கோப்பாய் ஆசிரியர்கலாசாலை (ஆசிரிய மாணவி) | - 01.01.1993 - 31.12.1994 |
| யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம் | - 01.01.1995 - 01.02.1998 |
| யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் | - 02.02.1998 - 09.05.2010 |
| யா/ கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயம் | - 10.05.2010 - 24.01.2012 |
| யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் | - 25.01.2012 - 17.05.2019 |

எமது பாடசாலையில் நல்லாசிரியராகக் கடமையாற்றி இன்று ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வுபெறும் ஆசிரியரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வாழ்த்துவோர் :- ஆசிரிய நலன்புரிச்சங்கம், யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்.**

## துயர் பகிர்கின்றோம்



எமது சபையின் தலைமை அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி தயாவதி அசோகன் அவர்களின் அன்புத் தாயார் **திருமதி நாகம்மா பொன்னையா** அவர்களின் இறப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம், நல்லூர் பிரதேசசபை.**


## ஆங்கிலத்திற்கு NO.1 பயிற்சி மையம்



உங்கள் ஆங்கிலப்புலமைக்கு ஓர் முழுமையான ஆங்கிலக்கற்கை நெறி

**IELTS**
•Unique Test Tips
•Latest course Materials

**IELTS Life Skills**
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

**DIPLOMA IN ENGLISH**
**Spoken English**

Dip.in English மற்றும் Spoken English கற்கைநெறிகளுக்கான மே மாதத்திற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி | சண்டிலிப்பாய் |
|---|---|---|---|---|---|
| Mon,Wed,Fri 10:00 a.m<br>Mon,Wed,Fri 3:30 p.m<br>Sat, Sun 4.00 p.m. | Tue, Thu 3.30 p.m.<br>Wed,Fri 9:30 a.m. | Tue, Thu 08.30 a.m.<br>Sat, Sun 10.30 a.m. | Mon,Wed,Fri 11:00 a.m<br>Sat, Sun 3.30 p.m.<br>Tue,Thu 9:00 a.m | Sat, Sun<br>10.00a.m | Mon,Wed,Fri<br>10.00 a.m |

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

# DMI COMPUTER EDUCATION

DMI COMPUTER EDUCATION

| | | | | | |
|---|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி சபன்ஸ் ஹோல் அருகாமை<br>**யாழ்ப்பாணம்**<br>Tel.: 021-222 4403 | M.M.V.வீதி<br>**நெல்லியடி**<br>Tel.: 021-226 2470 | No.174 கண்டி வீதி, HNB வங்கி அருகில்<br>**சாவகச்சேரி**<br>Tel.: 021-227 0775 | No.130 K. K. S வீதி, NSB வங்கி அருகில்<br>**சுன்னாகம்**<br>Tel.: 021-224 1970 | No.19,A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக)<br>**கிளிநொச்சி**<br>Tel.: 021-228 5655 | சீரணிச்சந்தி<br>**சண்டிலிப்பாய்**<br>Tel.: 021-225 5556 |

# ஹிஸ்புல்லாவால் காணி அபகரிப்பு

## தட்டிக் கேட்கமாட்டீர்களா என்று கூட்டமைப்பின் எம்.பிக்கள் விசனம்

செங்கலடி, மே 17

தற்போது கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அதிகளவான காணிகளை சில கம்பனிகளின் பெயரிலும் தனி நபர்களின் பெயரிலும் கையகப்படுத்தி வைத்திருக்கின்றார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், ஞா.சிறிநேசன் ஆகியோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அனைத்துக் காணிகளினதும் விவரங்கள் ஆராயப்பட்டு உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாமாங்கத்தில் அமைந்துள்ள அவரின் அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் உறுப்பினர் சிறிநேசன் தெரிவித்ததாவது:

கிழக்கு ஆளுநரின் இத்தகைய செயற்பாடுகள் பல சந்தேகங்களை எழுப்பியுள்ளன. மன்னாரிலும், வெருகல்துறை ராமர் தீவு, புல்லுமலை, உட்பட பல காணிகளை குறித்த அரசியல்வாதி கொள்வனவுசெய்து வைத்திருக்கின்றார். இது ஆராயப்படவேண்டும்.

சாதாரண முஸ்லிம் மக்கள் வீடுகளை அமைப்பதற்காக பரப்புக்கணக்கில் காணிகளை வாங்கி குடியமர்ந்ததைப் பற்றி நாங்கள் கூறவில்லை. அரசியல்வாதிகள் அளவுக்கு அதிகமாகக் காணிகளைக் கொள்வனவு செய்து வைத்திருப்பதென்பது எதிர்காலத்தில் என்ன நோக்கத்துக்காகச் செய்யப்படுகின்றது என்ற எண்ணம் எமக்கு இருக்கின்றது. தேவைகளுக்குப் பயன்படுத்தாமல் அளவுக்கு அதிகமான காணிகள் வைத்திருகின்றமை சந்தேகங்களை ஏற்படுத்துகின்றன.

சிலரது அரசியல் தேவைகளுக்காக சிலரது ஆதரவுகளைப் பெறுவதற்கு ஒரு விடயம் எதிர்காலத்தில் எவ்வாறு நடக்கப்போகின்றது என்பதைப் பற்றி ஆராயாமல் காணிக் கொடுப்பனவுகள் அல்லது காணிக் கையளிப்புகள் நடைபெற்றுக்கொண்டிருகின்றன - என்றார்.

கிழக்கு ஆளுநர் காணி அபகரிக்கிறார் என்ற குற்றச்சாட்டை சில நாள்களுக்கு முன்னர் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் முன்வைத்திருந்தார்.

மன்னார் ஓலைத்தொடுவாய் உவரி காணிப்பகுதியில் ஹிஸ்புல்லா 508 ஏக்கர் காணியைக் கையகப்படுத்தியுள்ளார். மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகள் பொது மக்களின் காணிகளை அடாத்தாகவும் போர் காரணமாக இந்தியாவுக்கு இடம் பெயர்ந்த மக்கள் காணிகளில் இல்லாமை காரணமாக அவர்களுடைய காணிகளையும் இங்குள்ள முஸ்லிம் நபர்களுடைய பெயர்களில் பெயர் மாற்றம் செய்து பல இடங்களில் பல ஏக்கர் காணிகளை கொள்வனவு செய்திருக்கின்றனர்.

ஆளுநராக உள்ள ஹிஸ்புல்லா மன்னார் ஓலைதொடுவாய் உவரியில் 508 ஏக்கர் காணியை செலான் பிஸ்னஸ் பிரைவேட் லிமிட்டட் எனும் பெயரில் கொள்வனவு செய்துள்ளார். அந்த நிறுவனத்தின் இயக்குநராக ஹிஸ்புல்லா இருக்கின்றார். அதன் பெயரில் 508 ஏக்கர் காணிகளை 2013ஆம் ஆண்டு கொள்வனவு செய்து இருக்கின்றார்.



இந்த 508 ஏக்கர் காணிகளை கொள்வனவு செய்வதற்கு குறித்த நிறுவனத்துக்கு நிதி எவ்வாறு கிடைத்தது? அவருக்கு எந்த அரபு நாட்டில் இருந்து எந்த செல்வந்தர் நிதி வழங்கினார் என்பது தொடர்பாக அரசு விசாரிக்க வேண்டும். தேசிய புலனாய்வுத் துறையினர் உடனடியாக விசாரிக்க வேண்டும், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ம,த)

## வேலணை கோபுரத்து வைரவர் வருடாந்தப் பொங்கல் நாளை

யாழ்ப்பாணம், மே 17

வேலணை, வங்களாவடி கோபுரத்து வைரவர் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல்விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற அருள் பாலித்திருப்பதாக அறங்காவலர் ப.தேவநாயகம் அறிவித்துள்ளார்.

நாடெங்கும் உள்ள வைரவர் அடியார்கள் அன்றைய தினம் பொங்கல் படையல் வைப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொங்கல் நிகழ்வுக்கான அபிசேகப் பொருள்களை வழங்க விரும்பும் அடியவர்கள் முன்கூட்டியே ஆலயத்துடன் தொடர்புகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (உ)

## மணிவண்ணனின் உறுப்புரிமை தொடர்பான வழக்கினது தீர்ப்பு ஜூன் மாதம் 21ஆம் திகதி!

யாழ்ப்பாணம், மே 17

யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் வி.மணிவண்ணனின் உறுப்புறுமை செல்லுபடியற்றது என உத்தரவிடக்கோரி மேன் முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்ச்சியாக 5 தினங்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் ஜூன் மாதம் 21ஆம் திகதி தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் போட்டியிட்டு, விகிதாசாரப் பட்டியல்மூலம் மாநகர சபை எல்லைப் பரப்புக்குள் சாதாரண வதிவிடத்தைக் கொண்டிராத ஒருவர் சபைக்குத் தேர்வானமை செல்லுபடியற்றது என்று உத்தரவிடக்கோரி மாநகர சபை எல்லைப் பரப்புக்குள் நிரந்தரமாக வசிக்கும் ஒருவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஊடாக 2018ஆம் ஆண்டு ஜூலை மாதம் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கின் விசாரணை இடம்பெறும் நிலையில் குறித்த உறுப்பினர் சபை நடவடிக்கைகளில் பங்குகொள்ளவோ அல்லது வாக்களிக்கவோ இடைக்காலத் தடைவிதிக்கப்பட்ட நிலையில் குறித்த வழக்கு இடம்பெறுகின்றது. இவ்வாறு இடம்பெறும் வழக்கானது கடந்த 10ஆம் திகதி முதல் நேற்று வரை ஐந்து தினங்களும் தொடர்ச்சியாக இடம் பெற்று வந்த நிலையில் தற்போது எழுத்து மூலமான சமர்ப்பணம் மற்றும் தீர்ப்புக்காக எதிர்வரும் ஜூன் மாதம் 21ஆம் திகதி வரையில் ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதில் இருந்து வழக்காளர் சார்பில் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் நிரான் அங்கிரல் ஆகியோர் முன்னிலையான நிலையில் மணிவண்ணன் சார்பில் இதுவரை சட்டத்தரணிகளான புவிதரன், டினேஸ், காண்டீபன், குருபரன், சஞ்சீவ ஜெயவர்த்தன, விஜித்சிங் ஆகியோர் முன்னி லையாகியுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ம-105)

## பொங்கல் விழா விஞ்ஞானபனம்

வவுனியா, மே 17

வவுனியா நொச்சிமோட்டை அருள்மிகு நரசிம்மர் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா விஞ்ஞாபனம் இன்றயதினம் நடைபெறவுள்ளது.

காலை 6.30 மணிக்கு பொங்கல் விழா நிகழ்வுகள் ஆலய முன்றலில் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூசையுடன் அன்னதானமும் வழங்கப்படும்.

மாலை 4 மணிக்கு வசந்தமண்டப பூசை இடம்பெற்று எம்பெருமான் உள்வீதி, வெளிவீதி, உலாவந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கவுள்ளதுடன் நாளையதினம் மாலை 4 மணிக்கு ஆஞ்சநேயர் சுவாமி வழிபாடு இடம்பெறவுள்ளதால் அடியவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஆலயப்பரிபாலன சபையினர் அழைக்கின்றனர். (ம-110)

## பேருந்துடன் மோதி விபத்து ஈருருளியில் வந்தவர் காயம்

சாவகச்சேரி, மே 17

அரச பேருந்து ஈருருளி மோதி விபத்துக்குள்ளானதில், ஈருருளியில் வந்தவர் தூக்கி வீசப்பட்டு தலையில் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று நுணாவிலில் இடம்பெற்றுள்ளது.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த கந்தசாமி திருச்செல்வம் (வயது - 55) என்பவரே அவ்வாறு காயமடைந்தார். அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ம-9)

## தலைமன்னார் வழியாக இந்தியா செல்லமுயன்ற நைஜீரியர்களுக்கு 25,000 ரூபா தண்டம் விதிப்பு

### ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறை விதிப்பு

மன்னார், மே 17

குடிவரவு - குடியகல்வு சட்டத்துக்கு மாறாக கடல் மார்க்கமாக இலங்கை பேசாலை கடற்பரப்பிலிருந்து இந்தியாவுக்கு ஒரு படகின் மூலம் சென்று கொண்டிருந்தபொழுது நான்கு நைஜீரியர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத்தண்டனையும் அவர்களுக்கு விதிக்கப்பட்டது.

அத்துடன் இவர்கள் இந்தியாவுக்கு செல்ல உதவி புரிந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட மூன்று இலங்கை குடிமக்களும் தாங்கள் சுற்றவாளிகள் என தெரிவித்ததைத் தொடர்ந்து இவர்களுக்கான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 31ஆம் திகதி இரவு இலங்கை மன்னார் பேசாலை கடற்பரப்பிலிருந்து இந்தியாவுக்குச் சட்டபூர்வமற்ற முறையில் ஒரு படகின் மூலம் தலைமன்னார் பாக்குநீர் கடற்பரப்பினூடாக சென்ற நான்கு நைஜீரியக் குடிமக்லைகள் மன்னார் கடற்படையால் கைது செய்யப்பட்டு தலைமன்னார் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுடன் பேசாலை உதயபுரத்தைச் சார்ந்த இரு படகோட்டிகளும் கைது செய்யப்பட்டு மன்னார் மாவட்ட நீதவான் ரி.சரவணராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். இவர்கள் ஆறு பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் இலங்கை குடிமக்களான இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இந்த வழக்கு மன்னார் மாவட்ட நீதவான் ரி.சரவணராஜா முன்னிலையில் விசாரணைக்காக நேற்று எடுக்கப்பட்டது. நான்கு நைஜீரியர்களையும் சிறைச்சாலை அதிகாரிகள் மன்றில் முன்னிலைப்படுத்தினர். இதன்போதே அவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் ஒத்திவைக்கப்பட்ட ஓர் ஆண்டுகடூழியசிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

நைஜீரியர்களை இந்தியாவுக்கு அழைத்துச் செல்வதற்கு உதவியதாக தெரிவிக்கப்பட்ட இரு படகோட்டிகளும் மற்றும் படகு உரிமையாளரும் தங்கள் குற்றங்களை ஏற்றுக் கொள்ளாமையால் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி வரை விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம-60)

# கர்ப்பவதிகளுக்கான சத்துணவு பொதியில் பழுதடைந்த உணவு!

## மானிப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த கர்ப்பவதிகள் குற்றச்சாட்டு

வலி.தென்மேற்கு, மே 17
கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கர்ப்பவதிகளுக்கு வழங்கப்பட்டு வரும் சத்துணவுக்கான உலர் உணவுப் பொருள்களில் முட்டை, நெத்தலிக்கருவாடு ஆகியன பழுதடைந்தவையாகக் காணப்படுவதாக தெரிவித்தனர்.

கர்ப்பவதிகளின் நலன்கருதி அரசால் மாதாந்தம் ரூபா 2 ஆயிரம் பெறுமதியான அரிசி, கடலை, பருப்பு, உழுந்து, முட்டை, நெத்தலிக்கருவாடு உட்பட 9 உலர் உணவுப்பொருள்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. சில சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் இந்தப் பொருள்களில் முட்டை, நெத்தலிக்கருவாடு ஆகியன பாவிக்க முடியாதவாறு பழுதடைந்துள்ளன.
அண்மையில் மானிப்பாயில் உள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் இவ்வாறான பழுதடைந்த முட்டை மற்றும் கருவாடுகள் வழங்கப்பட்டதாக அந்த பகுதி கர்ப்பவதிகள் தெரிவித்தனர்.
எதிர்காலங்களில் இந்தப் பொருள்களுக்குப் பதிலாக பழுதடையாத பொருள்களை வழங்குமாறு கர்ப்பவதிகள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-115)

## மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 17
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக ஒரு மாத காலத்துக்கு வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இதன்படி நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மாவட்டச் செயலர் அலுவலகம், பூட்சிற்றி, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.
நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை வவுனியா மாவட்டத்தில் கோவில்குளம் பிரதேசத்தில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## குண்டுத் தாக்குதல்களில் இறந்தோருக்கு அஞ்சலி

கொழும்புத்துறை, மே 17
உயிர்ப்பு ஞாயிறு தினத்தன்று நாட்டில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களில் உயிரிழந்தோரின் ஆத்மா அமைதி பெறவும் காயமடைந்தோர் விரைவில் குணமடையவும் உறவுகள் ஆறுதலடையவும் மெழுகுவர்த்தி தீபமேற்றி இறைவேண்டலும் அஞ்சலி நிகழ்வு யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
நிலைய இயக்குநர் அருட்பணி பிரான்சிஸ் யூஜின் அடிகள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணம் நாகவிகாராதிபதி, பன்னாட்டு இந்து குருமார் ஒன்றியச் செயலர் கு.கேதீஸ்வரசர்மா, அத்தியடிப்பிள்ளையார் கோவில் தலைமைக் குரு கீதாராம சர்மா, மௌலவி ஏ.எம்.ஏ. அஸீஸ், யாழ்ப்பாணப் பிரதேச உப செயலர் திருமதி றொபின்சன், அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.
கியூடெக் இயக்குநர் தமது அஞ்சலியுரையில், அப்பாவி மக்கள் வழிபட்டுக் கொண்டிருந்த போது இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களை கண்டிப்பதோடு இறந்தோருக்காக செபிக்கின்றோம். முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது எமது கடமை. அவர்களது அச்சத்தை நீக்கி முன்பிருந்த அன்னியோன்னியத்தை விட சிறப்பான முறையில் ஒற்றுமையைப் பேண வேண்டும். தற்போதும் கூட அரசியல் காரணங்களுக்காக கட்டவிழ்த்து விடப்படும் அடாவடிகளை அனுமதிக்க முடியாது. உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை உடனடியாக உரியவர்களுக்கு அறிவித்து உதவுங்கள் - என்றார். (து-135)

## சில நாள்கள் அன்பாகப் பேசி பெண்ணின் நகைகள் திருட்டு

வலி.தென்மேற்கு, மே 17
தனிமையில் வசித்த வயோதிபப் பெண்ணின் வீட்டுக்குச் சென்று அன்பாகப் பேசி, பெண்ணின் கைப்பையிலிருந்த 2 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை எடுத்துக்கொண்டு தப்பிச் சென்று விட்டார் இளைஞர் என்று பொலிஸில் முறையி டப்பட்டுள்ளது.
இந்தத் தந்திரமான திருட்டு சுதுமலை தெற்கு மாவடி வீதியில் உள்ள வீட்டில் இடம்பெற்றுள்ளது.
அந்தப் பெண் பல வருடங்களாக அங்கு வசித்து வருகிறார். முன்பின் அறிமுகமில்லாத அந்த இளைஞன் சில நாள்களாக அந்தப் பெண்ணுடன் அன்பாகப் பேசி தன்னை அறிமுகப்படுத்தியிருந்தார். மூன்றாவது நாளும் அங்கு சென்ற இளைஞன் வழமைபோல் அந்தப் பெண்ணுடன் உரையாடிக்கொண்டிருந்தார். இவரின் செயற்பாட்டில் சந்தேகம் கொண்ட அந்தப் பெண் பக்கத்து வீட்டில் இருந்தவர்களை அழைப்பதற்காக எழுந்து சென்றபொழுது தங்கவளையல்களைத் திருடிச் சென்றுள்ளார் என்று முறையிடப்பட்ட தாகப் பொலிஸார் தெரிவித்தனர். (து-115)

## வைகாசி விசாகப் பொங்கல்

ஏழாலை, மே 17
யாழ்ப்பாணம் ஏழாலை கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்த வைகாசி விசாகப் பொங்கல் நாளை சனிக்கிழமை காலை இடம்பெறவுள்ளது.
இன்று வெள்ளிக்கிழமை இரவு பொங்கல் இடம்பெற்று பக்தர்கள் காவடிகள், பாற்காவடிகள் எடுத்து. நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவர்.
நாளை அதிகாலை அம்பாளுக்கான வளந்து வைத்தலுடன் பெரும் பொங்கல் விழா சிறப்பாக நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-39)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 17
சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் 'மத அடிப்படைவாதங்களும் மானுடத்தின் சிதைவும்' என்ற தலைப்பில் சிறப்புக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.
கொக்குவிலில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.
தாயகம் சஞ்சிகையின் முதன்மை ஆசிரியர் க. தணிகாசலம் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கலந்துரையாடலில் முதன்மை உரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் மற்றும் ஆங்கிலத் துறை விரிவுரையாளர் ம. திருவரங்கன் ஆற்றவுள்ளார். (ஐ)




கடந்த 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களில் உயிரிழந்த உறவுகளுக்கான அஞ்சலி நிகழ்வு சண்டிலிப்பாய் வி .என் அக்கடமி கல்வி நிலையத்தின் அண்மையில் நிறுவனத்தின் தலைவர் வி. ஜஜூபன் தலைமையில் இடம்பெற்றது.

## விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

சாவகச்சேரி, மே 17
வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகள் அடுத்தவாரம் தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளன.
கடந்த 2017 ஆம் ஆண்டு வரை வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து சுகாதாரத் திணைக்களத்தினரால் ஏற்றப்பட்டு வந்தன.
கடந்த வருடம் இப் பணி பரீட்சார்த்தமாக கால்நடைகள் மருத்துவர் பணியகங்களிடம் ஒப்படைக்கப்பட்டன.
இந்த வருடம் மீண்டும் சுகாதார மருத்துவர் பணியகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதால் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
இதன் பிரகாரம் சாவகச்சேரி சுகாதார மருத்துவர் பணியகத்தின் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் வரணி பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் நடைபெறவுள்ளது
தடுப்பூசி மருந்து ஏற்றுவது தொடர்பாக ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படுமெனவும் அன்றைய தினம் முன்னைய காலங்களில் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்ட நிலையங்களுக்கு தமது நாய்களைக் கொண்டு வருமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஐ-9-7)

## “இன்னல” கிழங்குச் செய்கை யாழ்ப்பாணத்தில் வெற்றிகரம்



யாழ்ப்பாணம், மே 17
உருளைக் கிழங்கை ஒத்த “இன்னல” என்ற சிறிய வகைக் கிழங்கு ஒன்றின் செய்கை திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் வெற்றியளித்துள்ளதாக மாவட்ட செயலக விவசாயப் பிரிவு தெரிவித்துள்ளது .
இன்னல என்று சொல்லப்படும் சிறிய வகை கிழங்கு, உருளை கிழங்கை போன்று காணப்படும். ஆரம்பத்தில் இந்தக் கிழங்கின் செய்கை குறைந்தளவில் யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்பட்டது.
பின்னர் உருளைக் கிழங்கின் வருகையை அடுத்து இந்த சிறிய கிழங்குச் செய்கை கைவிடப்பட்டது.
இது தென்னிலங்கையில் பரவலாக மிக அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்நிலையில் மீண்டும் யாழ்ப்பாணத்தில் அதனை உற்பத்தி செய்யவேண்டும் என்ற நோக்கில் திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் பயிரிடப்பட்டு அது வெற்றியளித்துள்ளது.
உருளைக்கிழங்கு சிறிதாக இருந்தால் எப்படி இருக்குமோ அதை போன்ற தோற்றத்தோடே இந்தக் கிழங்கு காணப்படும். அதிக கவனம் செலுத்தி பராமரிக்க வேண்டிய தேவையில்லை. உருளைக் கிழங்கைப் போன்றே நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது. மூன்று மாதத்தில் பயனை பெற முடியும்.
இதனை பயிரிடுவதற்கு சிறந்த காலப்பகுதி செப்டெம்பர் மாதம் என்பதால் இதனை பரீட்சார்த்தமாக சிறிய அளவில் பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

# பெரு மரங்களைத் தறிக்காது மின் மார்க்கம் அமையுங்கள்


## மூளாய் மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 17

மூளாய்ப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து மூளாய்ச் சந்திவரை உயரழுத்த மின்மார்க்கம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது என்று சுழிபுரம் மின்சார சபை சங்கானை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளது.

அந்த மின்மார்க்கம் அமைப்பதற்கு சில பெரிய மரக்கிளைகளை வெட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் மின்சார சபை கூட்டத்தில் தெரிவித்துள்ளது. மூளாய் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து மூளாய்ச் சந்திவரையே அதிகமான பழைமை வாய்ந்த மரங்கள் உள்ளன. அவை தற்போது பெரு விருட்சங்களாக உள்ளனஅந்த மரங்களின்கிளைகளை வெட்டி உயரழுத்த மின்மார்கத்தை அமைக்கத் திட்டமிடுவது தொடர்பாக மூளாய் பிரதேச மக்கள்கவலை தெரிவித்தனர். சங்கானைப்பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்றபோது அதில் கலந்து கொண்ட சுழிபுரம் மின்சாரசபையின் பொறுப்பதிகாரி, மின்சாரம் பற்றிய ஆராய்வுகளை தெரிவித்திருந்தார். இதன்போது மூளாய் பிள்ளையார் கோவிலில் இருந்து மூளாய் சந்தியை நோக்கிய உயரழுத்த மின்மார்க்கம் அமைக்கப்படவுள்ளது. அது ஒரு குறைந்த தூரம் தான். சுழிபுரம், தொல்புரம், கல்விளான், வடலியடைப்பு போன்ற பிரதேசங்கள் எல்லாம் வயல்களின் ஊடாகவே மின்சாரம் செல்கிறது. மின் துண்டிப்பு ஏற்படும் போது மக்கள் பெரும் துன்பப்பட்டார்கள். அதை நிவர்த்திசெய்வதற்கே இந்த மின்மார்க்கம் அமைக்கப்படவுள்ளது. இதன் போது பெரு மரங்களின் கிளைகள் வெட்டவேண்டிவரும். அதை பிரதேச செயலரின் அனுமதியுடன் செய்யலாம் என்று தெரிவித்தார்.

மின்சாரசபையின் இந்த நிலைப்பாடு தொடர்பில் மூளாய் மக்கள் கவலை தெரிவித்தனர். மின்சாரம் தேவையான ஒன்றுதான். அதற்காக பழைமையை அழிக்க இடமளிக்க முடியாது. கிளைகளை வெட்ட வேண்டும் என்றால், மரங்களே மொட்டை அடிக்க வேண்டிய நிலைதான் உருவாகும். மூளாய் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து, சந்திவரைதான் பழமைவாய்ந்த பெரும் மரங்கள் உள்ளன. அந்த மரங்களின் நிழல்களில் மக்கள் மட்டுமல்ல ஏராளமான பறவைகளும் உயிர்வாழ்கின்றன. மாணவர்கள், முதியவர்கள் என்று பலர் வெயிலால் வந்து மரநிழல்களில் சிறிது நேரம் இளைப்பாறியே செல்கின்றனர். தற்போது நிலவும் கடும் வெயிலிலும், ஆல், அரசு போன்ற பருத்த மரங்கள் மூளாயில் நிற்பதால், அந்த மக்களுக்கு அதிகம் பாதிப்பு இல்லை. அவற்றின் கிளைகளை வெட்டினால் மக்கள் புழுவாகத்தான் துடிக்க வேண்டும். பெரிய மரக்கிளைகளை வெட்டுவது என்ற யோசனையை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். வேறு வழிகளால் மின்மார்க்கம் அமைக்க முடியுமா என்பது பற்றியும் மின்சாரசபை சிந்திக்க வேண்டும் என்று மக்கள் தெரிவித்தனர். (எ-21)



## பொது நோக்கு மண்டபம் திறப்பு

மன்னார்,மே 17

தலைமன்னார் புனித லோறன்சியார் றோ.க.த.க. பாடசாலையில் அமைக்கப்பட்ட பொது நோக்கு மண்டபம் நேற்று முற்பகல் 9 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது.

இப் பாடசாலையில் நீண்ட காலமாக மாணவர்கள் பொது நிகழ்வுகளை நடத்துவதற்கு பொது நோக்கு மண்டபம் ஒன்று இல்லாத நிலையில் காணப்பட்டது.

இதனையடுத்து பாடசாலையின் அதிபரின் வேண்டுகோளுக்கமைய மன்னார் பிரதேசசபை உறுப்பினர் சாபிரின் பரிந்துரையுடன் லக்ஸ்மி கெண்டர் என்னும் நன்கொடையாளர் இந்த மண்டபத்துக்கான நிதியை ஒதுக்கியுள்ளார்.

தலைமன்னார் பியர் கடற்படை அதிகாரிகளால் இம் மண்டபம் சீரமைக்கப்பட்டு நேற்றைய தினம் பாடசாலை சமூகத்திடம் கையளிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# எமது பாதுகாப்பை நாம் கவனிப்போம் குண்டு செயலிழக்க வந்தால் போதும்

## சிவாஜிலிங்கம் இப்படித் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 17

எமது பாதுகாப்பை நாங்கள் பார்த்துக்கொள்வோம். இராணுவத்தினர் குண்டுகளைச் செயலிழக்கவைக்க மட்டும் வீதிக்கு வரட்டும் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் இராணுவத்தினரை நிறுத்துமாறு தமிழ் அரசியல்வாதிகள் கோருவார்களாயின் இராணுவத்தினர் மீதான போர்க் குற்றச்சாட்டு இல்லை என்பதாகிவிடுகிறது என்ற சாரப்பட இராணுவத் தளபதி அண்மையில் தெரிவித்திருந்தார். இது பற்றிக்கேட்ட போதே சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது தமிழ்த் தலைவர்கள் சொன்ன ஒரு சில கருத்துக்களை சிங்கள ஊடகங்கள் திரிவுபடுத்தி வெளியிட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா ஒரு கருத்தைக் கூறியிருக்கின்றார். அதேபோன்று, நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் ஒரு கருத்தைக் கூறியிருக்கின்றார்.

ஆனால், எமது தமிழ் மண்ணில் இருந்து இராணுவத்தினரை முழுமையாக வெளியேறுமாறு ஒருபோதும் கோரவில்லை, கோரவும் முடியாது. அப்படிக் கோருவதாயின் ஒரு தனிநாடாகத் தான் இருக்க முடியும்.

10 லட்சம் மக்களுக்கு 2 லட்சம் இராணுவம் என இருப்பது மோசமானது.

1983 ஆம் ஆண்டின் நிலமை போன்று சில எண்ணிக்கையான இராணுவத்தினரை மட்டும் வைத்துக்கொண்டு, நாடு பூராகவும் உள்ள எண்ணிக்கைக்கு சமமாக இராணுவத்தினரை மட்டுமல்ல முப்படையினரையும் வைத்திருக்குமாறு கோருகின்றோம்.

இராணுவத்தினர் தற்காலிகமாக சில கடமைகளைச் செய்கின்றார்கள் என வைத்துக்கொண்டு, இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க ஒரு கருத்தைக் கூறியிருக்கின்றார். அப்படியென்றால், போர்க் குற்றங்கள் இடம்பெறவில்லை என்பது மிகவும் வேடிக்கையாக இருக்கின்றது.

இன்றைய சூழ்நிலையை சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்ள விரும்புகின்றார்களா என்ற கேள்வி எழுப்ப விரும்புகின்றோம்.

போர்க்குற்றம் இடம்பெறவில்லை என்று, இந்தச் சந்தர்ப்பத்தில் இராணுவ சிப்பாய்கள், சந்திக்குச் சந்தியும், பாடசாலைகளிலும், இராணுவத்தினரை வைத்துக்கொண்டு சொல்கின்றீர்கள். இராணுவத்தை வெளியேற்றுங்கள் எமது பாதுகாப்பை நாங்கள் பார்த்துக்கொள்வோம்.

உண்மையில், பாடசாலைகள், கிராமங்கள், தேவாலயங்கள், கோவில்களில், பொது மக்களின் பாதுகாப்புத் தான் முக்கியமாக இருக்க முடியுமே தவிர, படைச் சிப்பாய்களை வைத்துக்கொண்டு, எத்தனை நாள்கள் தொடர்ந்து பாதுகாப்பு வழங்க முடியும் என்ற கேள்வி எழுகின்றது.

பாதுகாப்புப் படைகளால் பெரியளவில் வேலை செய்ய முடியாது. வேண்டுமென்றால், குண்டைக் கண்டு பிடித்ததன் பின்னர், செயலிழக்கச் செய்ய இராணுவத்தினர் வீதிக்கு வரட்டும். தேவைப்பட்டால், அதற்குக்கூட எமது தொண்டர் அணிகளை நிறுவ முடியும். ஆனால், சட்டத்தில் இடமில்லை என்று சொல்வீர்கள். முன்னாள் போராளிகள் மூலமாக வேனும் அதைச் செய்வோம். இப்போது அதைச் சர்ச்சையாக்க விரும்பவில்லை. நாம் நட்டாற்றில் நிற்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி போர்க்குற்றங்களில் இலங்கை இராணுவம் ஈடுபடவில்லை என்று ஏமாற்ற வேண்டாம் - என்றார். (த-106)

## முழுநிலாநாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே 17

யாழ்ப்பாணம் உரும்பிராய் ஞான வைரவர் ஆலய சனசமூக நிலையத்தின் முழுநிலா நாள் கருத்தரங்கு நிலைய மண்டபத்தில் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் ம.ரகுநாதன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் மறவன்புலவு க.சச்சிதானந்தம் வளவாளராக கலந்துகொண்டு "இன்றைய இலங்கையில் இந்து மதம்" எனும் தலைப்பில் உரையாற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## வெசாக் தினத்தில் குருதித் தானம்

முல்லைத்தீவு,மே 17

வெசாக் தினத்தினை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையகத்தால் குருதித் தானம் வழங்கப்பட்டது.

இந்தநிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் நேற்று நடைபெற்றது.

பாதுகாப்பு படையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் குருதிக்கொடை நிகழ்வில் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள 59, 64 ,68 ஆவது படைப்பிரிவின் தளபதிகள் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் துஸ்யந்த ராஜகுரு ஆகியோர் கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். (ஐ-ரி3)



# இளையோர் தலைமைத்துவப் பயிற்சிகளை யாழ்.பல்கலைக் கழகம் வழங்குவதில்லை!

## நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 17

இளையோருக்குத் தலைமைத்துவம் மற்றும் ஆளுமை தொடர்பான பயிற்சிகளை வழங்கி அவர்களை நல்வழிப்படுத்தும் எண்ணம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் குற்றஞ்சாட்டியுள்ளார்.



தனது வரவு - செலவுத்திட்ட நிதியிலிருந்து வடமராட்சி கிழக்கு பகுதிக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களைப் பகிர்ந்தளிப்பதற்கான கலந்துரையாடல் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு மற்றும் ஏனைய பல்கலைக்கழகங்கள் இளைஞர்களுக்கான பல்வேறு தலைமைத்துவ, ஆளுமைப் பயிற்சிகளை வழங்கி வருகின்றன. ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மட்டும் இளையோருக்கு ஆளுமைமற்றும்திறன்விருத்திப் பயிற்சிகளை வழங்கி அவர்களின் முன்னோக்கிய செயற்பாட்டுக்கு ஊக்குவிப்பதில்லை. இவை தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கதைத்தால் ஒவ்வொரு கதைகள் சொல்வார்கள் என்று மேலும் தெரிவித்தார்.

விளையாட்டு உபகரணங்கள் வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர்கே.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பருத்தித்துறைப் பிரதேச சபைத் தவிசாளர் அ.ச.அரியகுமார், சபை உறுப்பினர்களான ஆ.சுரேஸ்குமார், சி.பிரசாத், தியாகலிங்கம் இளையோர் நாடாளுமன்ற உறுப்பினர் உ.நிதர்சன் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் பிரதாப் மற்றும் வடமராட்சி கிழக்கு பகுதிக்கு உட்பட்ட விளையாட்டுக் கழக நிர்வாகிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-160)

## ஹெரோய்ன் வைத்திருந்தாரென கைதானவர் விளக்கமறியலில்

வவுனியா,மே 17
வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் ஹெரோய்ன் போதைப் பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சா ட்டில் ஒருவர் நேற்றுமுன்தினமிரவு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பண்டாரிகுளம் பாடசாலைக்கு அருகில் போதை பொருள் விற்பனை நடைபெறுவதாக வன்னித் தேர்தல் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய அவர் கைது செய்யப்பட்டார்.
அவரிடமிருந்து ஒரு கிராம் 144 மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதைப் பொதி மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபர் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபடுகிறார் என்று குற்றஞ்சாட்டி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு வவுனியா நீதிமன்றில் நடைபெற்றுவருகிறது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவத்தில் வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்தவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் நீதிவானிடம் நேற்று முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.
(த-110)

## ஹெரோன் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

கொழும்பு மே.17
கொழும்பு மட்டக்குளி பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மட்டக்குளி பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய சமித்புர பகுதியில் சுற்றிவளைப்பை முன்னெடுத்தபோதே 504 கிராம் ஹெரோய்னுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளளார்.
மட்டக்குளியைச் சேர்ந்த 55 வயதுடையவர் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடு த்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
(எ-71)

*யாழ்ப்பாணப் பல்கலையின்*

# கிளிநொச்சி வளாகத்துக்குள் பாதுகாப்புத் தரப்புச் சோதனை

கிளிநொச்சி, மே 17
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்துக்குள் பொலிஸாரும் படையினரும் இணைந்து நேற்றுச் சோதனை நடத்தினர்.




வரும் வாரத்தில் பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் இந்தச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
பல்கலைக்கழக நிர்வாகத்தினரின் கோரிக்கைக்கு அமைவாக சோதனை நடவடிக்கைகள் நடைபெற்றன என்று தெரிவிக்கப்பட்டது.
சுமார் 450 இராணுவத்தினர் மற்றும் 90 பொலிஸார் இணைந்து சோதனையில் ஈடுப்பட்டிருந்தனர். அங்கு செய்தி சேகரிக்க அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த 3ஆம் திகதி சோதனை நடத்தப்பட்டது. அதன்போதே மாணவர்கள் இருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டு மறியலில் இருந்து நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர். (த-214)

# சுகாதார சேவைகள் பணிப்பாளராக மருத்துவர் காண்டீபன் பதவியுயர்வு

*மன்னாரில் கடமைகளைப் பொறுப்பேற்கிறார்*

யாழ்ப்பாணம், மே 17
கிளிநொச்சி, மாவட்ட மருத்துவனையின் பணிப்பாளராகக் கடமையாற்றிய மருத்துவர் காண்டீபன் மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார்.
இன்று அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று தெரியவருகின்றது.
கடந்த ஆறு மாதங்களாக மருத்துவ விடுப்பில் இருந்த முன்னாள் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் மைதிலி மீண்டும் பணிக்குத் திரும்பியுள்ளார். மருத்துவமனைப் பணிப்பாளராகப் பணியாற்றவுள்ளார்.
சுகாதார அமைச்சால் மேற்கொள்ளப்படும் நிர்வாக மேம்படுத்தல் நடவடிக்கையின் ஒருபகுதியாக நாடளாவிய ரீதியில் மருத்துவ நிர்வாகத் துறையில் புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் இந்த மாத ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட 146 புதிய நியம னங்களை அடுத்து இரண்டாவது கட்டமாக நேற்றுமுன்தினம் மேலும் 30 மருத்துவ நிர்வாகத் துறை நியமனங்கள் நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கப்பட்டன.
கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைகள் பணிப்பாளராகக் கடமையாற்றிய மருத்துவர் த.காண்டீபன் மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று மாற்றலாகிச் செல்கின்றார். இவர்



கிளிநொச்சியில் கடமையாற்றிய குறுகிய காலப்பகுதியில் பல்வேறு அபிவிருத்திகளை வைத்தியசாலையில் மேற்கொண்டு மக்கள் மனதில் இடம்பிடித்திருந்தார். வவுனியா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளராகக் கடமையாற்றி மருத்துவர் க.செந்துராபதிராஜா மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்கின்றார். (எ-21.35)



# கிளிநொச்சி நூலகத்துக்கு ஒருலட்சம்பெறுமதியான நூல்கள் வழங்கிவைப்பு

கிளிநொச்சி,மே 17
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை நூலகத்துக்கு இந்தியத் துணை தூதரகத்தால் ஒரு லட்சம் பெறுமதியான நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.
இந்திய துணைத் தூதரகத்தின் யாழ்ப்பாணத்துக்கான கொன்சியூலர் பாலச்சந்திரன் கரைச்சிபிரதேசசபைக்கு நேற்றைய தினம் பயணம் ஒன்றினை மேற்கொண்டார்.
பயணம் மேற்கொண்ட அவர் கரைச்சி பிரதேச சபை மற்றும் பொதுநூலகத்தையும் பார்வையிட்டு நூல்களை வழங்கி வைத்தார்.
அதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையில்
"இந்திய அரசின் கல்வி கலாசாரம் மற்றும் புலமைப் பரிசில் பரிமாற்றம் குறித்தும் அதன் பங்காளிகளாக கரைச்சி பிரதேசசபையினர் இருக்க வேண்டும் என்றும் முறைப்படி திட்டங்கள் சமர்பிக்கப்படின் பொதுநூலகம் ஒன்றை கிளிநொச்சியில் அமைக்க உதவி அளிக்கமுடியும் என்றும் தெரிவித்தார்.
இந்த நிகழ்வில் கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன், பிரதேச சபைச் செயலர், சபை உறுப்பினர்களான சச்சியானந்தன், சிவமோகன் மற்றும் பிரதேச சபை அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
இந்திய தூதரகம் தொடர்ச்சியாக நூல்களை அன்பளிப்பு செய்து வருகிறது. இந்நிலையில் கடந்த வாரம் யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கும் நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளது. (ஜ-6,35)



# வவுனியா நூலகத்துக்கு 70 நூல்கள் அன்பளிப்பு

வவுனியா பொது நூலகத்துக்கு இந்தியத் துணை தூதரகத்தால் 70 நூல்கள் அடங்கிய தொகுதி நேற்று அன்பளிப்பாக வழங்கப்ப ட்டுள்ளன.
குறித்த நூல்களை இந்திய துனை தூதரகத்தின் யாழ்ப்பாணத்துக்கான கொன்சியூலர் பாலச்சந்திரன் வவுனியா நகரசபைத் தவிசாளர் இ.கௌதமனிடம் கையளித்தார்.
அதன் பின்னர் வவுனியா பொது நூலகத்தினையும் பார்வையிட்டார்.
இவ்வாறான நூல்கள் அடங்கிய தொகுதி முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட நூலகங்களுக்கும் நேற்றைய தினம் கையளிக்கப்பட்டன. (ஜ-110)

## மன். மீன் பிடி உபகரணங்கள் விற்பனை நிலையம் திறப்பு

மன்னார்,மே 17
மன்னார் பிரதேச மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மீன் பிடி உபகரணங்கள் விற்பனை நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.



விற்பனை நிலையத்தை முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்ராஸ் திறந்துவைத்தார்.
நிகழ்வில் மன்னார் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி சி.எஸ்.அமிர்தநாதன்,ஓய்வு பெற்ற மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஏ. செபமாலை, கூட்டுறவு அபிவிருத்தி அலுவலகர்,மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பிரதி நிதிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.
நீண்டகாலமாக கடமையாற்றி ஓய்வு பெற்ற மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஏ.செபமாலை இதன் போது மதிப்பளிக்கப்பட்டார். (ஜ-56)

# விபத்துக் காப்புறுதி செய்வது மீனவர்களுக்கு மிகவும் பயன்

*நீரியல் வளத் திணைக்களம் சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம்,மே 17
மீனவர்கள் விபத்துக் காப்புறுதி செய்வது பயனுள்ளதாக அமையும் என்று யாழ்ப்பாண மாவட்ட நீரியல் வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: கடலுக்குச் சென்று மீன் பிடியில் ஈடுபடுபவர்கள் எந்த நேரத்திலும் விபத்தில் சிக்கலாம். அவர்களின் தொழில் சவாலானது. ஆகவே அவர்கள் இவ்வாறு ஒரு காப்புறுதியை முற்கூட்டியே செய்தால் அவர்களுக்கு இழப்பீட்டு தொகை கிடைப்பதற்கு இலகுவாக அமையும்.
சாதாரணமாக திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட மீனவர்களாக இருந்தால் அவர்களுக்கு விபத்து இழப்பீட்டுத் தொகையாக அவரின் கும்பத்துக்கு அரசால் 10 லட்சம் ரூபா கிடைக்கும். காப்புறுதி செய்வதன் மூலம் மேலும் ஒரு தொகை கிடைக்கும்.
யாழ்ப்பாணத்தில் இதுவரை மூன்று மீனவர்களின் இழப்புக்கு இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது.
மேலும் மூன்று பேருக்கு இந்த தொகை கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத்தில் உள்ள சுமார் 21 ஆயிரம் மீனவர்களில் இதுவரை 4 ஆயிரத்து 839 மீனவர்கள் விபத்துக் காப்புறுதிக்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். இந்தக் காப்புறுதிச் சேவைக்காக வருடாந்தம் 995 ரூபா செலுத்தினால் போதுமானது. ஆகவே விபத்து காப்புறுதியை பதிவு செய்வதற்கு திணைக்களத்தில் ஆலோசனைகளை பெற்று கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-7)



# போர்க்காலத்தில் கூட இல்லாதளவுக்கு அச்சமான சூழலில் நாட்டு மக்கள்

## சாடுகிறது மகிந்த அணி

கொழும்பு, மே 17
நல்லாட்சி என்ற பெயரில் அறிமுகமாகிய அரசால் இதுவரையில் மக்கள் நெருக்கடிகளுக்கே முகம் கொடுத்து வருகின்றார்கள். 30 ஆண்டுகாலப் போரின் போது ஏற்படாத அச்ச நிலை இன்று மக்கள் மத்தியில் காணப்படுகின்றது.

தேசிய பாதுகாப்புத் தொடர்பில் மக்கள் எவ்வித நம்பிக்கையையும் கொள்ளவில்லை. மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவில்லை. இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம் அரசியல்வாதிகள் அடிப்படைவாதிகளுடன் தொடர்பு வைத்துள்ளார்கள் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி நீண்ட காலமாகத் தெரிவித்து வந்தது. நாம் கூறியபோது அரசு அதனைக் கண்டுகொள்ளவில்லை. கடந்த 21ஆம் திகதி தாக்குதலுக்குப் பின்னரா இவர்களுக்கு இது தெரியவந்தது?

முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டால் தேசிய நல்லிணக்கம் பாதிக்கப்படும் என்று குற்றவாளிகளை தொடர்ந்து பாதுகாத்தார்கள்.

நாடு இன்று எதிர்கொண்டுள்ள சவால்களுக்கு அரச தலைவரும், தலைமை அமைச்சருமே பொறுப்புக் கூற வேண்டும். இவ்விருவரின் அதிகாரப் போட்டியே நாட்டை நிர்மூலமாக்கியுள்ளது.

இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்களுடன் எவ்வித தொடர்பும் கிடையாது என்று முஸ்லிம் அரசியல்வாதிகளால் ஒருபோதும் குறிப்பிட முடியாது. கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் தொடர்பில் முஸ்லிம் அரசியல்வாதிகள் பொறுப்பற்ற விதமாகவே கருத்துரைத்துள்ளார்கள். பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது இவர்களது நோக்கமல்ல. எவ்வழியிலாவது தம்மைப் பாதுகாக்கவே அனைவரும் எதிர்பார்க்கின்றார்கள்.

அதுரலியரத்ன தேரர் கடந்த காலங்களில் இவர்களுடன் இணக்கமாகவே செயற்பட்டார். பல்வேறு அரசியல் முரண்பாடுகளின் காரணமாகவே இன்று அரசுக்கு எதிராக கருத்துரைக்கின்றார். ரிசாத் பதியூதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பிறர் தப்பித்துக் கொள்ளும் திட்டங்களுக்கு இடமளிக்க முடியாது.


தேசிய பாதுகாப்பை பலப்படுத்த அரசு முன்னெடுக்கும் விடயங்களுக்கு மாத்திரமே நிபந்தனையற்ற விதத்தில் ஆதரவு வழங்கவுள்ளோம். அரசு முன்னெடுக்கும் வேறெந்த விடயங்களுக்கும் ஆதரவு வழங்க முடியாது.

யாருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தாலும் பொதுமக்கள் முன்னணியினர் ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டோம். பொதுத்தேர்தலை விரைவாக நடத்துங்கள். யாரை நிராகரிக்க வேண்டும் என்பதை மக்களே தீர்மானிப்பார்கள் -என்றார்.

(ஓ.5,61)

# தீவிரவாத அச்சுறுத்தலை எதிர்க்க இலங்கையுடன் ஒன்றிணைவோம்

## சீனா உறுதியளிப்பு



கொழும்பு, மே 17
**தீவிரவாத அச்சுறுத்தலை இலங்கையுடன் ஒன்றிணைந்து எதிர்ப்பதற்கு தயாராக இருப்பதாகச் சீனா தெரிவித்துள்ளது.**

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அரசமுறைப் பயணமாக சீனாவுக்குச் சென்றிருந்தார். சீனாவின் உயர்மட்ட அரசியல் ஆலோசகர் வாங் யாங்கை கடந்த செவ்வாய்க் கிழமை சந்தித்தார்.

சீன மக்கள் அரசியல் ஆலோசனை கலந்துரையாடல் தேசிய குழுவின் தலைவரான வாங், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அரசின் முயற்சிகளுக்கு சீனா உறுதியான ஆதரவை வழங்கும் என்று இந்தச் சந்திப்பின் போது, தெரிவித்தார்.

இலங்கையுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்வதற்கு சீனா தயாராக இருப்பதாகவும், தீவிரவாத அச்சுறுத்தலை ஒன்றிணைந்து எதிர்ப்பதற்கு தயார் என்றும் அவர் கூறியுள்ளார்.

பல்வேறு துறைகளில் நட்புறவு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்திக் கொள்ளவும், மூலோபாய ஒத்துழைப்பை புதிய உச்சத்துக்கு கொண்டு செல்வதற்கும் சீனா தயாராக இருக்கிறது என்றும் வாங் யாங் குறிப்பிட்டுள்ளார். (ஓ,5)

# இலங்கை பௌத்தநாடே!

## அமைச்சர் மனோ கூறுகிறார்

கொழும்பு, மே 17
இன்று எமது அமைச்சர் ஒருவர், இந்த நாடு சிங்கள பௌத்த நாடு அல்ல என்று கூறியுள்ளதை அடிப்படையாக கொண்டு நாடு முழுக்க பெரும் வாதப் பிரதி விவாதங்கள் ஏற்பட்டுள்ளன. எனக்கு முன் உரையாற்றிய தேரரும் இதுபற்றி பேசினார். என்னைக் கேட்டால், சட்டப்படி இது பௌத்த நாடுதானே என்பேன். ஏனென்றால் அப்படித் தானே, இந்த நாட்டின் அரசமைப்பில் எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மங்கள சமரவீர மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில், இது சிங்கள பௌத்த நாடு அல்ல என்றும், சிங்கள பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழும் நாடும் என்றும் கூறியிருந்தார். இதற்கு பௌத்த தேரர்களிடமிருந்து கடுமையான எதிர்ப்புக் கிளம்பியிருந்தது. இது சிங்கள பௌத்த நாடு என்று ஏற்றுக் கொள்ளாதவர்கள் இங்கு இருக்கத்தேவையில்லை என்று சாடியிருந்தனர். இவ்வாறானதொரு நிலையிலேயே அமைச்சர் மனோகணேசன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் முன்னெடுப்பில் பண்டாரநாயக்கா பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் 'தேசிய வழி' என்ற தொனிப்பொருளில் நிகழ்ந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மனோ மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவரது ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டின் தலைமை அமைச்சர் பண்டாரநாயக்காவை படுகொலை செய்ததன் மூலம் இலங்கையில் பயங்கரவாதம், தனிநபர் பயங்கரவாதமாக தென்னிலங்கையிலேயே முதலில் ஆரம்பித்தது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். பின்னர் ஆயுத செயற்பாடுகள் பயங்கரவாத இயக்கங்களாக அறியப்பட்டு, சிங்கள பயங்கரவாதம் என்ற பெயரில் தெற்கில் சொல்லப்பட்டு, பின்னர் தமிழ் பயங்கரவாதம் என்ற பெயரில் வடக்கு - கிழக்கில் சொல்லப்பட்டு, இன்று ஐ.எஸ். என்ற பன்னாட்டுத் தொடர்புடன் இஸ்லாமிய பயங்கரவாதமாகச் சொல்லப்பட்டு வருகின்றது. இன்று பயங்கரவாதம் என்பதற்கு சிங்கள, தமிழ், இஸ்லாமிய அடைமொழி



கள் இந்நாட்டில் இருக்கின்றன. இவற்றுடன் கூடவே இந்நாட்டில் அரச பயங்கரவாதமும் இருக்கின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்த நிலையில், 'இவை இனி போதும், போதவே போதும்' என்று கூறி புதிய தேசிய ஐக்கிய வழியை தேடும் காலம் உதயமாகிவிட்டது என்று நான் நம்புகிறேன்.

நாம் அனைவரும் இலங்கையர்தான். ஆனால், ஏன் நம்மில் ஒரு பிரிவினர் இலங்கையர் என்று கூறுவதைவிட, தம்மை சிங்கள பௌத்தர் என்று வரையறைப்படுத்தி அழைக்க விரும்புகின்றனர் என்று யோசிக்க வேண்டும்.

அவர்களுக்கு சிங்கள பௌத்தர் என்ற காரணத்தால் சிறப்புப் பிரச்சினைகள் உள்ளன. பல சந்தேகங்களும், பயங்களும், கேள்விகளும் இருக்கின்றன. அவற்றுக்கு விடை காணும் வரை, இந்த சிங்கள பௌத்த வரையறை இருக்கத்தான் செய்யும்.

இந்நாட்டில் தமிழர்களுக்கும், தமிழர் என்ற காரணத்தால் பிரச்சினைகள் உள்ளன. பல சந்தேகங்களும், பயங்களும், கேள்விகளும் உள்ளன. இதுபோலவே மத அடிப்படைகளில் இந்நாட்டில் இஸ்லாமியர்களுக்கும், கத்தோலிக்கர்களுக்கும் பிரச்சினைகளும், சந்தேகங்களும், பயங்களும், கேள்விகளும் உள்ளன.

இந்த அனைத்து சந்தேகங்களுக்கும், பயங்களுக்கும், கேள்விகளுக்கும் விடை காண வேண்டும். ஒருவரை ஒருவர் அறிய வேண்டும். அதுவரை, இந்நாட்டில் நாம் இலங்கையர் என்பது கனவாகவே இருக்கும். நமது அண்டை நாடான இந்தியாவில் பல மொழிகள் பேசப்படுகின்றன. பல இனங்கள் வாழ்கின்றன. அவர்கள் மத்தியிலே சண்டை, சச்சரவுகள்,, பிரச்சினைகள் உண்டு. ஆனால், அவர்கள் தம் பிரச்சினைகளை கடந்து, 'நாம் இந்தியர்' என ஒன்று படுகிறார்கள். அந்நிலைமை இங்கே இல்லை. அதை இங்கே உருவாக்க வேண்டும் - என்றார். (ஓ,5)

# "நான் திரும்பி வரமாட்டேன் பெற்றோரை கவனிக்கவும்"

## தற்கொலைதாரியின் கடிதம்

கொழும்பு, மே 17
கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தில் தற்கொலைத் தாக்குதல் நடத்திய அகமட் ம்முகத் அலாவுதீன், தாக்குதலுக்கு முன்னதாக தனது சகோதரனுக்கு எழுதியுள்ள கடிதத்தில், தான் திரும்பி வரப் போவதில்லை என்றும் பெற்றோரை கவனமாக பார்த்துக் கொள்ளும்படியும் குறிப்பிட்டிருந்தார் என்று அவரது மைத்துனர் சாட்சியம் அளித்துள்ளார்.

கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்தில் கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி குண்டுத் தாக்குதலை நடத்திய தற்கொலைக் குண்டுதாரியின் உடற்கூற்றாய்வு அறிக்கை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் கடந்த செவ்வாய்க் கிழமை சமர்ப்பிக்கப்பட்டது.



தற்கொலைக் குண்டுதாரியான, அகமட் முகத் அலாவுதீனின் தயாரான, வகீர் மொகமட் பல்கீஸ் நீதிமன்றத்தில் முன்னிலையாகி, சாட்சியம் அளித்தார். தனது கணவனும் மகனும் வேலையை இழந்த பின்னர், தனது குடும்பத்தை, அலாவுதீனும் அவரது குடும்பத்தினருமே கவனித்துக் கொண்டனர் என்று கூறினார். தனது மகனான குண்டுதாரி அலாவுதீனை அவர் அடையாளம்காட்டினார்.

சட்டமருத்துவ அதிகாரி உடற்கூற்றாய்வு அறிக்கையை சமர்ப்பித்ததுடன், பெற்றோரினது மரபணுவுடன், குண்டுதாரியின் மரபணு பொருந்துவதாகவும் அறிக்கையை சமர்ப்பித்தார்.

மட்டக்குளியை சேர்ந்த அகமட் லெப்பை அலாவுதீன், சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்றார் என்றும், சாய்ந்தமருதைச் சேர்ந்த சபீனா சேனுல் ஆப்தீனை திருமணம் செய்திருந்தார் என்றும் அவரது தந்தையாரும் நீதிமன்றில் சாட்சியம் அளித்தார்.

அவர், குண்டுவெடிப்பில் துண்டிக்கப்பட்ட அலாவுதீனின் தலையை தனது மகன் தான் என்று அடையாளம் காட்டியிருந்தார். (ஓ.5)

# நாட்டில் அமைதி ஏற்படுத்துவது அனைவரினதும் பொறுப்பாகும்

## அஸ்கிரிய, மல்வத்து பீடங்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 17

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் மேற்கொள்ளப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலமையை போக்கி நாட்டுக்குள் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை நாட்ட வேண்டியதும் ஆளும் தரப்பினரதும் எதிர்த்தரப்பினரதும் பொறுப்பாகும் என்று அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்கள் வலியுறுத்தியுள்ளன.

சில தினங்களாக நாட்டின் சில பிரதேசங்களில் மூண்டுள்ள வன்முறைச் சம்பவங்கள்தொடர்பாகவும், அமைச்சர் ஒருவர் இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு அல்ல எனத் தெரிவித்திருப்பது தொடர்பாகவும் பீடங்களின் மகா நாயக்கர்களால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அஸ்கிரிய பீடத்து மஹாநாயக்கர் திப்பட்டுவாவே சிறிசித்தார்த்த தேரர், அமரபுர பீடத்து மாநாயக்கர் கொடுகொட தம்மாவாச தேரர் மற்றும் சிறிலங்கா இராமாண்ய பீடத்து மாகாநாயக்கர் நாபால பிரேமசிறி தேரர் ஆகியோரின் கையெழுத்துடன் இந்த அறிக்கை வெளியிடப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

அரசியல் தலைவர்கள் நாட்டை பற்றிச் சிந்திக்காது அவர்களின் வாக்குகளை பெருக்கிக் கொள்ளும் நோக்கிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதன் விளைவுகளையே இன்று நாடு அனுபவிக்கின்றது . நாட்டுக்குள் அமைதியை ஏற்படுத்துவது ஆளும் கட்சியினதும், எதிர்க்கட்சியினதும் பொறுப்பாகும். ஆனால் இவர்கள் தமது அரசியல் இலாபத்துக்காக அந்த பொறுப்பிலிருந்து மீறிச் செயற்படுகின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியற்ற நிலமையில் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவர் இது சிங்கள பௌத்தர்களின் நாடல்லஎனக்குறிப்பிட்டிருப்பது வன்முறையை ஊக்குவிக்கக் கூடும். இந்நிலமை எரியும் நெருப்பில் எண்ணை ஊற்றுவது போன்றதாகும்.

நாட்டின் மாநாயக்க தேரர்கள் என்ற வகையில் நாங்கள் பல ஆலோசனைகளை முன்வைத்தாலும், அவற்றைப் பொருட்படுத்தாமல் அரசியல் தலைவர்கள் செயற்படுவது கவலைக்குரியதாகும். இவ்வாறான நிலமையிலே இந்த விடயங்கள் தொடர்பான கருத்துக்களை நாங்கள் மீண்டும் மீண்டும் தெரிவிக்க வேண்டிய நிலமைகள் ஏற்படுகின்றன.

இந்த நெருக்கடியான நிலமையில் பாதுகாப்புப் படையினருடன் இணைந்து செயற்படுவதும் முக்கிய மாகும். மீண்டும் நாட்டில் பாதுகாப்பை நிலை நாட்டுவதன் மூலம் மக்கள் மத்தியில் பாதுகாப்புக் குறித்தும் நம்பிக்கையையும் ஏற்படுத்த வேண்டும். (எ-31)

# அனைத்து முஸ்லிம் மக்களையும் சந்தேகத்தோடு பார்க்கக் கூடாது

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா,மே 17

தமிழ் மக்களின் போராட்டம் அவர்களின் விடுதலைக்காக ஆரம்பிக்கப்பட்டிருந்தது என்பதை பல தரப்பினரும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

ரெலோவின் வவுனியா மாவட்ட முன்னாள் பொறுப்பாளர் கிறிஸ்ரி குகராஜாவின் (குகன்) 20 ஆம் ஆண்டு நினைவு தினம் வவுனியா வைரவர் புளியங்குளத்தில் அமை ந்துள்ள அவரது நினைவுத் தூபியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு அவர் தெரிவித்ததாவது:

தற்போதைய பயங்கரவாதம் எமது மக்களை கடுமையாகப் பாதித்துள்ளது. தமிழர் பகுதிகளிலே இராணுவ சோதனைச் சாவடிகள் பல அமைக்கப்பட்டுள்ளன. மக்களை அச்சத்துக்குள் வைத்திருக்கும் சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதைப் போர்க் காலத்துடன் ஒப்பிடமுடியும். சோதனை செய்வது தவறில்லை, அது கெடுபிடியாக மாறக்கூடாது.

தவிர, ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களையும் பயங்கரவாதிகளாகப் பார்கின்ற நிலமை காணப்படுகின்றது, அது நிறுத்தப் படவேண்டும். முஸ்லிம் மக்கள் மீது தொடர்ந்தும் அடக்குமுறைகளைப் பிரயோகிக்கும்போது அவர்களின் நிலையில் மாற்றம் ஏற்படும். அது பயங்கரவாதிகளுடன் இணைந்தால் என்ன என்று எண்ணும் சூழலை அவர்களிடத்தில் உருவாக்கிவிடும். அந்தச் சூழலை ஏற்படுத்திவிடகூடாது.

மக்களை நிர்க்கதிக்குள் தள்ளுகின்ற நிலமையை ஏற்படுத்திவிட்டு அரசதலைவர் சீனாவுக்குச் சென்றுள்ளார். ஊடகங்கள் தமது பணியை மிகச் சிறப்பாகச் செய்து வருகின்ற நிலையில் அவர்களுக்குச் சேறுபூசும் நடவடிக்கைகளைச் சிலர் மேற்கொள்கின்றார்கள். அது கண்டிக்கப் படவேண்டியது. போராட்ட காலங்களில் பல்வேறு விடயங்களை ஊடகங்களே வெளிக்கொணர்ந்திருந்தன - என்றார்.

**ரிசாத் விடயத்தை பரிசீலிப்போம்**

ரிசாத் பதியூதீன் மீது முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்குவீர்களா என்று நாடாளுமன்ற உறுப்பினரிடம் கேட்டபோது, அவர் குற்றவாளியாகக் கருதப்படுகின்ற பட்சத்திலே அதனை நாம் பரிசீலிக்க முடியும். இந்தவிடயத்தில் நாம் உடனடியாகப் பதில் சொல்ல முடியாது என்றார்.

அஞ்சலி நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வினோநோகராதலிங்கம், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் செ,மயூரன், பிரதேசசபைத் தவிசாளர் து.நடராஜசிங்கம், உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-110)

# சூட்சும முறையில் பாடத்தில் இஸ்லாமிய அரசாட்சி சேர்ப்பு

## குற்றம் சுமத்துகிறது இந்து சம்மேளனம்

கொழும்பு, மே 17

அல்முஸ்தபா பன்னாட்டுப் பல்கலைக் கழகத்தின் கற்கைநெறியில் விருப்புக்குரிய பாடமாக இஸ்லாம் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. மாறாக பிரதான பாடமான அரசறிவியல் விஞ்ஞானத்தில், இஸ்லாமிய அரசாட்சி மற்றும் யாப்பியல் ரீதியான மரபுகள், சட்டதிட்டங்கள் என்ற தலைப்பில் மிகவும் சூட்சுமமான முறையில் அது செருகப்பட்டுள்ளது. இது எமது சமுதாயத்தை மத ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் அடகுவைக்கும் செயற்பாடு என்பதுடன், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான பேரழிவுத் திட்டம் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு இலங்கை இந்து சம்மேளனத்தின் தலைவர் டி.அருண்காந்த் தெரிவித்தார்.

அல்முஸ்தபா பன்னாட்டுப் பல்கலைக்கழகத்தின் கிளை பதுளையில் அமைந்துள்ளது. தனியார் பல்கலைக்கழகமாகச் செயற்பட்டு வருகின்றது. ஐ.எஸ். தீவிரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில், கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவால் அமைக்கப்பட்டு வரும் பல்கலைக்கழகம் தொடர்பில் சர்ச்சை எழுப்பப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து, அல்முஸ்தபா பன்னாட்டுப் பல்கலைக் கழகத்தால் அரபு மொழி கட்டாயமாகத் திணிக்கப்படுவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்தன.

இவ்வாறானதொரு நிலையிலேயே, இலங்கை இந்து சம்மேளனத்தின் தலைவர் டி.அருண்காந்த் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அல்முஸ்தபா பன்னாட்டுப் பல்கலைக் கழகத்தால் ஊவா மாகாணத்தில் மலையக இளையோருக்கு இஸ்லாம் மற்றும் அரபு மொழிகளை உள்ளடக்கிய இளமாணி பட்டப்படிப்பு கற்கைநெறி நடத்தப்பட்டு வருவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்தன. நாங்கள் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தோம். அங்கு மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பாடக்குறிப்புகள், வினாப்பத்திரம் போன்றவற்றையும் சேகரித்து ஆய்வு செய்தோம். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கிய கடிதத்தையும் ஆய்வு செய்து சில முடிவுகளை எடுத்திருக்கிறோம். கற்கைநெறியில் விருப்புக்குரிய பாடமாக இஸ்லாம் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. மாறாக பிரதான பாடமான அரசறிவியல் விஞ்ஞானத்தில் இஸ்லாமிய அரசாட்சி மற்றும் யாப்பியல் ரீதியான மரபுகள், சட்டதிட்டங்கள் என்ற தலைப்பில் மிகவும் சூட்சுமமான முறையில் செருகப்பட்டுள்ளது. இந்தப் பாடநெறியைக் கற்கும் மாணவர்கள் இயல்பாகவே அரபு மொழியைக் கற்பதற்குத் தூண்டப்படும் விதமாகவே இது வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட பாடக்குறிப்புப் பிரதிகளில் இஸ்லாம் ஒரு பிரதான பாடமாகவே கற்பிக்கப்பட்டுள்ளது - என்றார். (ஒ.5,31)

# தேடப்பட்டவர் கைதாகினார்

கொழும்பு, மே 17

கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் கடந்த மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில், தேடப்பட்டு வந்த சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொச்சிக்கடை பிரதேசத்தில் குண்டு பொருத்தப்பட்டிருந்த வாகனத்தை, கொள்வனவு செய்ய உதவியமை மற்றும் அதன் ஆசனங்களை அமைக்க உதவிய குற்றச்சாட்டிலேயே காத்தான்குடி பிரதேசத்தில் வைத்து அவர் பொலிஸாரல் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரைத் தேடுவதாகப் பொலிஸார் அறிவித்திருந்த நிலையிலேயே அவர் கைதாகியுள்ளார். (ஒ.5)

# தேசிய பாதுகாப்புத் தடைகளை ஏற்படுத்துவோரை அறியக் குழு

## வலியுறுத்துகின்றார் பிரதி அமைச்சர் கருணாரத்ன

தேசிய பாதுகாப்பில் ஏற்பட்ட இடைவெளி தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைத்து விசாரணை நடத்தப் படவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையெழுத்துடன் அதற்கான மனுவை சபாநாயகருக்குக் கையளிக்க உள்ளோம்.

இவ்வாறு பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதாரன தெரிவித்தார்.

தேசத்துக்கான வழி அமைப்பு நேற்று இலங்கை மன்றக் கல்லூரியில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய பாதுகாப்பில் ஏற்பட்டிருந்த இடைவெளி காரணமாகவே உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுக்க முடியாமல் போயிருந்தது. அதனால் இதற்கு காரணமாக இருக்கும் அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். தாக்குதல் இடம்பெற்று சில தினங்களில் இதுதொடர்பாக நாடாளுமன்ற விவா தம் நடைபெற்றது. விவாதத்தில் அதிகமானவர்கள் ஒருவருக்கொருவர் குற்றம்சாட்டினரே தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை.

அதனால் தற்போதும் இது தொடர்பாக பேசுவதாக இருந்தால் ஒருவரை ஒருவர் விரல் நீட்டிக்கொண்டிருக்கலாம். அதனால் தேசிய பாதுகாப்பில் இவ்வாறான இடைவெளி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாக இருந்தவர்கள் யார் என்பதை அறியவேண்டும். அதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைத்து சம்பந்தப்பட்ட அனைவரிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

**சபாநாயகருக்கு மனு**

விசாரணைக்குழுவின் அறிக்கை வெளிப்பட்டதும் இதற்கு யார் பொறுப்பு என்பதை அறிந்துகொள்ளலாம். அதனால் இது தொடர்பான மனு ஒன்றை சபாநாயகர் கருஜயசூரியவிடம் கையளிக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அதில் கையெழுத்திடுவார்கள் என்ற நம்பிக்கை எமக்கிருக்கின்றது. இதற்கு ஆளும், எதிர்க்கட்சி என யாரும் எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார்கள்.

**சர்வ மதக்கல்வியின் அவசியம்**

மதக்கல்வியை ஒழுங்குறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். அனைத்து இன மாணவர்களும் பிற மதக்கல்வியை கற்கும் மதக்கல்வி முறைமை ஒன்றை ஏற்படுத்தவேண்டும். மதக் கல்விக்கான பாடத்திட்டங்களை அமைப்பதற்கு சர்வ மத ஆலோசனைக் குழு ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும். அனைத்து மதக்கல்வியும் இந்த ஆலோசனைக்குழுவால் கண்காணிக்கப்பட வேண்டும். இவ்வாறான வேலைத் திட்டங்கள் மூலமே மத அடிப்படைவாதங்கள் தலைதூக்காமல் பாதுகாக்கலாம் -என்றார். (எ-31)

# சிங்கப்பூர் சென்றது சமுத்ரா

இலங்கை கடற்படையின் சமுத்ரா கப்பல் சிங்கப்பூர் ஷெங்கி துறைமுகத்தை அடைந்துள்ளது.

சிங்கப்பூரில் இடம்பெறவுள்ள சமுத்திர பாதுகாப்பு கண்காட்சியில் பங்குபற்றுவதற்காகவே சமுத்ரா கப்பல் அங்கு சென்றுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 6 ஆம் திகதி திருகோணமலை துறைமுகத்தில் தனது பயணத்தை ஆரம்பித்த சமுத்ரா ஷெங்கிதுறைமுகத்தை அடைந்ததுடன், சிங்கப்பூர் கடற்படையினரால் சம்பிரதாயப்பூர்வமாக வரவேற்கப்பட்டது.

இந் நிகழ்வில் சிங்கப்பூருக்கான இலங்கையின் பதில் தூதுவர் மற்றும் அதிகாரிகள் இணைந்து கொண்டிருந்தனர். 33 நாடுகளின் கடற்படையினர் இந்தக் கண்காட்சி நிகழ்வில் கலந்துக்கொள்ள உள்ளனர்.

நான்கு நாள்கள் இடம்பெறவுள்ள இந்த கண்காட்சி செயற்பாடுகளில் கலந்துக் கொண்டு எதிர்வரும் 17 ஆம் திகதி சமுத்ரா நாடு திரும்ப உள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-61)

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் 85 பேர் இதுவரையில் கைது

## *அவர்களில் 10 பேர் பெண்கள்*

கொழும்பு, மே 17

ஈஸ்டர் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் இதுவரை 85 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 10 பேர் பெண்கள் என்று பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தி யட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் ரி.ஐ.டி எனப்படும் பயங்கரவாத தடுப்பு பிரிவு மற்றும் விசாரணைப் பிரிவு ஆகியவற்றுக்கு பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்னவின் கீழ் முன்னெடுக்கப்படும் விசாரணைகளிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் அந்த பிரிவுகளில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர குறிப்பிட்டார்.

அத்துடன் பயங்கரவாதிகள் பயன்படுத்திய 17 பாதுகாப்பு இல்லங்களும் 7 பயிற்சி முகாம்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ம)

# பாடசாலைகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது!

## *மாணவர்களை அனுப்புங்கள் என அமைச்சர் அகிலவிராஜ் கோரிக்கை*



கொழும்பு, மே 17

பாடசாலைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவித்தார் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம். இதனால், வதந்திகளுக்கும், போலிப் பரப்புரைகளுக்கும் ஏமாறாமல் பிள்ளைகளைபாடசாலைகளுக்கு அனுப்புமாறு அமைச்சர் பெற்றோரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு, ஊவா மாகாணங்களில் மாணவர்களின்வருகை 70 சதவீதமாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

கொழும்பின் முதன்மைப் பாடசாலைகளை தவிர, ஏனைய பாடசாலைகளில் மாணவர்களின் வருகை போதிய அளவில் காணப்படுகின்றது. கிழக்கு மாகாண பாடசாலைகளில் மாணவர்களின் வருகை 55 சதவீதத்தைத் தாண்டியுள்ளது. பிரதேச பாடசாலைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. வடமாகாண பாடசாலைகளில் மாணவர்களின் வருகை 70 சதவீதத்தை எட்டியுள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# பொலிஸ் அத்தியட்சகர் அதிரடியாக இடமாற்றம்

கொழும்பு, மே 17

குளியாப்பிட்டியில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களையடுத்து, குளியாப்பிட்டியப் பொலிஸ் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் அதிரடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் பிரதிப் பணிப்பாளராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இதேவேளை, நுகேகொடை பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் குளியாப்பிட்டிப் பொலிஸ் பிரிவுக்கு அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமையும் மறுநாள் திங்கட்கிழமையும் குளியாப்பிட்டிப் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் குளியாப்பிட்டியப் பொலிஸ் அத்தியட்சகர் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# தோற்றுப்போகும் தீர்மானத்தால் ரிசாத்தின் செல்வாக்கு பெருக்கம்

## *பொது எதிரணியினருடனான சந்திப்பில் சீறிப் பாய்ந்தார் மகிந்த*

கொழும்பு, மே 17

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவை நேற்று நேரில் சந்தித்த பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரரினால் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்குமாறு கோரியுள்ளனர்.

அதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்களும் மகிந்தவைத் தனியாகச் சந்தித்து தீர்மானத்துக்கு ஆதரவு வழங்குமாறு கேட்டுள்ளனர். எனினும், இரு சந்திப்புகளிலும் சாதகமான பதிலை மகிந்த வழங்கவில்லை.

'அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் சில தவறுகள் உள்ளன. அதனை அவசரப்பட்டு இப்போது ஏன் சமர்ப்பிக்க வேண்டும்? அதில் உள்ள தவறுகள் தீர்மானம் தோற்பதற்கே வழிவகுக்கும். தோற்கும் தீர்மானத்தைக் கொண்டுவந்து ரிசாத்துக்கான செல்வாக்கைப் பெருக்காதீர்கள். எனவே, முதலில் தீர்மானத்தில் உள்ள தவறுகளைத் திருத்துங்கள். அதன்பின்னர் அதனை ஆதிப்பதா? இல்லையா? என்று நான் முடிவெடுப்பேன்' என்று மேற்படி சந்திப்புகளில் சீறிப் பாய்ந்துள்ளார் மகிந்த.

குறித்த தீர்மானத்துக்கு பசில் ராஜபக்ச தலைமையிலான அணியினரும் இன்னும் ஆதரவு வழங்கவில்லை.

'வெறுமனே தீர்மானங்களை மட்டும் கொண்டுவந்து பயனில்லை. அது நிறைவேற்றப்படவேண்டும். ஆனால், பொது எதிரணியிடம் அதற்கான பெரும்பான்மை இல்லை. ஜே.வி.பியின் ஆதரவுகூட அவசியம்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார். (ம-22)

# இலத்திரனியல் பொருள்களுடன் வந்த பெண் விசாரணைக்கு

யாழ்ப்பாணம், மே 17

பேரப்பிள்ளைகள் விளையாடுவதற்கென்று இலத்திரனியல் பொருள்களைக் கொண்டுவந்த ஜேர்மன் குடியுரிமைபெற்ற 70 வயதுப் பெண்ணை இராணுவத்தினர் சந்தேகத்தில் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அவரிடம் வாக்குமூலம் பெற்ற பின்னர் அவரைப் பொலிஸார் விடுதலை செய்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தொடருந்தில் வந்த 70 வயதுப் பெண்ணொருவரை இராணுவத்தினர் சந்தேகத்தில் சோதனையிட்டனர்.

அவருடைய உடமையில் இலத்திரனியல் பொருள்கள் இருந்தன. அதனையடுத்தே இராணுவத்தினர் அவரைப் பிடித்து யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு அவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தினர்.

அதன்போது யாழ்ப்பாணம் மானிப்பாயிலுள்ள உள்ள தனது பிள்ளையின் வீட்டுக்கு வந்ததாகவும் பேரப்பிள்ளைகளுக்காக ரிமோட் கார், அதற்கான ரிமோட் மற்றும் பற்றரிகள் உள்ளிட்ட இலத்திரனியல் விளையாட்டுப் பொருள்களைக் கொண்டு வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து அவரைப் பொலிஸார் விடுவித்தனர். (த-37)

# மூத்த பொலிஸ்மா அதிபரின் கீழ் பயங்கரவாத விசாரணைப் பிரிவு

கொழும்பு, மே 17

பயங்கரவாத விசாரணை பிரிவு குற்றப்புலனாய்வுத்திணைக்களத்துக்குப் பொறுப்பான மூத்த பிரதி பொலிஸ்மா அதிபரின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது. சேவையின் அவசியம் கருதி பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரம ரத்னவால் இந்த தீர்மானம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் பயங்கரவாத விசாரணைப் பிரிவு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு பொறுப்பான மூத்த பிரதி பொலிஸ்மா அதிபரின் கீழ் இயங்கியுள்ளதுடன், அதன்பின்னர் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவினால் அந்தப் பிரிவு அவருக்கு கீழ் கொண்டுவரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மன்னார் மாவட்ட காணி இணக்க சபை அமர்வு

மன்னார், மே 17

மன்னார் மாவட்ட காணி சிறப்பு இணக்க சபை அமர்வு நாளை சனிக்கிழமை மன்னார் அல்அஸ்ஹர் தேசிய பாடசாலையில் இடம்பெறும் என்று தவிசாளர் எம்.ஆர்.பிறின்ஸ் டயஸ் தெரிவித்தார். நாட்டில் இடம் பெற்ற அசாதாரண சூழ்நிலையின் காரணமாக இணக்க சபை இடம்பெறாமல் இருந்தது. தற்போது பொதுமக்களின் நலன்கருதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. மன்னார் மாவட்டத்தில் காணி தொடர்பான பிணக்குகளை தீர்க்கும் வகையில் பொது மக்கள் மேற்படி சபை அமர்வில் கலந்து கொண்டு தமது காணி தொடர்பான பிரச்சினைகளை ஆற்றுப்படுத்திக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-56)

# சட்டத்தை அனைவரும் சரிவர கடைப்பிடிக்குக

## *மகிந்த வேண்டுகோள்*

கொழும்பு, மே 17

சட்டம் ஒழுங்கை கடைப்பிடிக்குமாறு எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச அனைத்து அரசியல் கட்சியினரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவரால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ள கீச்சகப் பதிவிலேயே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. மக்கள் தற்போது உணர்ச்சிவசமான செயல்களில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், இந்த நிலைமையை மேலும் மோசமடையச் செய்யும் வகையில் அரசியல் தலைவர்கள் செயற்படக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசியல் தலைவர்களின் கடமை. அதற்கமைய இத்தருணத்தில் சட்டம் ஒழுங்கை கடைப்பிடிப்பது முக்கியமானதாகும் என்றும் அவர் தனது கீச்சகத்தில் குறிப்பிட்டுள்ளார். (ம)

# நாமல் குமார சி.ஐ.டியினர் கைகளில்

கொழும்பு, மே 17

ஊழல் எதிர்ப்பு அமைப்பின் செயற்பாட்டுக் குழு பணிப்பாளர் நாமல் குமாரவை குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றனர்.

வரகாபொல பொலிஸ் நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை முறைப்பாடொன்றை பதிவு செய்வதற்காக வந்தபோது அவர், கைது செய்யப்பட்டிருந்தார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவரைக் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் பொறுப்பேற்று தடுத்து வைத்துள்ளனர். எனினும் அவர் கைது செய்யப்பட்டமைக்கான காரணம் எதுவும் இதுவரையில் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# ஸஹ்ரான் குழுவின் 17 மறைவிடங்கள் 7 பயிற்சி முகாம் இதுவரை முற்றுகை!

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

*கொழும்பு, மே 17*

*பயங்கரவாதிகளுடன் நேரடியாகத் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த மாதம் 21ஆம் திகதி முதல் இதுவரை 85 சந்தேகநபர்கள் பயங்கரவாத தடுப்புப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பயங்கரவாதிகள் பயன்படுத்தி வந்த 17 பாதுகாப்பான மறைவிடங்களையும் 7 பயிற்சி முகாம்களையும் கண்டுபிடித்துள்ளோம். இவ்வாறு பொலிஸ் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.*

பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தாக்குதல் நடத்தப்பட்ட நாள் தொடக்கம் சம்பவத்துடன் அல்லது பயங்கரவாதிகளுடன் தொடர்புபட்டவர்கள் என்ற அடிப்படையில் இதுவரை 85 பேர் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடுப்புப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்கள பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இவர்களில் எட்டு பெண்கள் உள்பட 65 பேர் குற்றப் புலனாய்வு திணைக்கள பொலிஸாராலும் இரண்டு பெண்கள் உட்பட 20 பேர் பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸாராலும் தடுத்து வைக்கப்பட்டு தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மூலமே பயங்கரவாதிகள் பயன்படுத்திய மறைவிடங்களும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திய பயிற்சி நிலையங்களையும் கண்டுபிடித்துள்ளோம்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் மூத்த பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தலைமையில் இந்தப் பயங்கரவாதிகள் தொடர்பான விசாரணைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மறைவிடங்கள்:**

கட்டுவாப்பிட்டிய நீர்கொழும்பு, சரிக்கமுல்லை பாணந்துறை, புனித அந்தோனியார் வீதி கொழும்பு 3, டெம்ப்ளஸ் வீதி கல்கிஸை, வணாத்தவில்லு புத்தளம், ஹெண்டேரமுல்ல வத்தளை, மயூரா பிளேஸ் கொழும்பு 6, சாய்ந்தமருது அம்பாறை, மள்வானை, திஹாரிய கலஹெடிஹேன, கொச்சிக்கடை தலுவகொடுவ, வாழைச்சேனை ரிதிய தென்ன, சுபாரதிபுர குளியாப்பிட்டி, ஹெட்டி பொல குருநாகலை, கடுபொத்த, நிந்தவூர் மற்றும் சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் உள்ள மறைவிடங்களே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**பயிற்சி நிலையங்கள்:**

வணாத்தவில்லு, அம்பந்தோட்டை, நுவரெலியா, கண்டி அருப்பொல, மள்வானை, காத்தான்குடி மற்றும் வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களையே பயங்கரவாதிகள், தமது பயிற்சிகளுக்கும் ஏனைய செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தியுள்ளனர் - என்றார். (ஒ.5)

# அரசின் தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மே 17

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களை அடுத்து அரசால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தீர்மா னங்கள் தொடர்பிலும் திருப்தி யடைய முடியாதுள்ளது. எனினும் அரசு மேற்கொள்ளும் சரியான தீர்மானங்களுக்கு முழுமை யான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது

நாட்டில் தற்போது காணப்படும் சூழ்நிலை தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ளும் உரிமை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க உள்ளிட்ட அமைச்சரவைக்கும் மாத்திரமே காணப்படுகின்றது. எதிர்க்கட்சித் தலைவராகிய நான் அரசில் அங்கம் வகிப்பதில்லை. என்னால் எதிர்க்கட்சியின் நடவடிக்கைகளை மாத்திரமே நிறைவேற்ற முடியும்.

**விழிப்புணர்வு வழங்கத் தயார்**

நாட்டில் தேசிய ரீதியில் முக்கியத்துவமான விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் தீர்மானங்களை முன்வைத்தல், கருத்துக்களைத் தெரிவித்தல் மற்றும் அதற்கு வெளியே பொதுமக்களை விழிப்பூட்டல் உள்ளிட்ட பணிகளை என்னால் மேற்கொள்ள முடியும். அதேபோன்று தற்போது மக்கள் மத்தியில் காணப்படும் அமைதியற்ற நிலை, சந்தேகம் மற்றும் அச்சம் என்பவற்றை மாற்றியமைப்பதற்காக ஊடக அறிக்கைகள் மற்றும் வாய்மூல விளக்கமளித்தல்கள் ஊடாக ஏற்கனவே மக்களை விழிப்பூட்டியி ருக்கிறேன்.

**திருப்தியடைய முடியாது**

இதே வேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் அரசு இதுவரையில் மேற்கொண்டுள்ள பல்வேறு தீர்மானங்கள் குறித்து திருப்தியடைய முடியா துள்ளது. பொது மக்கள் சார்பில் அரசால் மேற்கொள்ளப்படும் சரியான தீர்மானங்கள் தொடர்பில் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்குத் தயாராக இருக்கிறேன் - என்றார். (எ-61)

# தமிழ் பேசுவோரைப் பாதுகாக்க உரிய பொறிமுறை வேண்டும்

## வேலுகுமார் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மே 17

இலங்கையில் தமிழ்பேசும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அரசு நிலையானதொரு பொறிமுறையை வகுக்க வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டி திகனை பகுதியில் நேற்றுக் காலை நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

**மறக்கமுடியாத யூலைக் கலவரம்**

83 கலவரத்தின்போது தலைநகர் கொழும்பிலும், மலையகத்திலும், ஏனைய பகுதிகளிலும் தமிழ் மக்களுக்கு எதிராகத் திட்டமிட்டு வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. காடையர் கும்பல்களால், தமிழ் மக்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர். அவர்களின் சொத்துகள் அடித்து நொறுக்கப்பட்டன. கொளுத்தப்பட்டன. இதனால் ஏற்பட்ட அச்சமும், பீதியும் தமிழர்களின் மனங்களைவிட்டு முழுமையாக இன்னும் அகலவில்லை என்றே கூறவேண்டும். அந்த ஆறா வடுக்கள் ஆயுள் முழுதும் மாறாது என்றே கூறவேண்டும்.


**கலவரங்களின் தொடர்ச்சி**

இந்தநிலையில் கடந்த 13 ஆம் திகதி இரவும் அதன்பின்னரும் குருணாகலை, புத்தளம், கம்பஹா ஆகிய மாவட்டங்களில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக திட்டமிட்ட அடிப்படையில் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. பொல்லுகளுடன் களமிறங்கிய காடையர்கள், முஸ்லிம் மக்களின் வீடுகளையும், வர்த்தக நிலையங்களையும் அடித்து நொறுக்கி கோரத்தாண்டவமாடினர்.

**வன்முறையாளர்கள் அணி திரண்டது எப்படி**

ஒரே தடவையில் வன்முறையாளர்கள் அணி திரண்டது எப்படி? ஒரே மாதிரியான பொல்லுகள் எங்கிருந்து வழங்கப்பட்டன? சட்டம், ஒழுங்கை கையிலெடுப்பதற்கு எப்படித் துணிவு வந்தது? இவற்றை ஒப்பிட்டு, ஆராய்ந்து பார்த்தால் இதன் பின்னணியிலும் பலம் பொருந்திய அரசியல் கரங்கள்இருக்கின்றன என்றே சந்தேகம் எழுகின்றது. எனவே, விசாரணை ஆணைக்குழு அல்லது நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டு இவை தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

முஸ்லிம் மக்களுக்கு மட்டுமல்ல தமிழர்களுக்கு எதிராகவும் அடக்குமுறைகள், அடாவடிகள் இடம்பெற்றுதான் வருகின்றன. தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நிலையானதொரு பொறிமுறை அவசியம். நாம் இராணுவத் தீர்வை எதிர்ப்பார்க்கவில்லை. சிவில் நடவடிக்கைகள் ஊடாகவே பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும் - என்றார். (து)



வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலை அருள் மிகு சிறிபத்திரகாளி அம்பாள் கோவில் வருடாந்தப் பொங்கல் விழா கடந்த திங்கட்கிழமை மதியம் 2. 30 மணியளவில் வளந்து வைக்கும் நிகழ்வுடன் ஆரம்பித்து சிறப்பாக நடைபெற்றது. (40)

# சுற்றுப்பயணத்தை முடித்தார் மைத்திரி

கொழும்பு, மே 17

சீனாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளார். அரச தலைவர் மைத்திரிபால கடந்த திங்கட்கிழமை சீனாவுக்கு பயணித்திருந்தார். ஆசிய நாகரிகங்கள் குறித்த மாநாட்டில் கலந்து கொள்ளவே இந்தப் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

மாநாட்டில் கலந்துகொண்ட அரச தலைவர், இலங்கையில் அண்மைக்காலமாக நிலைகொண்டுள்ள பயங்கரவாதத்தை துடைத்தெறிய அனைத்து நாடுகளும் கைகோர்க்க வேண்டுமென அழைப்பு விடுத்தி ருந்தார். இந்தப் பயணத்தின்போது, சீன அரச தலைவரைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதன்போது இலங்கையிலிருந்து பயங்கரவாதத்தை முற்றாக வேரறுக்க அனைத்து உதவிகளையும் வழங்கத் தயாராக உள்ளதாக சீன அரச தலைவர் சீ ஜின்பிங் தெரிவித்துள்ளார். அத்தோடு இலங்கைக்கான நிதி உதவிகளையும் வழங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

அதன் பின்னர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, சீன தலைமை அமைச்சரைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். (ஒ.5)

# கிழக்கு ஆளுநர் இடமாற்றம் வழங்குவது சுமுக நிலையில் பாதிப்பை ஏற்படுத்தவா?

## தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்கிறது

யாழ்ப்பாணம், மே 17

பாடசாலைகளை ஆரம்பித்து சுமூக நிலையை ஏற்படுத்த அரசு முயற்சி எடுக்கும் நிலையில், பாதிப்புக்கள் ஏற்படாத பகுதிகளில் கிழக்கு மாகாண ஆளுநர் இடமாற்றங்கள் வழங்குவது சுமூகமான இடங்களில் குழப்பத்தை ஏற்படுத்தவா?

இவ்வாறு கிழக்கு மாகாண ஆளுநரிடம் கேள்வியெழுப்பியுள்ளோம் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது பற்றி சங்கச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளால் ஆசிரியர்களிடத்தே ஏற்பட்ட குழப்பநிலைபற்றி கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளருடன் சென்றவாரம் பேசினோம்.

தமிழ்ப் பாடசாலைகளில் கடமையாற்றும் இஸ்லாமிய ஆசிரியர்களும், முஸ்லிம் பாடசாலைகளில் கடமையாற்றும் தமிழ் ஆசிரியர்களும் தமக்கு ஏதேனும் இடர்பாடுகள் இருந்தால் தற்காலிக இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க முடியுமா? என்று பணிப்பாளரிடம் கேட்டோம்.

அதற்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் "ஓரிருவருக்கு இடமாற்றம் வழங்கினால் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படும். ஆகையால் அவற்றைத் தவிர்ப்போம்" என்றுகூறினார்.

ஆனால் கிழக்கு மாகாணத்தில் தற்காலிக இடமாற்றம் பதிலாசிரியர் இன்றி ஏராளமாக ஆளுநரால் வழங்கப்படுவதாக அறிகின்றோம். ஒரு சமூகம் சார்ந்தவர்களுக்கு மட்டும் இடமாற்றம் வழங்கப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நாம் கூறுகின்றோம்.

இதில் வேடிக்கையும் வேதனையும் என்னவெனில், ஒரே பாடசாலையில் இருந்து பதினைந்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு வரவழைத்துவிட்டு ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கினால் மாணவர்களுக்கு கல்விபுகட்டுவது யார்?

வருகைதரும் பிள்ளைகளுக்கு கற்பிக்க ஆசிரியர்கள் இல்லையெனில் பாடசாலைகளைப் பூட்டுவதே நல்லது என்றுள்ளது. (து)

# இலகுவில் பிணை கிடைக்காதவாறு வன்முறையாளர்களின் மீது வழக்கு

## ரணில் பொலிஸாருக்குப் பணிப்பு

கொழும்பு, மே 17

வன்முறைகளில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக சிவில் மற்றும் அரசியல் சட்டத்தின் கீழும், அவசர கால சட்டத்தின் கீழும் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அரச தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 12ஆம் மற்றும் 13ஆம் திகதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் முப்படையினர் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. வன்முறைகளுடன் தொடர்புடையோர் கைதாகி நீதிமன்றத்தின் பணிப்புக்கு அமைவாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 13ஆம் திகதி குருநாகல் மாவட்டத்தில் இடம்பெற்ற வன்முறைகளையடுத்து தலைமை அமைச்சர் ரணில் தலைமையில் அவசர கலந்துரையாடல் அமைச்சர்களுடன் இடம்பெற்றிருந்தது. இதனையடுத்து ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்த வன்முறைகளுடன் தொடர்புடையோர் உடனடியாகவே கைதாகியுள்ளனர். அவர்களுக்கு எதிராக இலகுவில் பிணை வழங்க முடியாத, சிவில் அரசியல் உரிமைகளுக்கான பன்னாட்டுச் சட்டம், அவசரகாலச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு தலைமை அமைச்சரால் பணிக்கப்பட்டுள்ளது.


இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு பதில் பொலிஸ் அதிகாரிகள் இருவர் தலைமையில் இரு குழுக்களை நியமித்து கொழும்பு மற்றும் ஏனைய பிரதேசங்களில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுமாறு பதில் பொலிஸ் மா அதிபருக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க பணிப்புரை விடுத்துள்ளார் - என்றுள்ளது. (ஒ.5,61)

# ஹிஸ்புல்லாவின் பல்கலையில் ஐ.எஸ்.ஐ.எஸ்க்குப் பயிற்சிகள்!

## ஆனந்த சாகர தேரர் சந்தேகம்

கொழும்பு, மே 17

கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா மற்றும் ரிசாத் பதியுதீன் ஆகியோருக்கு உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புள்ளது. அவர்கள் குண்டுதாரிகளுக்கு அடைக்கலம் வழங்கியிருக்கிறார்கள். ஹிஸ்புல்லாவின் மட்டக்களப்பு வளாகமும் ஐ.எஸ். ஐ.எஸ். போராளிகளுக்கு பயிற்சி வழங்கும் வகையில் செயற்பட்டிருக்கும் என்ற சந்தேகம் எழுகின்றது. இவ்வாறு பாஹியன்கல ஆனந்த சாகர தேரர் தெரிவித்தார்.



அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனத்தில் மதகுருமார் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இணைந்து 'அடிப்படைவாதக் கல்வியைப் புறக்கணிப்பதற்கு அனைவரும் ஒன்றுபடுவோம்' என்ற அடிப்படையில் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினர். இந்தச் சந்திப்பில் பாஹியன்கல ஆனந்த சாகர தேரர், தர்சக சர்மா, பேராசிரியர் ஜன்ன ஜயசுமன, மூத்த விரிவுரையாளர் லலித சிறி குணருவன், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வசந்த அல்விஸ் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

சந்திப்பில் கருத்து வெளியிட்ட ஆனந்த சாகர தேரர், மட்டக்களப்பு வளாகம் எனப்படுகின்ற கல்வி நிறுவனத்தின் ஊடாக உண்மையில் என்ன போதிக்கப்படுகின்றது, முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதங்களைக் கையில் எடுக்க வேண்டும் என்று கூறியவர்தான் கிழக்கு மாகாண ஆளுநர் ஏ.எல்.எம். ஹிஸ்புல்லா. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது அவரது அலுவலகத்திலிருந்து பல ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவராலேயே மட்டக்களப்பு வளாகத்துக்கான அனுமதி முறையற்ற விதத்தில் பெறப்பட்டுள்ளது - என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய இந்து மதகுரு தர்சக சர்மா, இலங்கையர் அனைவருக்கும் என்று பொதுவான சட்டங்கள் உள்ளன. அனைத்து மக்களுக்கும் பொதுவான கல்வி முறைமையும் காணப்படுகின்றது. ஆனால் தற்போது எம்மோடு ஒன்றிணைந்து வாழும் முஸ்லிம் சகோதரர்களை பிரித்து, இனங்களுக்கிடையில் முறுகல்நிலையை ஏற்படுத்தும் நோக்கில் இந்த மட்டக்களப்பு வளாகத்தின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றனவா என்ற பெரிய சந்தேகம் பரவலாக எழுந்துள்ளது.

அரச பல்கலைக்கழகங்களில் எந்த மதத்தவரும் தாம் விரும்பும் வேறொரு மதம் தொடர்பில் கற்பதற்கு வாய்ப்பு வழங்கப்படுகின்றது. ஆனால் மட்டக்களப்பு வளாகம் தனியொரு மதம் சார்ந்து இயங்கி வருகின்றது. இதேபோன்று வடக்கில் தமிழர்களும், தெற்கில் சிங்களவர்களும் தமக்கென தனியான கல்வி நிறுவனங்கள் வேண்டுமென்று கூறினால் நாட்டின் நல்லிணக்கமே சீர்குலைந்துவிடும். மதத்தை மையப்படுத்திய அடிப்படைவாதத்தைப் போதிக்கின்ற கல்வி நிறுவனங்கள் எமது நாட்டுக்கு அவசியமில்லை. எதுவென்றாலும் நாட்டின் பொதுச்சட்டங்கள் மற்றும் பொதுவான கல்விக் கட்டமைப்பு என்பவற்றுக்கு அமைவாக முன்னெடுக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டார்.

மூத்த விரிவுரையாளர் லலித சிறி குணருவன், நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற பொருள்களின் தரம் குறித்து ஆராய்வதற்குப் பல்வேறு வழிமுறைகள் உள்ளன. அதற்கு அதிக முக்கியத்துவமும் வழங்கப்படுகின்றது. ஆனால் நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்குப் போதிக்கப்படும் பாடத்திட்டம் தொடர்பில் கவனம் செலுத்துவது அனைத்தையும் விட முக்கியமானதாகும்.

எமது நாட்டின் பண்பாடு, கலாசாரம் என்பவற்றுக்கு எவ்வகையிலும் பொருத்தமற்ற பாடத்திட்டத்தைப் போதிக்கும் மட்டக்களப்பு வளாகம் என்ற கல்வி நிறுவனம் தேவையற்றதொன்றாகும். அதற்கு சுமார் 20 30 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இதனை இணைத்து, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பாடத்திட்டங்களை உள்வாங்குவதே இதற்கு சிறந்த தீர்வாகும் - என்றார். (ஒ.5,61)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டவர்கள் கைது

திருகோணமலை பகுதியில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுப்பட்ட 24 சந்தேகநபர்கள் செவ்வாய்கிழமை கைது செய்யப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கிழக்கு கடற்படை கட்டளைப்பிரிவை சேர்ந்த கடற்படையினர் திருகோணமலை கடகராச்செனய் பகுதியில் சுற்றுக் காவல் நடவடிக்கையில் ஈடுப்பட்டிருந்த போது சட்டவிரோத மீன்பிடி வலையை பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 24 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்:.

சட்டவிரோத மீன்பிடிக்கு பயன்படுத்திய 3 டிங்கி படகுகள், 3 வெளிவாரி இயந்திரங்கள், 3 சட்டவிரோத மீன்பிடிவலைகள் மற்;றும் 24 கிலோ கிராம் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட மீன்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் திருகோணமலை, மூதூர் மற்றும் கிண்ணியா பகுதியை சேர்ந்த 19வயதுக்கும் 61வயதுக்கும் இடைப்பட்ட வர்கள் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (ஒ.5,71)

## நல்லூர் இணக்க சபை அமர்வு

நல்லூர் இணக்க சபை அமர்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறும் என்று தவிசாளர் நா.நித்தியானந்தன் அறிவித்துள்ளார்.

இதுவரைகாலமும் யாழ்ப்பாணம் கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்று வந்தது. நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழலையடுத்து பாடசாலைகளின் பாதுகாப்புச் சோதனை இடம்பெற்றுவருவதால் இடம்மாற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மதங்கள் அடிப்படையிலான சட்டத்தால் விரிசல் ஏற்படும்

## அனுர பிரியதர்சன யாப்பா சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 17

முஸ்லிம் அரசியல் தலைவர்களின் பொறுப்பற்ற தன்மையே இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்கள் தோற்றம் பெறுவதற்கு காரணியாக அமைந்துள்ளது. நாட்டு மக்கள் அனைவரும் ஒரே சட்டத்தை பின்பற்ற வேண்டும். மதங்களை அடிப்படையாகக் கொண்டு சட்டங்கள் உருவாக்கப்படும் போது இனங்களுக்கிடையில் முரண்பாடுகளே ஏற்படும் என்று சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

பொதுமக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்களின் கற்கை நெறிகள் தொடர்பில் தற்போது பல விடயங்கள் வெளிப்பட்டுள்ளன. தீவிரவாத போக்குடைய அமைப்புகளை முஸ்லிம் அரசியல்வாதிகளும், அரசியல் தலைவர்களும் ஏன் கருத்திற் கொள்ளவில்லை? அனைவரும் தமது அரசியல் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காகவே பொறுப்பற்ற விதமாக செயற்பட்டுள்ளார்கள்.

அமைச்சர் ரிசாத் பதியூதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து மக்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றுக் கொள்ள அரசு முயற்சிக்கின்றது. ஒட்டுமொத்த அரசையுமே மக்கள் வெறுக்கின்றார்கள். நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு ஆதரவு வழங்குவதா அல்லது எதிர்ப்புத் தெரிவிப்பதா என்பது தொடர்பில் கட்சி ரீதியாக உத்தியோக பூர்வமாக அறிவிப்போம்.

ரணில் அரசு ஆட்சியில் இருக்கும் குறுகியகாலத்தில் தேசிய பாதுகாப்பை மாத்திரம் உறுதிப்படுத்தினால் போதும். எதிர்க் கட்சியினர் நிபந்தனைகளற்ற ஆதரவு வழங்குவார்கள் - என்றார். (ஒ.5.31)

# வன்முறைகளின் பின்னால் அரசியல்வாதிகள் உள்ளனர்

## அவர்களே தூண்டுகின்றனர் என்கிறார் கர்தினால் மல்கம் ரஞ்சித்

வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் சில அரசியல்வாதிகளும் பிரதேசசபை உறுப்பினர்களும் உள்ளார்கள் என்ற தகவல்கள் எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. இது போன்ற அரசியல் தலைவர்களே அந்தந்த பிரதேசசபை உறுப்பினர்களை வன்முறைகளில் ஈடுபடுமாறு தவறான முறையில் வழிநடத்துகின்றனர் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் இத்தே பானே தம்மாலங்கார தேரர் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று கடந்த செவ்வாய்கிழமை இடம்பெற்றது. சந்திப்பின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ஆயர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டத்தை ஒரு போதும் நாம் கையிலெடுக்க முற்படக் கூடாது. அதற்கு நான் இடமளிக்கப் போவதுமில்லை. சரியான முறையில் இந்தப் பிரச்சினைகளை புரிந்து கொள்ள முடியாதவர்களிடம், மதுபானத்தை வழங்கி அவர்களை வன்முறைக்கு தூண்டும் சிலர் உள்ளனர்.

இந்த வன்முறை சம்பவங்களின் பின்னணியில் சில அரசியல் வாதிகளும் கட்சி ரீதியிலான பிரதேசசபை உறுப்பினர்கள் உள்ளார்கள் என்ற தகவல்கள் எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. இது போன்ற அரசியல் தலைவர்களே அந்தந்த பிரதேச சபை உறுப்பினர்களை தவறான வழியில் கையாளுகின்றனர்.

இவ்வாறு சிலரால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகளால் கலவரமடையாது பொறுமையுடன் செயற்படுமாறு இஸ்லாமிய மக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம். பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் மாணவர்களின் வருகை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இந்த நிலமையை உருவாக்கிய அரசியல் தலைவர்களே அவற்றை சரி செய்ய வேண்டும்.

இத்தனைபேர் உயிரிழந்தும், சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டும், வன்முறைகள் ஏற்பட்டும் அரசியல் தலைவர்கள் யாரும் பொறுப்புடன் செயற்படுவதாகத் தெரியவில்லை. இன்றும் கூட ஒருவரை ஒருவர் குறை கூறுகின்றார்களே தவிர நாட்டுக்கான ஒன்றிணைய யாரும் முன்வரவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

இவ்வாறான வன்முறை சம்பவங்கள் இடம்பெறுவதற்கு முன்னரே நாம் அரசிடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தோம். ஆனால் அவை குறித்து யாருமே கவனத்தில் கொள்ளவில்லை. நாடாளுமன்றத்திலுள்ள சகல உறுப்பினர்களதும் சொத்து விவரங்களை ஆராய்வதற்காக ஆணைக்குழுவொன்றை அமைக்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தோம். ஆனால் அதற்கும் இது வரையில் எந்த பிரதிபலிப்பும் இல்லை - என்றார். (ஒ.5,61)

## இணைந்த...

என. குறிப்பாக குருநாகல், நீர்கொழும்பு உட்பட இலங்கையின் பல பாகங்களிலும் இஸ்லாமியர்களின் வீடுகள் வர்த்தக நிலையங்கள் உடைத்து எரிக்கப்பட்டு சொத்துக்கள் சேதமாக்கப்பட்டு சூறையாடப்பட்டும் வருகின்றன. இது தொடர்பில் வினவியபோதே வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசானது சிங்கள பௌத்த பேரினவாத மனநிலையில் இருந்து எப்போதும் விடுபடப்போவதில்லை. சிறுபான்மை இனத்தவரைஅடக்கிஆழ்வதைகுறிக்கோள்களாகக் கொண்டு இயங்குகிறது. 1956ஆம் ஆண்டு தொடக்கம் 1983ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் தமிழ் மக்களுக்கு எதிராக ஏவி விடப்பட்ட இனக்கலவரத்தால் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பறிபோனதுதான் வரலாறு. அதே செயற்பாட்டினை இன்று முஸ்லிம் மக்கள் மீது சிங்கள அரசு திருப்பி விட்டிருக்கிறது.

தமிழ் மக்கள் தம்முரிமைக்காக போராடிய போதும் அவற்றால் அவர்கள் பாதிக்கப்பட்ட போது அவற்றை ஒரு பொருட்டாகவே கருதாத முஸ்லிம் அரசியல்வாதிகளும் மக்களும் சிங்கள பௌத்த பேரினவாத அரசுதான் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு என்று நம்பியிருந்தார்கள். அதன் பயனையே முஸ்லிம்கள் இன்று அனுபவிக்கின்றார்கள். இதனை கருத்தில் கொண்டுதான் தலைவர் பிரபாகரன் முஸ்லிம் தலைமைகளின் தவறான முடிவுகளால் பின்னாளில் பெரும் பாதிப்புகளை சந்திக்க நேரிடும் என்று கூறியிருந்தார். தலைவரின் தீர்க்க தரிசனமான சிந்தனை இன்று சரியாக நடைபெறுகிறது. வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர்தாயகமே தமிழ்பேசும் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு என்று தமிழ்த் தலைமைகள் கூறியபோது முஸ்லிம்கள் அதை விரும்பவில்லை. மாறாக சிங்கள அரசின் கபட நாடகத்தில் சிக்குண்டு வடக்கையும் கிழக்கையும் பிரித்தார்கள். அதன் விளைவு அப்பாவி முஸ்லிம் மக்கள் சொல்ல முடியாத துன்பத்தை அனுபவிக்கிறார்கள்.

கலவரங்கள் என்னும் போர்வையில் இஸ்லாமியர்களின் வீடுகள் வர்த்தக நிலையங்கள் உடைத்து எரிக்கப்பட்டு சொத்துக்கள் சேதமாக்கப்பட்டு சூறையாடப்பட்டும் வருகின்றன. நாடாளுமன்றங்களிலும் பொது இடங்களிலும் குருதி ஆறு ஓடும் என்றவர்களை இன்னும் கைது செய்யவில்லை. இந்த குண்டுத்தாக்குதல் சம்பவம் முஸ்லிம் மக்களுக்கு சிங்கள அரசின் முகத்திரையைக் கிழித்துக் காட்டியுள்ளது. இனியாவது உணர்ந்து தமிழ் மக்களுடன் இணைந்து சிறுபான்மை இனங்கள் இணைந்த வடக்கு- கிழக்கில் ஒற்றுமையாக வலுச்சேர்க்க வேண்டும்.

குண்டுத்தாக்குதல் தொடர்பான முழுமையான அறிக்கை இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. வெளிநாடுகள் பல இலங்கையில் தாக்குதல் நடைபெற வாய்ப்பு உள்ளது என்று அறிவுறுத்தல் விடுத்திருந்தும் இலங்கை அரசின் அசட்டையீனத்தால் பெரிய உயிர் இழப்பையும் நாடு அச்ச நிலமையையும் சந்தித்துள்ளது. அதற்கான பொறுப்பினையும் இந்த அரசு ஏற்கவில்லை - என்றார். (ம-213)

## மே 18...

இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டவிதிகளுக்கு உட்பட்டு, நினைவு தினத்தைக் கடைப்பிடிப்பதற்கான உரிமை அனைவருக்கும் காணப்படுகிறது. இலங்கையில் அவசரகாலச் சட்டம் நடைமுறையில் உள்ள தருணத்தில், இவ்வாறான நினைவு தின நிகழ்வுகளை நடத்துகின்றமை சர்ச்சைக்குரிய விடயம் என்று பேசப்படுகின்றது. உண்மையில் அவசரகாலச் சட்டமும், நினைவு தினக் கடைப்பிடிப்பும் இருவேறு விடயங்கள். நினைவு தினத்தை உரிய விதிமுறைகளின் கீழ் முன்னெடுக்கலாம் - என்றார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர்:

இலங்கையில் மற்றுமொரு பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படுவதற்கான சாத்திய கூறுகள் கிடையாது. பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு, கைது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பயங்கரவாதத்தை முழுமையாக ஒழிப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. புத்தளம் நாத்தாண்டி துன்மோதரப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் ராணுவத்துக்கு எந்தவித தொடர்பும் கிடையாது - என்று மேலும் தெரிவித்தார். (ம)


உதயனுடன்
இணைய ஒரு வாய்ப்பு
தாயக மண்ணில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக வெளி வருகின்ற பன்னாட்டு விருது வென்ற ஒரே ஒரு தமிழ்ப் பத்திரிகையான உதயனுடன் இணைந்து பணியாற்ற ஓர் அரிய வாய்ப்பு.
✓ உதவி ஆசிரியர்
✓ பயிற்சிச் செய்தியாளர்
பணியாற்ற விரும்புவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையை editorialuthayanvacancy@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 20.05.2019 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
பொருத்தமானவர்கள் மட்டுமே நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.
இரு பதவிகளுக்கும் வயது எல்லை கிடையாது.
இருபாலரும் விண்ணப்பிக்க முடியும்.

## நம்பிக்கையில்லா...

ரணை தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்தப் பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச கையொப்பம் இடவில்லை. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் எஸ். வியாழேந்திரன் மட்டுமே கையொப்பம் இட்டுள்ளார்.

அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச எதிர்த்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 'நம்பிக்கையில்லாப் பிரேரணையில் சில தவறுகள் உள்ளன. அதனை அவசரப்பட்டு இப்போது ஏன் சமர்ப்பிக்க வேண்டும்? அதில் உள்ள தவறுகள் பிரேரணை தோற்பதற்கே வழிவகுக்கும். தோற்கும் பிரேரணையைக் கொண்டு வந்து ரிசாத்துக்கான செல்வாக்கைப் பெருக்காதீர்கள். எனவே, முதலில் பிரேரணையில் உள்ள தவறுகளைத் திருத்துங்கள். அதன் பின்னர் அதனை ஆதரிப்பதா? இல்லையா? என்று நான் முடிவெடுப்பேன்' - என்று பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்றுமுன்தினம் நடத்திய சந்திப்பில் மகிந்த தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-22)

## ரிசாத்துக்கு...

லாப் பிரேரணை சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் நேற்றுக் காலை கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணையில் 66 உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர் என்று பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார். பிரேரணை மீதான விவாதத்தை விரைவாக ஆரம்பிக்கும்படி சபாநாயகரிடம் தாம் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்களுடன் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தொடர்புகளைக் கொண்டிருந்தார் உள்ளிட்ட 10 குற்றச்சாட்டுக்களை முன்வைத்து இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தயாரிக்கப்பட்டுள்ளது. (ம-22)

## முள்ளிவாய்க்காலில்...

மாதாபுரம் வீர துர்க்கை அம்மன் ஆலய நிர்வாக சபையும் இணைந்து நாளை காலை 9.30 மணியளவில் வழிபாடொன்றை ஒழுங்கமைத்துள்ளன. அதேநேரம் முள்ளிவாய்க்கால் புனித சின்னப்பர் ஆலயத்தில் யாழ்ப்பாணம் மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு தலைவர் அருட்பணி மங்களராஜா தலைமையில் கூட்டுத் திருப்பலி நாளை காலை 9 மணியளவில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. (ம-110)

## யார்...

கொள்கின்றோம். இவ்வாறு தலைமை அமைச்சர் அலுவலகப் பிரதானி, துறைமுகங் கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரும், மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.

அங்குனுகொலபெலஸ்ஸ எரமினியாய இளைஞர் சேவைகள் மன்றின் கலாசார கேந்திரநிலையத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற இசவெஸ் அணிவித்தல் மற்றும் சீர்சாபரன நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் மங்கள சமரவீர மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில், இலங்கை சிங்கள பௌத்த நாடல்ல என்று கூறியிருந்தார். இது தென்னிலங்கையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. தேரர்கள் பலர் மங்களவுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியிருந்தனர். இலங்கையை சிங்கள பௌத்த நாடல்ல என்று சொல்பவர்கள் எவரும் இங்கு இருக்கத் தேவையில்லை என்று சாடியிருந்தனர். இவ்வாறானதொரு நிலையிலேயே அமைச்சர் சாகல மேற்கண்டவாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவரது ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் உள்ள பெரும் பிரச்சினை அடிப்படைவாதமாகும். அடிப்படைவாதத்துக்கு எதிராகவே நாம் இன்று போரட வேண்டியுள்ளது. அதற்கெதிராக நாம் அனைவரும் ஒன்றாக அணித்திரள வேண்டும்.

2 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பௌத்த கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டே இன்று இவ்வெஸ் மங்கள மகோற்சவமும் நடைபெறுகின்றது. இந்தக் கலாசார விழுமியங்களே இன்றும் பின்பற்றப்படுகின்றன என்பதை எவ்வித மாற்றுக் கருத்துக்களும் இன்றி நாம் ஏற்றுக் கொள்கின்றோம். தாம் சார்ந்த சமயக் கடமைகளை மேற்கொள்வதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுள்ளது. இந்தக் காரணியை அடிப்படையாகக் கொண்டே நாம் செயற்பட வேண்டும். பௌத்தர்கள் தங்கள் மதத்தை பின்பற்றுவதற்கு, தங்கள் வாழ்வில் முன்னேற்றம் காண்பதற்கு, பௌத்த சாசனத்தை பாதுகாப்பதற்கு, வளர்ப்பதற்கு, தர்மத்தை போதிப்பதற்கு நாம் முன்னின்று செயற்பட வேண்டும். அதுவே பௌத்தருக்கான சிறந்த அடையாளமாகும்.

இதனைப் போலவே பிற மதங்களும் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. எந்தவொரு மதமும் அடிப்படைவாதத்தை போதிக்கவில்லை. ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடைப்பெற்ற தாக்குதலை முன்னிட்டு அரசு என்ற வகையில் நாம் கவலையடைகின்றோம். நாட்டின் பாதுகாப்பு தரப்பினர் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் இந்தச் சம்பவத்தை சிறப்பாக எதிர்கொண்டு தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரையும் கைது செய்துள்ளதுடன் நாட்டின் பாதுகாப்பு நிலையும் வழமைக்குத் திரும்பியுள்ளது. அச்ச உணர்வு ஏற்படுவது சாதாரண நிலையாகும். எமது நாடு 30 ஆண்டுகால போரை எதிர்நோக்கிய காலத்தில் எம்முடைய பாதுகாப்புத் தரப்பினர் மீது நம்பிக்கை வைத்து எம்முடைய நாளாந்த செயற்பாடுகளை முன்னெடுத்தோம். பாடசாலை செல்வதை நிறுத்தவில்லை, வெசாக் கொண்டாட்டங்களை நிறுத்தவில்லை. ஆனால் அதற்கு அவசியமான பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னெடுத்தோம். அவதானத்துடன் செயற்பட்டோம். நாளாந்த செயற்பாடுகளை நிறுத்தவில்லை. இந்நாட்டு பொருளாதாரம் சீர்குலையும் வகையில் செயற்படவில்லை. பொருளாதாரத்தை பலப்படுத்த வேண்டும். இல்லையேல் இந்த நாட்டு மக்களால் வாழ்க்கையை கொண்டு நடாத்துவது கடினமாகும். நாடென்ற வகையில் முன்னோக்கிச் செல்வது கடினமாக அமையும்.

நாம் பழைய நிலைக்கு திரும்ப வேண்டும் அப்பொழுது தான் பன்னாட்டுச் சமூகம் எம் மீது நம்பிக்கைக் கொண்டு நம் நாட்டில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு, வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு முன்வருவார்கள். எம்முடைய சுற்றுலாதுறையை முன்னெடுப்பதன் மூலமே இந்நாட்டின் பொருளாதாரம் வலுவடையும் - என்றார். (ஒ.5)

## ரிசாத்துக்கு எதிரான...

டுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தலைமையிலான குழுவினரால் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் நேற்று கையளிக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் தலைமையில் பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தயாரிக்கப்பட்டிருந்தது.

எனினும், இந்தப் பிரேரணையின் ஆரம்பமே பிழையானதாக அமைந்துள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறித்த பிரேரணையின் திகதி 2018.05.09 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ரிசாத்துக்கு எதிராக 10 குற்றச்சாட்டுக்களை முன்வைத்து தயாரிக்கப்பட்டிருந்த இந்தப் பிரேரணையில் 64 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பம் இட்டிருந்தனர். ஆனால், இதில் உள்ள திகதிப் பிழையை எவரும் அவதானித்திருக்கவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.


(ம-22)

# ...வசுப்பிரமணிய தேவஸ்தானம்

# ...விழா சிறப்பிதழ்

## ...019) வெள்ளிக்கிழமை

...ிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு திருவடிநிலையில் தீர்த்தம்.
...ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு சங்காபிஷேகம்



### ...ழை பொழியும் எழில்மிகு பறாளாய் முருகன்

...ட தெய்வமாக காட்சி அளிப்பது ... வடம் பிடிக்க வாரீர். ... அமைந்த யாழ்ப்பாணத்தின் ...வளங்களும் நிறைந்த இடம் ...க்கமும் வயலால் சூழப்பெற்ற ...யிலே அமைந்து அருள்மழை ... ஆலயங்கள் இவ் ஆறுமுகன் ...ப்பாக நடைபெறுகிறது. மூர்த்தி ...ங்கே அமையப்பெற்ற இவ் ... பூசைகள் தவறாது நடை... தீர்த்தமாகக் கொண்டு முன் 11 ...றது. இங்கு கொடியேற்றத்தி... புனிதமாக காட்சிதரும். 12 ...நினைத்து விரதமிருந்து ஆண் அடியார்கள் அங்கப்பிரதட்சணமும், பெண் அடியார்கள் அடி அழித்தும் தமது நேர்த்தியை நிறைவேற்றுவர். தேர் அன்று காலை பால் காவடிகள், ஆட்டக்காவடிகள், கண்கொள்ளாக் காட்சியாக அமையும் மூன்று வீதியும் பக்தர்கள் அரோகரா முருகா என்று ஆனந்த தாண்டவம் புரிவர். இங்கு தேர் நிறைவாகி தீர்த்தம் சரித்திர பிரசித்திபெற்ற புண்ணிய திருவடிநிலை தீர்த்தஸ்தலத்தில் நடைபெறும். தொடர்ந்து வரும் வெள்ளிக்கிழமை மகாசங்காபிஷேகம் நடைபெறும். இப் பெருவிழா இனிதே நிறைவேறும் இவ் ஆலயத்தின் மூர்த்தியாக முருகனும், தலமாக கடப்ப மரமும் தீர்த்தமாக அழகிய தாமரை தடாகமும் உண்டு. உற்சவ காலங்களில் அடியார்களுக்கு அமுது அளிப்பதற்கு இரு அன்னதான மண்டபங்களும் அமைந்துள்ளன. இவ்வாறு பல சிறப்பு நிறைந்த முருகன் ஆலயத்திற்கு வருகை தந்து அவன் அருள்பெற்று சிறப்புடன் வாழ வேண்டுகிறோம்.

முருகன் அடியான்
வாகையான் வைத்தியர் - க.சிவராஜா (J.P)

### ...ம்பரை ஸ்தானீக அர்ச்சகர் "குகபூஷணம்" ...லகுருசாமிசர்மா வழங்கும் ஆசிச்செய்தி

...ருவாய் உலதாய்

...ா மணியாய்

...ா கதியாய்

...ாய் அருள்வாய்

...ற சிறப்புக்களுடன் ...னை தன்னகத்தே ...டும் வரங்களைக் ...ல் பெருமானாகிய ...மணியப் பெருமான் ... 2019 செவ்வாய்க் ...ஹோற்சவம் ஆரம்ப... வெள்ளிக்கிழமை ...றுகிறது. தேருக்கு ... பெருமான் அழகு ...னமும் ஈராறுமுகங்களுடன் பன்னிரு தடந்தோள்களுடன் வள்ளல் முருகன் வள்ளி, தேவயானி தேவியர் இருவருடன் சிம்மாசனத்தில் எழுந்தருளும் அழகு ராஜதர்பாரில் ஒரு அரசன் வீற்றிருப்பது போல எழில் மிக்கதாக இருக்கும். பக்தர்கள் அரோகரா கோஷம் எழுப்ப, தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் மல்லாரி இசை பொழிய, அந்தணர்கள் நால்வேத கோஷங்களைப் பொழிய காணக் கண் கோடி வேண்டும். இப்படிப்பட்ட பல சிறப்பான நிகழ்வுகளைக் கொண்ட இன்றைய தின தேர்த்திருவிழாவில் கலந்து வள்ளல் முருகப் பெருமானை "காதலாகி கசிந்து கண்ணீர் மல்க" தொழுது தம் பிறவிப் பிணியை நீக்க வரும் அடியார்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல வள்ளிமணாளன் பரிபூரண அருள்கிடைக்க வேண்டி வாழ்த்துகின்றேன்.

" லோகா சமஸ்தா சுகினோ பவந்து "

குகசேவாரத்னா பிரம்மஸ்ரீ
மு. பாலகுருசுவாமி சர்மா
ஆலய ஸ்தானீகர் - பறாளாய் சுழிபுரம்

### சிவபரம்பொருளின் அருளுருவாம் முருகனின் அருட்தலமே பறாளாயம்பதி

பரம்பொருளின் கருணையைப் பெறும் பெருநெறியே சைவம். சைவ மாம் சமயம் சாரும் ஊழ்பெறலரிது என்பது சைவத்தின் மேன்மையைப் பறைசாற்றுவது. அன்பின் முழுமைதான் முழுமுதற்பொருளான சிவம். சிவத்தின் கருணை வடிவில் ஒன்றே ஆறுமுகன். ஆறுமுகன் விருப்புடன் அமர்ந்து அருள் பொழியும் இடங்களில் சுழிபுரம் பறாளாயம்பதியும் ஒன்று. ஆறுபடை வீடுடைய முருக பிரான் விரும்பி உறையும் பதியாக பறாளாய் திருத்தலம் உள்ளது. முருகன் அடியார்கள் நிறைந்த தலம் பறாளாய்த் தலம். முருகன் அடியார்கள் நேர்த்திக் கடனாகக் காவடி எடுத்தும், கர்ப்பூரச் சட்டி எடுத்தும். ஆண்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்தும் வழிபாடாற்றி முருகனுடைய அருளுக்குப் பாத்திரமாகிச் சிறப்புடன் வாழுகின்றனர். மூர்த்தி, தல சிறப்புடைய பறாளாயானுக்கு ரதோற்சவம் கண்கொள் ளாக் காட்சி. ஊர்மக்கள் மாத்திரமல்லாமல் அயலூரவரும், முருகபக்கதர் களும் ரதோற்சவத்தில் பங்குகொண்டு முருகனருளில் திளைத்து இன்பம் பெறுகின்றனர்.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது மூதாட்டி ஒளவையாரின் முதுமொழி. ஆலய வழிபாடு சிவபுண்ணியச் செயல். இறையருள் இல்லை யேல் வாழ்க்கை சூனியமாகிவிடும். இறையருளைப் பெறும் அருள் நிதியங்கள் ஆலயங்கள். ஆலயத்தில் இடம்பெறும் நித்திய நைமித்திய வழிபாடுகள் அருளைப் பெறும் சாதனங்கள். அதிலும் ரதோற்சவம் மிகவும் உயர்ந்தது. அனைத்துயிர்களும் அருள்பெறும் சாம்பவி தீட்சையாகும். எங்கள் முன் னோர்கள் வழிபட்டு அருட்செல்வம் பெற்ற பறாளாய் சிவசுப்பிரமணியர் ஆலயப் பெருவிழாவாம் ரதோற்சவத்தில் கலந்து கொள்ளும் அடியவர்கள் அனைவரும் மேன்மை பெறுவர்.

நாச்சியார் செல்வநாயகம்
முதுநிலை விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

### துன்பங்கள் போக்கிட காத்தருள் முருகா

பறாளாயம்பதியில் கோயில் கொண்டு அருள் பாலிக்கும் கந்த வேற் பெருமான் இன்று அழகிய சித்திரத் தேரில் வீதி யுலாவருகின்றார். இந்த அருமையான நன்நாளில் அடியார்கள் அனைவரும் சகல செல்வங்களைப் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம்வல்ல எம்பெருமான் சண்முகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

வேலாயுத இரத்தினசபாபதி
தலைவர், தர்மகர்த்தாசபை,

### இராமரின் கால் பதியப்பட்ட திருவடிநிலையில் தீர்த்தோற்சவம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் சிறப்புக்களுடைய நாற்புறமும் வயல்களினால் சூழப்பட்ட சுழிபுரம் பறாளாய் எனும் பதியில் வள்ளி தேவசேனா பதியாக விளங்குகின்ற முருகப் பெருமானுக்கு வைகாசி மாதத்தில் மஹோற்சவம் நடைபெறுகின்ற இந்நாளில் அவனுடைய பெருமையை நினைப்பதில் அகம் மகிழ்கின்றேன். இராமரின் கால் பதியப்பட்ட திருவடி நிலையில் தீர்த்தோற்சவம் நடைபெறுகின்ற இவ் வாலயத்தில் 11 ஆம் நாள் தேர்த் திருவிழாவும் நாளை திருவடி நிலையில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். இத்தினத்தில் அவனுடைய அடியார்களுக்கு எம்பெரு மானுடைய திருவருள் கிடைக்க வேண்டும் என்று அவனை வேண்டி நிற்கின்றோம்.

அப்புத்துரை மனுநீதி.
நிர்வாக உறுப்பினர், தர்மகர்த்தா சபை.

...ரர் ...புரம்.

பலசரக்குப்பொருள்களை நியாய விலையில் பெற்றிட
அ.கந்தசாமி அன் சன்ஸ்
பல்பொருள் வணிக நிலையம்
பிரதான வீதி, சங்கானை.

...ரோர்ஸ் ...ரிகை ...ான வீதி.

இ.ராசநாயகம்
பறாளாய் வீதி,
சுழிபுரம்.

...கம் ...ும். ...ம். ...ம். ...ரம்.

அரிகரன்
வர்ண பூச்சு வேலை தொழிலகம்
சகல வீட்டு வர்ண பூச்சு வேலைகளுக்கு எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.
உரிமையாளர் : சி.அ. சிறீதரன்
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

க.தம்பு அன் சன்ஸ்
பிரதான வீதி,
சுழிபுரம்.

கணேசா
அழகு மாடம்
(உரிமையாளர் :க.ரவீந்திரன்)
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

சிவன் களஞ்சியம்
பிரதானவீதி, வழக்கம்பரை, சுழிபுரம்.
021 225 0160

சாரங்கா
ஜூவல்லறி



Tel: 021 222 6972, 021 222 8869
இல: 157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நகுலேஸ்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
சித்தன்கேணி வீதி, பண்டத்தரிப்பு.
சகல வணிகப் பொருள்களையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள


சிறிமுத்துமாரி அம்பாள்
ஸ்ரோர்ஸ்
பண்டத்தரிப்பு.

கணேஸ்
ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

குமார் ஸ்ரோஸ்
பிரதான வீதி,
சுழிபுரம்.

# அமெரிக்காவில் அவசர நிலை!

## தகவல் தொழில்நுட்ப அச்சுறுத்தலே காரணம்







வோஷிங்டன்,மே 17
வெளிநாட்டு எதிரிகளிடம் இருந்து அமெரிக்காவின் கணினி இணையத் தொடர்புகளைப் பாதுகாப்பதற்காக அவசர நிலையை அறிவித்துள்ளதாக அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார். அவசர நிலையை நடைமுறைப்படுத்து கின்ற ஆவணத்தில் ட்ரம்ப் கையெழுத்திட்டதைத் தொடர்ந்து, அமெரிக்க நிறுவனங்கள், வெளிநாட்டுத் தொலைதொடர்புச் சேவைகள், இணையங்களைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சீனாவின் மிகப்பெரிய தொலைத் தொடர்புநிறுவனமான ஹுவாவியை இலக்காகக் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அரசியலவதானி கள் கருதுகின்றனர். ஹுவாவியைச், சீனா வேவுபார்ப்பதற் குப் பயன்படுத்தலாம் என்று அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் சந்தேகம் வெளியிட்டிருந்தமையும் அதைக் ஹுவாவி மறுத்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு சீனாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் வலுப்பேற்றிருக் கிற வர்த்தகப் போரும், ஹுவாவி விடயத்தில் அமெரிக்கா ஏற்கனவே முரண்பாட்டைக் கடைப்பிடித்து வருவதையும் கூடச் சுட்டிக்காட்டுவதற்கு அரசியலவதானிகள் தவற வில்லை.




## 'விக்கிப்பீடியாவை' முடக்கியது சீனா

பீஜிங், மே 17
என்சைக்லோபீடியாவான விக்கிப்பீடியாத் தளம் சீனாவில் முழுமையாக முடக்கப்பட்டுள்ளது எனச் சீனாவின் வலைத் தளத்தை நடத்திவரும் விக்கிமீடியா நிறுவனம் தெரிவித்தது. ஏப்ரல் மாதத்தின் இறுதியில் இருந்து விக்கிப்பீடியாவின் அனைத்து மொழித்தளங்களையும் சீனாவில் அணுக முடி யாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது என்று விக்கிப்பீடியா நிறுவனம் கூறிய இந்த முடக்கம் தொடர்பாகத் தங்களுக்கு அறிவிப்பு எதுவும் வழங்கப்படவில்லை என்றும் அந்த நிறு வனம் கூறியுள்ளது. எந்தப் பயனாளர் வேண்டுமானாலும் புதிய பக்கங்களை உருவாக்க, 'எடிட்' செய்ய வசதியளிக் கின்ற விக்கிப்பீடியாவை 2017ஆம் ஆண்டு துருக்கி தடை செய்தமையும், இந்த ஆண்டு வெனிசுவேலாவில், இந்தத் தளம் அவ்வப்போது முடக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக் கது. அத்தோடு சீனாவில் முகப்புத்தகம், கீச்சகம் உட்பட நூற்றுக்கணக்கான வலைதளங்கள் 2015ஆம் ஆண்டிலி ருந்து முடக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## அலபாமாவில் கருக்கலைப்புக்குத் தடை எதிர்ப்புகளுக்கு மத்தியில் தீர்மானம் நிறைவேற்றம்




வோஷிங்டன்,மே17
அமெரிக்க மாகாணமான அலபாமாநாடாளுமன்றில் கருக்கலைப்புக்குத்தடைவி திக்ககோரிய தீர்மானம் நிறைவேறியது. அமெரிக் காவில் 1973ஆம் ஆண் டுக்குமுன்னர்கருக்கலைப் பது சட்டவிரோத செயலாக இருந்தது. இதை எதிர்த்துப் பெண் உரிமை ஆர்வலர் கள் பல ஆண்டுகளாகப் போராட்டம் நடத்தி வந்த னர். 1973ஆம் ஆண்டில் கருக்கலைப்பைச் சட்டபூர் வமாக்கியது அந்த நாட்டு உயர்நீதிமன்றம். அதன்படி அமெரிக்காவின்அனைத்து மாகாணங்களிலும் கருக்க லைப்புச்செய்வதற்குசட்டப் பூர்வ அனுமதி இருக்கிறது. 2016ஆம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலின் போது, குடியரசுகட்சிசார்பில்போட் டியிட்ட ட்ரம்ப், கருக்க லைப்புச் செய்யும் பெண்க ளுக்குத்தண்டனைவழங்க வேண்டும் எனப் பரப்புரை செய்தார். அதற்கு எதிர்ப்பு கள் கிளம்பின. எனினும் ட்ரம்ப் தேர்தலில் வெற்றி பெற்றார்.
அதைத்தொடர்ந்துகுடியரசு கட்சியினர் ஆளுநர்களாக இருக்கும்மாகாணங்களில் கருக்கலைப்புக்குக்கடுமை யான கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன. அமெரிக்காவின் 16 மாகா ணங்களில் கருக்கலைப் புக்கு எதிரான கட்டுப்பாடு கள் நடைமுறைக்கிடப் பட்டன.
அந்த வகையில் அலபாமா மாகாணத்தில்கருக்கலைப் புக்கு முழுமையாகத் தடை விதிக்க முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வந்தன. இந்த நிலையிலேயே கருக் கலைப்புக்குத் தடைவிதிக் கும் தீர்மானம் நிறை வேற் றப்பட்டுள்ளது.
அங்குள்ள பெண் உரிமை ஆர்வலர்கள் மத்தியில்இது பெரும் கொந்தளிப்பை ஏற் படுத்தி உள்ளது.

## வெனிசுலாவில் சமரச முயற்சிகள் நோர்வே ஊடகம் தகவல்

ஒஸ்லோ,மே 17
தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் தொடர்ந்து வருகின்ற அரசியல் குழப் பங்கள் முடிவுக்கு வருவதற் கான வாய்ப்புக்கள் தென்ப டுவதாக நோர்வேயின் வானொலிமற்றும்தொலை க்காட்சி ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. வெனிசுலா அதிபர் மதுரேவின் பிரதிநிதி களுக்கும், அவருக்கு எதிரா கச் செயற்பட்டு வருகின்ற வெனிசுலாவின் எதிர்க்கட் சித் தலைர் ஜுவைன் குவைடோவின் பிரதிநிதி களுக்கும் இடை யே நோர் வேயின் தலைமையில் சமரச முயற்சிகளுக்கான பேச்சுக்கள் இடம் பெற்றுள் ளதாகவும், அதன் இரண் டாம் கட்டப் பேச்சுக்கள் மிக இரகசியமான முறையில் பல நாள்கள் இடம் பெற்று வருவதாகவும் சுட்டிக்கா ட்டியே நேர்வே ஊடகங்கள் மேற்படிச் செய்தியை வெளி யிட்டன. இந்தப் பேச்சுக்க ளில் வெனிசுலா அரசு சார் பாக வெனிசுலாவின் தக வல்கள் அமைச்சர் ஜோர்ஜ் ரொட்ரிகோஸ், அந்த நாட் டின் பிராண்டா மாகாண ஆளுநர் ஹெக்டர் ரொட் ரிகோ ஆகியோரும், எதிர் கட்சியின் சார்பில் சட்ட மன்ற உறுப்பினர் ஸ்ரா லின் கொன்சலஸ், அரசி யல் ஆலோசகர்களான ஜெரடே பிளைட், பெர்ணா ன்டோ மார்டினஸ் ஆகியோ ரும் பங்கெடுத்தனர் என் றும் நேர்வே ஊடகங்கள் சுட்டிக் காட்டின. ஆயினும் இது குறித்து வெனிசுலா தரப்போ, நேர்வே தரப்போ எந்தவித உத்தியோக பூர்வ அறிவிப்புகளையும் வெளி யிடவில்லை என்பது குறிப் பிடத் தக்கது.



## கப்பல்கள் தாக்கப்படுவதற்கு ஈரான் தான் ஊக்கமளித்தது

*அமெரிக்கா சாடல்; ஈரான் மறுப்பு*





வோஷிங்டன். மே.17
ஐக்கிய அரபு இராச்சியத் தின் புஜைரா துறை முகத் தில் நங்கூரமிட்டிருந்த கப் பல்கள் அண்மையில் தாக் கப்பட்டிருந்தன. ஹவுதி அல்லது சைட் ஆயுததாரி களே இந்தத் தாக்குதலை ஆளில்லா வானுர்திக ளைக்கொண்டு மேற் கோண்டுள்ளனர் எனச் சந்தேகம் தெரிவிக்கப்பட் டது. இந்த ஆயுததாரிகளை ஈரான் தான் ஊக்குவிக்கி றது என அமெரிக்கத் தரப்பி னர் தெரிவித்ததாகப் பன் னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஈரானின் இந்த நடவடிக்கை கப்பல்க ளின் நடமாட்டத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக.



விளங்கப்போகிறது என்றும் அந்தச் செய்தியில் குறிப்பி டப்பட்டிருக்கிறது. ஆயினும் ஈரானிய வெளிவிவகார அமைச்சர் அமெரிக்காவின் இந்தக் குற்றச்சாட்டை மறுத்ததுடன், இந்தத் தாக் குதலை மேற்கொண்டவர் கள் எவர் என்பதும் தங்க ளுக்குத் தெரியாது என்றும் கூறினார்.


## பப்புவா நியூ கினியாவில் நிலநடுக்கம்




போர்ட் மொறொஸ்பே, மே 17
பசுபிக் சமுத்திரத்தில் அமை ந்துள்ள பப்புவா நியூகி னியா நாட்டை அண்மி த்த கடற்ப டுக்கையில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. இது 5.7 ரிக்டர் அளவுகோலில் பதிவாகியது. டாரன் என்ற மலைப் பகுதியில் இருந்து தென்மேற்காக 95 கிலோ மீற்றர்கள் தொலைவில் இதன் அதிர்வுகள் பதிவாகின. இந்த நிலநடுக்கம் 25.3 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டது.
இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் பற்றிய தகவல்கள் வெளியாகவில்லை. பப்புவா நியூ கினியா நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள தீவில் கடந்த செவ்வாய்க் கிழமை 7.5 ரிக்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டிருந்தமை குறிப்பி டத்தக்கது.

# தென் கொரிய அதிபர் – ட்ரம்ப் சந்திப்பு

வோஷிங்டன்,மே 17
அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தென் கொரிய அதிபர் மூன் ஜே இன்னைச் சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளார் என அறிவிப்பு வெளியாகியுள்ளது. அமெரிக்கா - வடகொரியா இடையே நீடித்து வந்த பதற்றம் தணிந்து கொரியத் தீபகற்பத்தில் சுமூகத் தீவு காணப்படும் என நம்பிக்கை ஏற்ப டுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் அமெரிக்கா -வடகொரியா தலைவர்கள் இடையே இரண்டு தடவைகள் நடந்த பேச்சுகள் தோல்வியில் முடிந் தன. வடகொரியா அடுத்தடுத்து ஆயுதச் சோத னைகளை நிகழ்த்தியது. இது கொரியத் தீபகற் பத்தில் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையிலேயே அமெரிக்க அதிபர் ட்ரம்ப், எதிர்வரும் ஜுன் மாதம் தென் கொரிய அதிபர் மூன் ஜே இன்னைச் சந்திக்க உள்ளார் என்று அமெரிக்கத் தரப்பு அறிவித்துள்ளது. இந்தச் சந்திப்பின் மூலம் கொரியத்



தீபகற்பத்தை அணு ஆயுதமற்ற பிரதேசமாக மாற்றுவது தொடர்பாக ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மற்றும் பேச் சுக்கள் நடத்தப்படும் எனக் குறிப்பிடப்படு கின்றது.

# பேச்சுக்கள் தற்காலிக நிறுத்தம்


## சூடான் இராணுவம் அறிவிப்பு
## தொடர்கின்றன போராட்டங்கள்



கார்த்தூம்,மே 17
போராட்டக்காரர்களுடன் நடைபெற்று வந்த பேச்சுக்களைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பதாகச் சூடான் இராணுவம் தெரிவித்தது. சூடானில் தொடர்ந்து வரும் குழப்பங்களுக்கு மத்தியில் போராட்டக்காரர்களுடனான பேச்சும், போராட்டங்களும் பரஸ்பரம் நடந்து வந்தன. சூடான் தலைநகர் கார்த்தூமில் போராட்டக்காரர்களுக்கு எதிராகச் சூடான் இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 9 பேர் காயமடைந்தனர். கடந்த திங்கட்கிழமை போராட்டக்காரர்களுக்கு எதிராகச் சூடான் இராணுவம் நடத்திய தாக்குதலில் 6 பேர் சாவடைந்தனர். இந்த நிலையிலேயே போராட்டக்காரர்களுடனான பேச்சுக்களை நிறுத்துவதாகச் சூடான் இராணுவம் அறிவித்தது. இந்த வன்முறைச் சம்பவங்கள் குறித்து சூடான் இராணுவமும், போராட்டக்காரர்களும் மாறி மாறிக் குற்றம் சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**பின்னணி**
ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சூடானில் 1993ஆம் ஆண்டிலிருந்து அதிபராகப் பதவி வகித்து வந்தவர், உமர் அல் பஷீர்(வயது75). உள்நாட்டுப் போரில் போர்க்குற்றம் இழைத்ததாக அவர்மீது பன்னாட்டு நீதிமன்றில் வழக்கு பதிவாகி, குற்றம் சாட்டப்பட்டது. இவரது ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தினர். இந்த நிலையில், கடந்த டிசம்பர் மாதம் சூடானில் விலைவாசி உயர்ந்தது. மக்கள் அவதிக்குள்ளாகினர். உமர் அல் பஷீரைப் பதவி விலகக்கோரிய போராட்டங்கள் அதிகரித்தன. சற்றும் எதிர்பாராத திருப்பமாக அந்த நாட்டின் இராணுவ அமைச்சர் அவாத் இப்ன் அவுப், கடந்த மாதம் இராணுவத்தின் உதவியுடன் உமர் அல் பஷீரின் ஆட்சியைக் கவிழ்த்து ஆட்சிக்குப் பொறுப்பேற்கும் வகையில் தலைவராகப் பதவி ஏற்றார். ஓரிரு நள்களில் அவர் பதவி விலகினார். சூடானில் ஆட்சிக்கவிழ்ப்பு நடந்தபின்னர் அல் பஷீர் பற்றிய தகவல்கள் எவையும் வெளிவரவில்லை.
ஆட்சியை விட்டு நீக்கப்பட்ட உமர் அல் பஷீர் இரகசிய இடத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், அவர் அண்மையில் கார்த்துமிலுள்ள கோபெர் சிறையில் அடைக்கப்பட்டார்.
தற்போது அந்த நாட்டின் அதிகாரம் சூடான் இராணுவத் தலைமையின் கீழ் உள்ளது. இந்த இடைக்கால அரசு இரண்டு ஆண்டுகள் நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.
ஆனால், சூடான் உடனடியாக மக்கள் ஆட்சிக்குள் கொண்டு வரப்படவேண்டும் என்ற கோரிக்கையுடன் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

# பரப்புரைகளுக்கு ஒரு நாள் முந்திய தடை
# இந்தியத் தேர்தல் ஆணையகம் அதிரடி




புதுடெல்லி,மே 17
7 கட்டங்களாக நடந்து வருகின்ற இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் 7ஆம் கட்டத்துக்கான இறுதியுமான வாக்குப் பதிவு இந்த மாதம் 19ஆம் திகதி நடக்கவி ருக்கிறது. இதில் மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள 9 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடக்கவுள்ளது. இதனால் இந்தத் தொகுதிகளில் இந்த மாதம் 17ஆம் திகதி மாலை 5 மணியுடன் பரப்புரைகள் முடிவடையவேண்டும். ஆனால், இந்தத் தொகுதிகளுக்கான பரப்புரைகளை ஒரு நாள் முன்னதாகவே முடிக்க வேண்டும் என்று இந்தியத் தேர்தல் ஆணையகம் உத்தரவிட்டது. கடந்த செவ்வாய்க்கிழமை கொல்கத்தாவில் நடந்த பா.ஜ.காவின் தலைவர் அமித் ஷாவின் வாகனப் பேரணியில் நிகழ்ந்த வன்முறையைத் தொடர்ந்து பா.ஜ.காவும், திரிணாமுல் காங்கிரசும் தேர்தல் ஆணையகத்திடம் பரஸ்பரம் முறைப்பாடளித்திருந்தன. இந்தப் பின்னணியிலேயேபரப்புரைகளுக்கு அங்கு ஒரு நாள் முந்திய தடை விதிக்கப்பட்டி ருக்கிறது.

# மென்பானங்களுக்கு தமிழகத்தில் தடை

தமிழகம்,மே 17
ஓகஸ்ட்மாதம்15ஆம்திகதியில்இருந்துபெப்ஸிமற்றும்'கொக்க கோலா' ஆகிய பானங்களை விற்பதற்குத் தமிழகத்தில் தடை விதிக்கப்படும்என்றுதமிழகவர்த்தகஅமைப்பின்தலைவர்கள் தெரிவித்தனர். இதுபோன்றே2017ஆம்ஆண்டுமார்ச்மாதம் ஒருசிலவியாபாரிகள்குறித்தபானங்களைவிற்பனைசெய்யப் போவதில்லை என்று முடிவெடுத்திருந்தனர். இந்த முடிவுக்கு இரண்டு காரணங்களை அவர்கள் தெரிவித்தனர். ஒன்று உடல்நலத்துக்குஅவைதீங்குவிளைவிக்கலாம். மற்றொன்று, இந்த நிறுவனங்களால் அதிகளவில் நிலத்தடி நீர் உறிஞ்சப்படுகிறது என்று கூறினர். ஆனால் சில மாதங்களில் மீண்டும் அவற்றை விற்பனை செய்யத் தொடங்கினர். இந்த நிலையிலேயே தற்போது இந்த விற்பனைத் தடை முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த முடிவு குறித்துக் கருத்துத் தெரிவிப்பதற்கு 'பெப்ஸி' நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் மறுத்துள்ளார்.






# இன்றைய நாள்

**மேடம்:** நேர்முகத் தேர்வில் வெற்றி கிட்டும் நாள். நிகழ்காலத் தேவைகளை நண்பர்கள் பூர்த்தி செய்வர். குடும்பச் செலவுகள் கூடும். மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

**இடபம்:** உத்தியோக முயற்சி கைகூடும் நாள். வீடு மாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும். உறவினர்கள் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கொடுப்பர். தொலைபேசி வழித் தகவல்களால் மகிழ்ச்சி கூடும்.

**மிதுனம்:** மதிப்பும், மரியாதையும் உயரும் நாள். தொலை தூரப் பயணம் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சிக்கு மாற்று இனத்தோர் ஒத்துழைப்புச் செய்வர்.

**கடகம்:** நண்பர்கள் நாடி வந்து உதவும் நாள். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். சுற்றத்தார் மூலம் சுபச் செய்தி வந்து சேரும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் வாய்ப்பு கிட்டும்.

**சிம்மம்:** மன நிம்மதி கிடைத்து மகிழ்ச்சி காணும் நாள். பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சிக்கு நண்பர்கள் ஒத்துழைப்புச் செய்வர். தாய் வழியில் தனலாபம் கிடைக்கும்.

**கன்னி:** தனவரவு தாராளமாக வந்து சேரும் நாள். தடைகள் விலகும். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். பிரபல மானவர்களின் சந்திப்பு கிட்டும். வீட்டுத் தேவை களை மாற்று இனத்தவர்கள் பூர்த்தி செய்வர்.

**துலாம்:** விரயங்கள் கூடும் நாள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். பயணங்களால் பலன் கிட்டும். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும். பிரியமானவர்களின் சந்திப்பு உண்டு.

**விருச்சிகம்:** மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெற்று மகிழ்ச்சி காணும் நாள். கொடுத்த வாக்கை காப்பாற்ற நண்பர்கள் உறுதுணைபுரிவர். தொழிலில் முன்னேற்றம் உண்டு. லாபம் எதிர்பார்த்

**தனுசு:** கடமை உணர்வோடு செல்படும் நாள். தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வீட்டை சீரமைப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள். தொழிலில் பங்குதாரர் களோடு இருந்த பகை மாறும்.

**மகரம்:** நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவிற்கு வரும் நாள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். இல்லத்தில் மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும். அடுத்தவர்களுக்காக எடுத்த முயற்சி கைகூடும்.

**கும்பம்:** ஆலய வழிபாட்டில் ஆர்வம் கூடும் நாள். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் ஆதாயம் குறை வாகவே கிடைக்கும். உறவினர் பகை உருவாகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த இலாகா மாற்றங்கள் வந்து சேரலாம்.

**மீனம்:** காலையில் கலகலப்பும், மாலையில் சலசலப்பும் ஏற்படும் நாள். சந்திரபலம் குறைவதால் சிந்தித்து செயல்படுவது நல்லது. சகோதரர்களால் பிரச்சினைகள் ஏற்படலாம். திடீர் இடமாற்றம், திகைப்பை உருவாக்கலாம்.

## டொன்பொஸ்கோ வெற்றி

யாழ்ப்பாணம், மே 17
ஊர்காவற்துறை பிரதேச செயலக விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் ஒட்டு மொத்த புள்ளிகளின் அடிப்படையில் நாரந்தனை டொன்போஸ்கோ இளைஞர்கழக அணி 43 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. அருணோதயா இளைஞர்கழக அணி 23 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (ஒ.23)

## பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், மே 17
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான இரண்டாம் கட்ட போட்டிகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் இ.ராஜசீலன் அறிவித்துள்ளார்.
இன்று வெள்ளிக்கிழமை முதல் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான இரண்டாம் கட்டப் போட்டிகள் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இருப்பினும் தவிர்க்க முடியாத காரணத்தால் இரண்டாம் கட்டப் போட்டிகளும் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே முதலாம் கட்டப் போட்டிகளும் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ.422)

## இறுதிக்குத் தகுதி பெற்ற அணிகள்

கிளிநொச்சி, மே 17
கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் ஆண்களுக்கான இறுதி ஆட்டத்துக்கு பூநகரி பிரதேச செயலக அணியும், கரைச்சி பிரதேச செயலக அணியும் தகுதி பெற்றுள்ளன.
முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த வாரம் இடம்பெற்றன.
முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலக அணியை எதிர்த்து பூநகரி பிரதேச செயலக அணி மோதியது. 4:0 என்ற கோல் கணக்கில் பூநகரி பிரதேச செயலக அணி வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.
மற்றைய அரையிறுதி ஆட்டத்தில் கரைச்சிப் பிரதேச செயலக அணியை எதிர்த்து பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அணி மோதியது. 6:0 என்ற கோல் கணக்கில் கரைச்சிப் பிரதேச செயலக அணி வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ஒ.23)

# சமநிலை தகர்ப்பு உதையில் வென்று இறுதிக்குள் நுழைந்தது யங் ஹென்றிஸ்



யாழ்ப்பாணம், மே 17
சமநிலை தகர்ப்பு உதையில் வெற்றி பெற்ற இளவாலை யங் ஹென்றிஸ் அணி இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.
கம்பர்மலை கலா வாணி சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டடத்துக்குத் தகுதி பெற்றது.
கடந்த திங்கட்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் இரண்டு அணியினரும் தலா ஒவ்வொரு கோலைப் பதிவு செய்தனர். ஆட்டம் சமநிலையில் நிறைவுக்கு வந்தது.
வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ஒ.23)

## வெற்றிபெற்றது சிறிமுருகன்

யாழ்ப்பாணம், மே 17
பொன்னாலை விளையாட்டுக்கழக அணியை 24 ஓட்டங்களால் வீழ்த்தியது மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணி.
குப்பிளான் ஞானகலா விளையாட்டுக்கழகம் நடத்தும் மறைந்த வீரர்கள் நினைவாக, அணிக்கு 8 பேர் பங்கு பற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில், மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொன்னாலை விளையாட்டுக்கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிமுருகன் விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது. மகிழன் 28 ஓட்டங்களையும், பரன், தனுசியன் தலா 18 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பொன்னாலை விளையாட்டுக்கழகம் சார்பில் ரமணன், சுபோசன் இருவரும் தலா ஒவ்வொரு இலக்குகளை வீழ்த்தினர்.
74 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பொன்னாலை விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 49 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. அயன் 14 ஓட்டங்களையும், அஞ்சனன் 8 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சிறிமுருகன் விளையாட்டுக்கழகம் சார்பில் அஜிந்தன் 2 இலக்குகளையும், சுஜீந்தன் ஓர் இலக்கினையும் வீழ்த்தினார். (ஒ.23)

## பெண்களுக்கான ஆட்டத்தில் வெற்றி பெற்றது பூநகரி

கிளிநொச்சி, மே 17
கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையில், பெண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் கண்டாவளை பிரதேச செயலக அணியை வீழ்த்தி பூநகரி பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது.
முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இறுதி ஆட்டங்கள் கடந்த வாரம் இடம் பெற்றன. கண்டாவளை பிரதேச செயலக அணியை எதிர்த்து பூநகரி பிரதேச செயலக அணி மோதியது. 3:1 என்ற கோல் கணக்கில் பூநகரி பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது. (ஒ.23)

## உதயசூரியன் அணி ரேவடியை வென்றது



யாழ்ப்பாணம், மே 18
வல்வெட்டித்துறை வருத்தப்படாத வாலிபர் சங்கம் 5ஆவது ஆண்டாக நடத்தும் வல்வைக்குட்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
தீருவில் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உதசூரியன் ஏ அணியை எதிர்த்து ரேவடி பி அணி; மோதியது. 3:1 என்ற கோல் கணக்கில் உதயசூரியன் அணி வெற்றி பெற்றது. உதயசூரியனின் கோல்களை பிரதீபன் பதிவுசெய்தார். ரேவடியின் கோல்களை சிறிகணேசன் பதிவுசெய்தார். (ம-23)

# ஞானஒளி இளைஞர் கழகம் சம்பியன்



யாழ்ப்பாணம், மே 17
ஊர்காவற்றுறை பிரதேச செயலக இளைஞர் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் கரம்பொன் ஞான ஒளி இளைஞர் கழக சம்மேளன அணி கிண்ணம் வென்றது.
மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் கரம் பொன் ஞானஒளி இளைஞர் கழக சம்மேளன அணியை எதிர்த்து மெலிஞ்சிமுனை இருதயராஜா இளைஞர் கழக அணி மோதியது.
ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் எதுவித கோலையும் பதிவு செய்யவில்லை. ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது.
9:8 என்ற கோல் கணக்கில் கரம்பொன் ஞானஒளி இளைஞர் கழக சம்மேளன அணி வெற்றி பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ஒ.23)

## தாஹிரை ஒப்பந்தம் செய்தது சர்ரே

தென்னாபிரிக்கா அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் இம்ரான் தாஹிர் ஐ.பி.எல். போட்டியில் சென்னை அணிக்காக விளையாடி 26 இலக்குகளைக் கைப்பற்றி இந்த ஐ.பி.எல். பருவ காலத்தில் அதிக இலக்குகளை வீழ்த்திய பெருமையைப் பெற்றார்.
தற்போது இவரை இங்கிலாந்து கவுன்ட்டி கிரிக்கெட் கழக அணியான சர்ரே ஒப்பந்தம் செய்துள்ளது. இதனால் இம்ரான் தாஹிர் ரி/20 பிளாஸ்ட்தொடரில் விளையாட உள்ளார். சர்ரே அணி ஏற்கனவே வெளிநாட்டு வீரர்களில் ஆரோன் பின்ஞை ஒப்பந்தம் செய்துள்ளது.
இது குறித்து தாஹிர் தெரிவிக்கையில்;
சர்ரே அணி இயக்குனர் அலெக்ஸ் ஸ்டீவர்ட் என்னை அழைத்தபோது, நான் எளிதான இந்த முடிவை எடுத்தேன். சர்ரே மிகப்பெரிய கழகம். எனது பங்களிப்பால் சர்ரே அணி கிண்ணத்தை வென்றால், மிகச் சிறப்பானதாக இருக்கும்- என்றார்.

# வீரர்களுக்கு டோனி கொடுக்கும் வினோத தண்டனை

இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் டோனி, பல வெற்றி தருணங்களில் வீரர்களை திறம்பட வழி நடத்தியுள்ளார். அவர் இந்திய அணிக்கு தலைவரான போது ஒரு வலிமையான அடித்தளத்தை நிறுவினார் என அணியின் மனநல பயிற்சியாளர் பாடி ஆப்டன் கூறினார். பாடி ஆப்டன் மேலும் சில சுவாரஸ்யமான தகவல்களையும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்திய அணி கலந்துரையாடல், பயிற்சிக்கு வீரர்கள் சரியான நேரத்துக்கு வராமல் தாமதித்தால், அவர்கள் மீண்டும் இப்படி செய்யக்கூடாது என்பதற்காகவும், குறித்த நேரத்துக்கு வருவது ஒவ்வொரு வீரருக்கும் எவ்வளவு முக்கியம் என்பதையும் உணர்த்த ஒரு முறையை டோனி




கையாண்டார்.

நான் இந்திய அணியில் இணைந்த போது டெஸ்ட் போட்டிகளுக்கு அனில் கும்ப்ளே அணித் தலைவராக இருந்தார். ஒருநாள் போட்டிக்கு டோனி தலைவராக இருந்தார். வீரர்கள் பயிற்சி மேற்கொள்ளும் நேரத்தை ஒழுங்குப்படுத்த வேண்டும் என்ற முனைப்பில் இருவரும் கவனமாக இருந்தனர்.

பயிற்சிக்கான நேரக் கணக்கை அணி தலைவரே தீர்மானிக்கலாம் என நிர்வாகம் முடிவெடுத்தது. அப்போது அனில் கும்ப்ளே இதற்காக ஒரு வழியைக் கண்டறிந்தார். தாமதமாக பயிற்சிக்கு வரும் வீரர் ஒவ்வொருவருக்கும் ரூ.10 ஆயிரம் அபராதம் கட்ட வேண்டும்- என்றார்.

டோனி ஒரு படி மேலே சென்று. ஒரு வீரர் தாமதமாக பயிற்சிக்கு வந்தால் அணியில் உள்ள அனைவரும் ரூ.10 ஆயிரம் அபராதம் கட்ட வேண்டும்- என்றார். டோனியின் உண்மையான பலம் என்பது அவரது அமைதியான குணம் , சூழலுக்கு ஏற்ப செயற்படுவதுதான். இது தான் அவரை வலிமையான தலைவராக வைத்துள்ளது- என்றார்.



புதிய அணியை கட்டமைக்க

# 14 வீரர்களை வெளியேற்றும் ரியல் மட்ரிட் அணி

லா லிகா கால்பந்து கழகமான ரியல் மட்ரிட் மீண்டும் சிறப்பான அணியை கட்டமைக்க 14 வீரர்களை வெளியேற்ற முடிவு செய்துள்ளது.

ஸ்பெயின் நாட்டில் நடைபெறும் லா லிகா கால்பந்து தொடரில் விளையாடும் முன்னணி அணிகளில் ஒன்று ரியல் மட்ரிட். கிறிஸ்டியானோ ரொனால்டோ, பயிற்சியாளர் ஷிடேன் ஆகியோர் வெளியேறிய பின், அந்த அணி தடுமாற ஆரம்பித்தது.

இதனால் ஷிடேனை மீண்டும் பயிற்சியாளராக அந்த அணி நியமித்தது. இறுதிக் கட்டத்தில் அவரால் சிறப்பான அணியை உருவாக்க முடியவில்லை. தற்போது 2018/2019 பருவகாலம் முடிவடைந்துள்ளது. ஒவ்வொரு அணிகளும் வீரர்கள் அதிக விலைகள் கொடுத்து ஏலத்தில் எடுக்கத் தொடங்கியுள்ளன. ரியல் மட்ரிட் மீண்டும் சிறப்பான அணியை கட்டமைக்க 14 வீரர்களை வெளியேற்ற முடிவு செய்துள்ளது. இதில் காரேத் பெலே, ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ், கெய்லர் நவாஸ் ஆகியோர் முன்னணி வரிசையில் உள்ளனர்.

உலகக் கிண்ண வலைப்பந்தாட்ட போட்டியில் பங்குபற்றும்

# இலங்கை அணி பொஸ்வானா பயணம்

இங்கிலாந்தின் லிவர்பூல் உள்ளக விளையாட்டரங்கில் எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள உலகக் கிண்ண வலைப் பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ள இலங்கை வலைபந்தாட்டக் குழாம், முன்னோடி பயிற்சிப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக பொட்ஸ்வானாவுக்கு இந்த மாதம் 21ஆம் திகதி பயணமாகவுள்ளது.

அங்கு பொட்ஸ்வானா தேசிய அணியுடன் 3 போட்டிகளிலும் இளையோர் அல்லது கழக மட்ட அணியுடன் 3 போட்டிகளிலும் விளையாடவுள்ளதாக அணி முகாமையாளரும் இலங்கை வலைப் பந்தாட்டச் சம்மேளனத்தின் முன்னாள் தலைவியுமான ட்ரிக்ஸி நாணயக்கார தெரிவித்தார்.

பொட்ஸ்வானா செல்லும் இலங்கை வலைபந்தாட்ட வீராங்கனைகள் மற்றும் அதிகாரிகளுக்கான விமானப் பயணச் சீட்டுகளை வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாச வைபவ ரீதியாக நேற்று முன்தினம் கையளித்தார்.

இந்த அணிக்கு சத்துரங்கி ஜயசூரய தலைவியாக நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது ஆஸ்திரேலியாவில் தொழில்சார் கழக வலைப் பந்தாட்டப் போட்டிகளில் விளையாடிவரும் தர்சினி சிவலிங்கம் விரைவில் நாடு திரும்பி இலங்கை அணியுடன் பொட்ஸ்வானா பயணமாவார்.


நான்கு குழுக்களில் 16 நாடுகள் பங்குபற்றும் உலகக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டியில் நடப்பு சம்பியன் ஆஸ்திரேலியா, வட அயர்லாந்து, சிம்பாப்வே ஆகிய நாடுகளுடன் குழு 'ஏ'யில் இலங்கை இடம்பெறுகின்றது.


# அலெக்சிஸ் சான்செஸை வாங்குவதற்கு போட்டி

வாரம் ஐந்து லட்சம் பவுண்ஸ் சம்பளத்தில் மான்செஸ்டர் யுனைடெட் அணிக்காக விளையாடி வரும் அலெக்சிஸ் சான்செஸை யுவான்டஸ், இன்டர் மிலன் அணிகள் வாங்குவதற்கு பேச்சுவார்த்தை நடத்துகின்றன.

அலெக்சிஸ் சான்செஸ் சிலி கால்பந்து வீரராவார். இவர் அர்சனல் அணிக்காக விளையாடி வந்தார். அதிலிருந்து மான்செஸ்டர் யுனைடெட் அணிக்கு மாறினார். யுனைடெட் அணி அவருக்கு வாரத்துக்கு ஐந்து லட்சம் பவுண்ஸ் சம்பளமாக வழங்கியது. இருந்தாலும் சான்செஸ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை.

இதனால் ஐந்து லட்சம் பவுண்ஸ் சம்பளம் கொடுக்க வேண்டுமா? என்று மான்செஸ்டர் யுனைடெட் யோசித்து வந்தது. இந்த நிலையில் இத்தாலி சேர்ரி 'ஏ' லீக் அணிகளான யுவான்டஸ் மற்றும் இன்டர் மிலன் அணிகள் அவரை வாங்க விருப்பம் தெரிவித்துள்ளன.



# பும்ரா, விராட் கோக்லி இல்லாமல் இந்திய அணி கிண்ணம் வெல்லாது

மைக்கேல் ஹோல்டிங் தெரிவிப்பு

உலகக் கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் இந்த மாத இறுதியில் ஆரம்பமாகின்றது. இதில் 10 அணிகள் பங்கேற்கின்றன. இதில் இந்திய அணியில் விராட் கோக்லி மற்றும் பும்ரா முக்கிய துருப்புச்சீட்டுக்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் இருவரும் இல்லாமல் இந்திய அணியால் கிண்ணத்தை வெல்ல முடியாது என்று மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் மைக்கேல் ஹோல்டிங் தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; கோக்லி, பும்ரா ஆகிய இரண்டு பெயர்களை நான் குறிப்பிடுகிறேன். இவர்களால் மட்டுமே இந்திய அணிக்கு உலகக் கிண்ணத்தை பெற்றுக் கொடுக்க முடியும். இங்கிலாந்து அணி அதன் சொந்த மைதானத்தில் விளையாடுகிறது. சமீப காலமாக அவர்கள் ஒருநாள் போட்டியில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். அவர்களும் சிறந்த சமபலம் நிறைந்த அணியாகவே உள்ளனர்.

இந்திய அணியும் தொடர்ச்சியாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. அந்த அணியிலும் சிறந்த வீரர்கள் உள்ளனர். நெருக்கடியான நிலையில் எப்படி விளையாட வேண்டும் என்று அவர்களுக்கு நன்கு தெரியும். இரண்டு அணிகளில் ஒன்று உலகக் கிண்ணத்தை வென்றால் நான் ஆச்சரியம் அடைய மாட்டேன்- என்றார்.

**விசேட இறுதி கருத்தரங்கு**
P.உமாசங்கர் & வளவாளர்கள்
மே 25 நடைபெறவுள்ள
"சமய பாட ஆசிரியர் போட்டிப் பரீட்சை"
பொது அறிவு (கல்வியும்)
(9.00 am-11.00 am)
உளச்சார்பு
(11.00 am-2.00 pm)
19.05.2019 ஞாயிற்றுக்கிழமை
"முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களுடன்"
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே 0774696695,0777417143

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**
P.உமாசங்கர் & வளவாளர்களின்
- SLAS,SLEAS (Open/Limited)
- நீதிமன்றபதிவாளர் (Open/Limited)
- புள்ளிவிபரவியலாளர் & அலுவலர்
- வட முகாமை உதவியாளர் (MA) & வருமானவரி
- பாராளுமன்ற உத்தியோகத்தர்
- சிறைச்சாலை / புனர்வாழ்வு உத்தியோகத்தர்
- பட்டதாரி ஆசிரியர்
- சட்டக்கல்லூரி தெரிவு

P.உமாசங்கர் & A.வைகுந்தி
பொது அறிவு, நுண்ணறிவு/ உளச்சார்பு,முகாமைத்துவம், முகாமை உளச்சார்பு
கிரகித்தல்
19.05.2019 ஞாயிறு
9am to 4.00 pm
நவீன மாற்றத்திற்கு அமைய முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களுடன்
தொடர்ந்து பிரதி ஞாயிறு
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
076 166 1986, 077 741 7143, 077 394 2964,071 813 0390

**போட்டிப் பரீட்சை விசேட வகுப்புக்கள்**
முகாமைத்துவ உதவியாளர் வருமானப் பரிசோதகர்
நாளாந்த கட்டணம் 250/-
பிரிவு I
காலை 9.00-1.00
பிரிவு II
ஞாயிறு 9.00-1.00
பிரிவு III
மட்டுப்படுத்தப்பட்ட முகாமைத்துவ உதவியாளர்
ஞாயிறு 9.00-2.00
ஆசிரியர் தெரிவு
சனி, ஞாயிறு, திங்கள் 9.00 - 3.00
பதிவாளர், சட்டமானி, புள்ளிவிபரவியலாளர், SLAS,SLEAS, ஜெலர், புனர்வாழ்வு உத்தியோகத்தர் உட்பட சகல பரீட்சைகளுக்குமான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
தொடர்பு-
0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதியில், மல் நிலையத்திலிருந்து 100m தூக்கி

**ஜயோதா**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1569 | சீட்டிழுப்பு திகதி 16.05.2019
வெற்றி இலக்கங்கள்: 31 47 58 61 G
அடுத்த திங்கட் கிழமைக்கான ஜக்பொட்: ரூ.31, 023, 456 /=

**ராசி** அதிர்ஷ்டம்
திகதி 16.05.2019 | வெற்றி வாரம் 2519 | வர்ணம் கபிலம்
மேடம்
வெற்றி இலக்கங்கள்: 05 23 31 50
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,603,830 /=
17.05.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**அத கோடிபதி**
சீட்டிழுப்பு வாரம்: 612
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.05.16
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,031,170/-
வெற்றி இலக்கங்கள்: 38 48 53 65 Z
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778



இத்தாலி ரென்னிஸ் தொடர்;

# அசரென்கா முன்னேற்றம்

இத்தாலி பகிரங்க ரென்னிஸ் போட்டி ரோம் நகரில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இரண்டு முறை சம்பியனான உக்ரைன் நாட்டு வீராங்கனை எலினா ஸ்விடோலினா, அசரென்காவை எதிர்கொண்டார். மழையால் காரணமாக தடைப்பட்டு நடந்த இந்த ஆட்டத்தில் அசரென்கா 4:6, 6:1, 7:5 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

வெற்றி குறித்து அசரென்கா தெரிவிக்கையில்;

இந்த ஆட்டம் வியக்கத்தக்க வகையில் இருந்தது. மழையால் ஆட்டம் பல முறை தடைப்பட்டு நடந்தது. ஒட்டுமொத்தத்தில் இது சிறந்த போட்டியாக காணப்பட்டது. இந்தப் போட்டித் தொடரில் இன்னும் சிறப்பாக செயற்பட முயற்சிப்பேன்-என்றார்.

# மோர்கனுக்கு போட்டித் தடை

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் 5 ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் 3 போட்டிகள் முடிவடைந்த நிலையில் இங்கிலாந்து அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. ஒரு போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது.

3ஆவது போட்டியில் இங்கிலாந்து அணி அபாரமாகத் துடுப்பெடுத்தாடி இமாலய இலக்கை விரட்டியடித்து வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் நிர்ணயிக்கப் பட்ட நேரத்துக்குள் பந்து வீசி முடிக்கவில்லை என்ற காரணத்தால் இங்கிலாந்து அணித் தலைவர் மோர்கனுக்கு ஒரு போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இங்கிலாந்து அணியின் ஏனைய வீரர்களுக்கும் போட்டி ஊதியத்திலிருந்து 20 சதவீதம் தண்டம் விதிக்கப்பட்டது.

**காணி விற்பனைக்கு**
நாவற்குளியில் A9 வீதியிலிருந்து 200M உட்புறமாக ஒழுங்கைக்குள் 5பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விலை நேரில்
077 629 3710/021 221 3536
CS 25377 (14.17)

**சிவப்பு மணல் விற்பனைக்குண்டு**
எம்மிடம் வீட்டு அத்திவாரங்கள் நிரப்புவதற்கும் பள்ள நிலங்களை சீர் செய்வதற்கும் உகந்த சிவப்பு மணல் விற்பனைக்கு உண்டு.
தேவைப்படுவோருக்கு டிப்பர் மூலம் தங்கள் இடத்துக்கே கொண்டுவந்து தரமுடியும்.
T.P 077 790 6291

**Spoken English With Grammer**
(With Canadian Institute Cartificate)
O/L , A/L எழுதிய இளைஞர், யுவதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்ல விரும்புவோர் அனைவருக்குமான பயன்தரு வகுப்புக்கள் (சிறு சிறு குழுக்களாகவும் தனிப்படவும் பயிற்சிகள் வழங்கப்படும்).
புதிய பிரிவுகள் ஆரம்பம் : (சனிக்கிழமை , வியாழக்கிழமை பி.ப 3.00 மணி)
ஒவ்வொரு பிரிவுகளிலும் 15 பேர் மட்டும் அனுமதிக்கப்படுவதனால் பதிவுகளுக்கு இன்றே முந்துங்கள்.
CTHI
உப்புமடம் சந்தி.K.K.S வீதி கோண்டாவில்
077 104 1923
021 314 6171

QUEST INTERNATIONAL UNIVERSITY



**Dual MBA**
Leading to Doctor of Business Administration (DBA)
Sri Lanka UGC Recognized

**MBA**
- முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை தொழில்சார் கல்வித் தகைமையா.....?
- வர்த்தக ரீதியான தந்திரோபாயங்கள் உங்கள் வாழ்க்கையை உயர்த்திடும்.
- இரட்டைத் தகைமை MBA என்றும் உங்கள் முன்னேற்றத்துக்கு உந்து சக்தி...

**MBA in**
Finance
Marketing
HR

Duration Approximately 12 to 18 Months

Why Chooce Us?
- Industrial visit to foreign country
- Flexible lecture time and mood
- Well experienced and qualified panel of lecturers

BLC CAMPUS
For more information: 0777 174 443
23/1, 4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443
E-mail: info@blccampus.com
Web: www.blccampus.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெற் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.